சக்தி

மாத வெளியீடு



சித்திரபானு ௵
மாசி௴

-/4

கதைகள்

அஞ்சலி
மந்திரச் சொக்காய்
மாதிரி மனிதன்
வாதப் புலி

★

வரலாறுகள்

க்பாஷின் சூழ்ச்சி
கார்ல் மார்க்ஸ்

★

கட்டுரைகள்

அழகு
ஒரு காதல் கடிதம்
வெற்றிக்கு வழி

★

பாடல்கள்

பூக்காரி
சொற்பன உலகம்
கிழவி

★

குறிப்புக்கள்

உடம்பும் மருந்தும்
புத்தக உலகம்
கதம்பம்
காலச் சுழல்
விசித்திரம்

விரைவில் வெளிவரும்

கார்ல் மார்க்ஸ்

(வாழ்க்கை வரலாறு)

வெ. சாமிநாத சர்மா எழுதியது

இன்று ருஷ்யர்கள், ஜெர்மனியின் சேனு பலத்தை வீரத்துடன் எதிர்த்து நிற்கிருர்களென்று சொன்னல், அதற்கு அடிப்படையான காரணம் அவர்கள் மார்க்ஸின் அடிச்சுவடுகளை ஒழுங்காகப் பின்பற்றிக் கொண்டு வருவதுதான்.

மார்க்ஸ் ஒரு பெரிய சிந்தனையாளன். இவனை "நடக்கும் அகராதி" என்று, அவனுடைய சமகாலத்தவர் அழைத்திருக்கிருர்கள். அவனுடைய "காபிடல்" என்ற நூல், அறிஞர்களுக்கு இன்னும் ஒரு சிக்கலான பிரச்னை யாகவே இருக்கிறது.

இந்த நூலில், மார்க்ஸின் இளமைப் பருவம், பத்திரிகாசிரியனுயிருந்து அவன் பட்ட கஷ்டங்கள், அவனுடைய மனைவியின் பெருந்தகைமை, ப்ரெடரிக் எஞ்செல்ஸுக்கும் அவனுக்கும் இருந்த நெருங்கிய தொடர்பு, அவன் வகுத்த சமதர்ம சித்தாந்தத்தின் விளக்கம் முதலிய பல புதிய அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை: ரூ. 2-8-0

சக்தி காரியாலயம்

வடக்கு வெளி வீதி, மதுரை

"எச். எம். வி." ரிகார்டுகளில்

இசைவாணியின்

புதிய வெளியீடு

★

ஸ்ரீமதி எம். எஸ்.
ஸுப்புலக்ஷ்மி

No. 18680 { என்ன'கானு ராம பஜன
பந்துவராளி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
★
5 MAR 1943
MADRAS

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"எச். எம். வி." எஃகு ஊசிகள்
சில்லறையில் விற்க நிர்ணயித்த விலை 200
ஊசிகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-8-0 மட்டுமே

வெளிவந்துவிட்டது

வெ. சாமிநாத சர்மா எழுதிய

சோவியத் ருஷ்யா

ருஷிய சரித்திர வரலாறு, முடியரசின் மறைவு, குடியரசின் தோற்றம், சமதர்மம் என்றால் என்ன ?, சமதர்மக் கட்சி, சோவியத் அரசியல் அமைப்பு, பொருளாதாரத் திட்டம், விவசாயம் - தொழில், பெண்ணுரிமை, கல்வி - கலை, சுகாதாரம் - ஓய்வு, அந்நிய நாட்டுக் கொள்கை, புதிய நாகரிகம் முதலியவை விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

அழகிய படங்கள் — காலிகோ பைண்டு

விலை ரூ. 3—8—0 தபாற் செலவு தனி

முன்பணம் அனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றி அனுப்பிக்கப்பெறும்

சக்தி காரியாலயம், மதுரை

OFFICE OF THE REGISTRAR
5 MAR 1943
MADRAS

நெடுநாள் எதிர்பார்த்தது !

போரும் காதலும்

WAR AND PEACE

முதற் பாகம்

ஆசிரியர் :

லியோ டால்ஸ்டாய்

மொழிபெயர்ப்பு :

பொ. திரிகூடசுந்தரம், M.A., B.L.

உலகத்திலேயே எக் காலத்தும் தலைசிறந்த
நாவல் என்று அறிஞர்களால்
போற்றப்பெறுவது

விலை ரூ. 3-0-0 தபாற் செலவு வேறு

முன்பணம் அனுப்புவோருக்குத் தபாற் செலவின்றி
அனுப்பிக்கப்பெறும்

சக்தி காரியாலயம்
வடக்கு வெளி வீதி :: மதுரை

சித்திரபானு
மலர் 7

சக்தி

மாசி
இதழ் 6

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

நமது பிரார்த்தனை

மகாத்மா காந்தியும், காங்கிரஸ் கமிட்டியாரும் சத்தியாக்கிரகப் போர் தொடங்க முடிவு செய்தார்கள். ஆனால், தொடங்கவில்லை. தொடங்கு முன்பாகவே அவர்களைச் சிறைப்படுத்தி விட்டார்கள் சர்க்கார். அதன் பின்னே, தேசத்தில் பலாத்கார அலங்கோலங்கள் நிகழ்ந்துவிட்டன. அவற்றிற் கெல்லாம் பொறுப்பு, காந்தியும் காங்கிரஸுமே என்று இந்திய சர்க்காரும், பிரிட்டிஷ் சர்க்காரும் ஓயாமல் பிரசாரம் செய்து வந்தார்கள். சாட்சியமும் தங்களிடம் இருப்பதாய்ச் சொன்னார்கள். ஆனால், பகிரங்க விசாரணை கிடையாது. சிறைக்குள் இருப்பவர்களால், சர்க்காருக்குப் பதில் எப்படிச் சொல்ல முடியும்?

"நாங்கள் பொறுப்பல்ல" என்று, வைஸிராய்க்கு மகாத்மா கடிதம் எழுதினார். "நீங்களே பொறுப்பு" என்று பதிலளித்து விட்டார் வைஸிராய். அந்தக் கடிதப் போக்குவரத்து அப்போது வெளியே வரவில்லை. மாதங்கள் சென்றன. வெளியே இங்கும், பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், 'பலாத்காரத்துக் கெல்லாம் காங்கிரஸும் காந்தியுமே பொறுப்பு' என்ற ஒரு தரப்புப் பிரசாரம் ஓயாமல் நடந்துகொண்டே இருந்தது. அஹிம்சா தர்மத்திலே அழியா நம்பிக்கை கொண்டிருக்கும் காந்திஜிக்கு, இதைப் பகிரங்கமாய் மறுக்கச் சந்தர்ப்பமோ வசதியோ இல்லை. உபவாசத் தவத்தின் மூலம், "மகா உன்னத நீதிபதியிடம் (கடவுளிடம்)" முறையிட்டுக்கொள்ளத் தீர்மானித்தார். தவத்திலும் இறங்கி விட்டார். உடனே எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களும் வெளியாயின.

ஆனால், சர்க்காரின் பிடிவாதம் தீரவில்லை. தேசத்திலுள்ள பல பிரமுகரும் பல தரப்பினரும் மன்றாடியும், காந்திஜியை விடுதலை செய்ய, சர்க்கார் சம்மதிக்கவில்லை. 'காந்தியும் காங்கிரஸுமே சகல பலாத்காரத்துக்கும் பொறுப்பாளிகள்; அதற்கு அவர்கள் மன்னிப்புக்கேட்டுக் கொள்ளாத வரையில், அவர்களை விடுதலை செய்ய முடியாது' —இதுவே சர்க்காரின் மனப்போக்கு. யார் பொறுப்பு என் பதை நடுநிலைமை கொண்ட ஒரு நீதிஸ்தலம் அன்றோ விசாரித்துத்

அந்த உபவாசம்

புனா ஒப்பந்தத்துக்குப் பின், உயர் ஜாதி ஹிந்துக்களின் மனம்மாறவில்லை என்பதற்காக, மகாத்மா காந்தி 21 நாள் உபவாசம் ஒன்றைக் கைக்கொண்டார். அதுபற்றி ஜி. டி. பிர்லா தரும் விவரம் இது :

“1933 மேமீ 8உ உபவாஸம் தொடங்கி, 29உ ஆண்டவனருளால் வெற்றியுடன் முடிவுபெற்றது. உபவாஸம் முடிந்து பல தினங்கள் சென்ற பின்னர், ‘இந்த உபவாஸம், நான் இருபத்தொரு தினங்கள் ஓயாது நடத்திய பிரார்த்தனையாகும். இதனால் நான் பெற்ற நற்பயனை இப்பொழுது உணர்கிறேன். இந்த உபவாஸத்தினால் வயிறு உணவில்லாம லிருப்பதோடு, எல்லா இந்திரியங்களும் உணவின்றி யிருக்கின்றன. கடவுளிடம் மனம் ஐக்கியமாகி விட்டால், உடலின் செயல்களெல்லாவற்றையும் நாம் மறந்துவிடுகிறோம். இந்த நிலை ஓயாத முயற்சி, வைராக்கியம் இவைகளினாலேயே கிட்டும். ஆகையால், இத்தகைய உபவாஸத்தை ஒரு விதமான கலப்பற்ற கடவுள் பக்தியென்றுதான் கூறவேண்டும்’ என்று காந்தியடிகள் சொன்னார்.”

தீர்க்க வேண்டும் என்கிறார் சட்ட நிபுணர் சாப்ரூ. வாதியும், சாட்சியும், நீதிபதியும் தாங்களேயாகச் சர்க்கார் நடந்துகொள்ளலாமா என்று கேட்டால், பதில் இல்லை. தேசமெல்லாம் காந்தியை விடுவிக்க ஒரு முகமாக வேண்டியும், வைஸிராய் கைவிரித்துவிட்டார். ‘அதுவே சரி, அதுவே சரி’ என்று சர்ச்சிலும் அமெரியும் தாளம் போட்டு விட்டார்கள்.

இந்நிலையில், உபவாசத்திலே நெருக்கடியான நிலைமைகள் நேரிட்டன. தேசமெல்லாம் கவலை நிறைந்தது. ஆனால், மெல்ல அந்த நிலைகளை மகாத்மாஜி கடந்து விட்டார் இன்னும் இரண்டொரு தினங்கள், நமக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாய்த்தான் கழியும். மகாத்மாஜி, தேசத்துக்கு மட்டிலுமல்ல, உலகத்துக்கே செல்வமாவார். ‘பலாத்காரத்துக்குப் பொறுப்பு யார்? இந்திய சுதந்தரப் பிரச்னையின் கதி என்ன?’ என்பவை போன்ற கவலை யெல்லாம் நமக்கில்லை. ‘மகாத்மாவின் உயிர் காப்பாற்றப்படவேண்டும்’ என்ற ஒன்றே நம் கவலை. அதற்கு மனிதரிடமெல்லாம் இட்ட முறையீடுகள் வீணாயின. ஆகையால், இனி நமக்குப் புகல் ஆண்டவனே. ‘பகவானே! எங்கள் காந்தியைக் காப்பாற்றித் தாரும்’—இதுவே இன்று நமது பிரார்த்தனை.

★

‘சக்தி’யின் விலை மாறுதல்

வரவர, ‘சக்தி’க்கு அன்பர்களின் பேராதரவு கிடைத்து வருகிறது. அந்த ஒரே காரணத்தினால்தான் இந்தச் சிரமமான காலத்திலும் ‘சக்தி’யை விடாமல் நடத்திவர, எங்களுக்கு ஊக்கமும் ஆசையும் நிறைந்திருக்கிறது. யுத்தத்துக்கு முன்னே மூன்றணா விற்ற காகிதம் இப்போது 1—8—0 ரூபாய் வரையில் கொடுக்க முன் வந்தாலும் எளிதில் கிடைக்கவில்லை. இத்தனை கஷ்டத்திலும் ‘சக்தி’யை நிறுத்தாமல் நடத்துவதற்கு, வாசகர்களும் ஓரளவு சுமையைப் பங்கிட்டுக்கொள்ளத் தயங்கமாட்டார்களென நிச்சயமாக நம்புகிறோம். ஆதலால், அடுத்த மாதம் முதல் ‘சக்தி’ தனிப் பிரதியின் விலையை எட்டணாவாகவும், அதற்கேற்றபடி சந்தா விகிதத்தையும் உயர்த்தத் தீர்மானித்திருக்கிறோம். ஆனால்; இன்னும் சிறப்பான முறையிலும், இந்த மாதத்தைவிட அதிகப் பக்கங்களுடனும் வெளிவரும். அன்பர்கள் ஆதரிக்க வேண்டுகிறோம்.

காலச்சுழல்

போட்ட பணமும் போவதா?: பர்மாவிலிருந்த இந்தியர் பலர், இந்திய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் இன்ஷியூர் செய்திருந்தார்கள். ஜப்பானிய அக்கிரமப் படையெடுப்பால், தொழிலை விட்டு, பொருளை யெல்லாம் போட்டது போட்டபடி போட்டுவிட்டு, அவர்கள் இங்கே ஓடிவந்து விட்டார்கள். அவர்களில் ஏதோ மிகச் சிலர்தான் தங்கள் இன்ஷியூரன்ஸ் பாலிஸிக்குத் தொடர்ந்து பணங் கட்டக் கூடியவர்களாயிருப்பார்கள். மற்றவர்கள்பாடு, பெரும்பாலும் பிழைப்புக்கே கஷ்டமாயிருக்கும். இந்நிலையில், அவர்கள் இதுவரையில் கட்டிய இன்ஷியூரன்ஸ் பணத்தை இழக்காமலிருக்கவேண்டுமானால், இன்னும் தொடர்ந்து கட்டிக் கொண்டேயிருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றனவாம், அநேகமாக எல்லா இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளும். யுத்தம் காரணமாக ஓடிவந்து கஷ்டத்துக்குள்ளானவர்களுக்கு இந்த அவதியிலிருந்து ஒரு பரிகாரம் செய்து கொடுப்பது, சர்க்காரின் கடமையாகும். அவர்கள் ஏற்கனவே போட்ட பணத்தையாவது இழக்காமலிருக்கும்படி செய்வதுதான் தர்ம நியாயமாகும்.

*　　　　*

ரயில் வருமான ஜாலம்: இந்திய ரயில்வே பட்ஜெட்டை மத்தியச் சட்டசபைகளில் சமர்ப்பித்த சர்க்கார் அங்கத்தினர்களின் பேச்சு, பரம உற்சாகமாகவே யிருக்கிறது. யாரும் எதிர்பாராத அவ்வளவு அமோகமாக இந்திய ரயில்வே வருமானம் அதிகரித்து விட்டதாம். காரணம் இதுதான்: மாதம் ஒன்றுக்கு, துருப்புகளைச் சுமந்து கொண்டு 400 ஸ்பெஷல் டிரெயின்கள் செல்லுகின்றன. சாதாரண காலத்தில், ஒரு வருஷத்தில் 5,00,000 டன் சாமான்கள்தான் துருப்புகளுக்காக ரயிலில் செல்லும்; இப்போதோ 1,50,00,000 டன்கள் ராணுவச் சாமான்கள் போக்குவரத்தாகின்றன. இதற்கெல்லாம் பணங்கொடுப்பது யார்? சர்க்கார்தான்; அதாவது, இந்தச் செலவெல்லாம் பொது பட்ஜெட்டில் ராணுவச் செலவாக உருவெடுக்கும். சர்க்காரின் இந்தக் கையிலிருந்து அந்தக் கைக்குப் பணத்தை மாற்றும் ஜால வேடிக்கைதான் இந்த அபாரமான ரயில்வே வருமானம். ஆனால், எல்லாம் நேரடியான அல்லது மறைமுகமான வரிச் சுமையாகப் பொது மக்களின் தலையிலே வந்து சுமர்வது மட்டில் நிச்சயம்!

*　　　　*

லீக்காரர் கண் திறக்குமா: 'பாகிஸ்தானில் நான் வாழேன்' என்று, குவாஜா அஹமது அப்பாஸ் என்னும் முஸ்லிம் எழுத்தாளர் 'ஸவுண்ட்' என்னும் பத்திரிகையில் ஓர் அருமையான கட்டுரை எழுதியுள்ளார். ஏன்? அங்கங்கே ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒரே பாஷை பேசுகிறார்கள்; ஒரே கலைகளும், ஒரே அரசியலும், ஒரே சமூக வாழ்க்கையும், ஒரே பொருளாதார நிலையும் உடையவர்களா யிருக்கிறார்கள். இப்படி ஒற்றுமையுடையவர்களைப் பிரிப்பது பாகிஸ்தான். "இந்திய முஸ்லிம்களில் நான் ஒருவனே மிச்ச மிருந்தாலும்,

அந்தப் பாகிஸ்தானில் வாழமாட்டேன்" என்று தீரமுழக்கம் செய்கிறார் அப்பாஸ். உள்நாட்டு முஸ்லீமான அவர்தான் அப்படிச் சொல்லுகிறார் என்றால், துருக்கியிலிருந்து வந்து இந்தியாவைச் சுற்றிப் பார்த்த முஸ்லீம் பத்திராசிரியர் கோஷ்டியார் என்ன சொல்லுகிறார்கள்? "ஹிந்து, முஸ்லீம் தலைவர்கள், பத்திரிகை அறிக்கைகளிலே பரஸ்பரம் அவநம்பிக்கை காட்டுகிறார்கள். ஆனால், சாதாரண வாழ்க்கையிலே, ஹிந்து முஸ்லீம்களிடையே அந்த அவநம்பிக்கையை நாங்கள் காணவில்லை" என்று அந்தக் கோஷ்டியின் தலைவர் நண்பர் அட்டே கூறுகிறார். இப்படி ஒற்றுமை கொண்ட ஹிந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிக்க-இந்தியாவைச் சிதைத்துச் சீரழிக்க லீக்கர்கள் எதற்காக முயற்சிக்கிறார்கள்? அதனால் யாருக்கு லாபம்? லீக்கர்களின் கண் திறக்காதா?

* *

காமதேனு கந்தல்துணி யாகிறது: ராஜாஜி, பிடித்த பிடியை விடவேமாட்டார். பாகிஸ்தானை வற்புறுத்த, புதுப்புது உதாரணங்களை அவர் கூறிவருகிறார். பாகிஸ்தானை எதிர்க்கும்போது காமதேனுவாக—பால் பசுவாக—அவருக்குக் காட்சியளித்த இந்தியா, இப்போது கந்தல்துணி யாகிவிட்டது! 'நடுவே நைந்த கந்தல் துணியை அப்படியே விடுவதால், அது மேலும் சிதையுமே தவிர, ஒருமை எப்படி யிருக்கும்? அதை இரண்டாய்க் கிழித்து மூட்டுவதே அதன் ஒருமையைக் காப்பாற்றச் சிறந்த வழியாகும்' என்று கூறுகிறார் ராஜாஜி. தேசம் வெறும் கந்தல்துணியல்ல; தேசம் என்பது பூமி, மண். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது. இந்த உதாரணம் ராஜாஜிக்கு இப்போது புரியுமா? சந்தேகம் தான். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல, ஏதோ மனமருட்சி ஏற்பட்டிருக்கும் ராஜாஜிக்கு, காலத்துக்கேற்ற கோலந்தானே தோன்றும்! விபரீத உதாரணங்கள் அவர் நாவிலிருந்து புறப்படுவதில் என்ன ஆச்சரியம்?

* *

புதிய போர் முனை எப்போது: ஆஸ்திரேலியா கெஞ்சுகிறது; சீனா கதறுகிறது. கிழக்கே ஜப்பானிய அக்கிரமத்தைத் தடுத்து விரட்ட, பிரிட்டன் கடாட்சம் புரிய வேண்டு மென்பதுதான் அவற்றின் வேண்டுகோள். ஆனால், ஐரோப்பியப் போரை வெற்றிகரமாய் முடித்த பின்னரே, கிழக்கே திரும்பமுடியும் என்று தெள்ளத் தெளிய விளக்கிவிட்டார் மிஸ்டர் சர்ச்சில். அதுதான் போகட்டும். ஐரோப்பாவிலே தன்னந் தனியாய் ஹிட்லரின் அதிக்கிரமத்தை எதிர்த்து, போரின் முழுப் பாரத்தையும் சுமந்துவரும் ருஷ்யா, ஆரம்பமுதல் இன்றுவரை இரண்டாம் போர்முனையை எதிர்பார்த்துக்கொண்டே யிருக்கிறது; பல முறை அந்தக் கோரிக்கையைப் பகிரங்கமாகவும் செய்துகொண்டது. இதோ, அதோ என்று பிரிட்டனும் அமெரிக்காவும் அதைச் சமாதானம் செய்துகொண்டே வருகின்றன. யுத்தத்தின் போக்கு - ஐரோப்பாவிலும் சரி, ஆசியாவிலும் சரி—திரும்ப வேண்டுமானால், அந்த இரு காரியங்களும் (இரண்டிடங்களிலும் இரண்டாம் போர்முனைகள்) ஏற்பட்டுத் தீரவேண்டும். அது எப்போது? சர்ச்சில் அறிவாரா, அல்லது கடவுள்தான் அறிவாரா?

★

கதம்பம்

'ஹிந்துஸ்தான் ஹமாரா' : ஸர் முகம்மது இக்பால் பாடிய 'எங்கள் ஹிந்துஸ்தான்' என்ற பொருள் கொண்ட இந்த இந்திய தேசியப் பாட்டு, இப்போது ஆகாயத்தில் ஓயாமல் ஒலி செய்ய ஆரம்பித்திருக்கிறது. ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, பிரிட்டன் எல்லா நாடுகளின் ரேடியோக்களுக்கும் அதிலே மோகம் விழுந்திருக்கிறது. 'ஸவுண்ட்' என்ற பத்திரிகை இதைப்பற்றி ரஸமாய் எழுதியிருக்கிறது ஒரு குறிப்பு:

"ஹிந்துஸ்தான் ஹமாரா என்று பெர்லினிலிருந்து நாஜிகள் குலைக்கிறார்கள்.

"ஹிந்துஸ்தான் ஹமாரா என்று செய்கோனிலிருந்து ஜப்பானியர் ஊளையிடுகிறார்கள்.

"ஹிந்துஸ்தான் ஹமாரா என்று ரோமிலிருந்து பாஸிஸ்டுகள் உறுமுகிறார்கள்.

"ஹிந்துஸ்தான் ஹமாரா என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் தாஸர்களும் ஓலமிடுகிறார்கள்.

"ஹிந்துஸ்தான் மட்டிலுமே மௌனம் சாதிக்கிறது."

* *

பிரார்த்தனை : மகாத்மா காந்தியின் உயிருக்காகப் பிரார்த்தனை செய்வது, பிரார்த்தனையைத் தவறாய் உபயோகிப்பதல்லவா என்கிறார் ஒரு விதண்டாவாதி. கீழே காணும் இரண்டு சம்பவங்களையும் அவர் கேட்டால், என்ன சொல்லுவாரோ?

ஓர் அமெரிக்க அரசியல்வாதிப் பாதிரியார் ஒரு முறை கடவுளிடம் செய்த பிரார்த்தனை இது: "லஞ்சம் வாங்குவோரை ஒழித்து, நாட்டை வளம்பெற வளர்த்து, மக்கள் க்ஷேமமாய் வாழச் செய்யும் ஒரு கவர்னரை எங்களுக்கு அருளும். இப்படியெல்லாம் சுற்றி வளைத்துச் சொல்லி என்ன பயன், ஆண்டவனே! ஜார்ஜ் டபிள்யூ. பிரிக்ஸ் அவர்களையே எங்களுக்கு கவர்னராய்த் தந்துவிடும். ஆமென்!"

டீன் இஞ்ஜ் என்னும் பிரபல ஆசிரியருக்கு வந்த ஓர் அநாமதேயக் கடிதமும் ரஸமானதுதான்: "நீங்கள் சாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன். வேறு இருவர் விஷயத்தில் நான் வெற்றி பெற்றுமிருக்கிறேன்."

* *

நாய் வீரர்கள் : அமெரிக்காவிலே ஒரு நாய்ப் பட்டாளம் தயாராகி வருகிறதாம். மூன்று பேர்களையோ அதற்கு மேற்பட்டவர்களையோ கடித்த வெறி நாய்களுக்கெல்லாம் நியூயார்க்கில் இப்போது யோகம் வந்திருக்கிறது. அந்த நாய்களைக் கொல்லுவதில்லையாம். ராணுவத்தின் நாய்ப் பட்டாளத்துக்குக் கொண்டுபோய் விடுகிறார்களாம். இம்மாதிரி லட்சத்து 25 ஆயிரம் நாய் வீரர்களைச் சேர்ப்பதில் அமெரிக்க அதிகாரிகள் முனைந்திருக்கிறார்களாம். யுத்த களத்திலே இந்த நாய் வீரர்கள், ராட்சஸ நாஜிகள்மீது பாய்ந்து, அவர்

களைக் கடித்துக் குதறி விரட்டி விடும் என்பதில் தடை யில்லை. ஆனால், அப்படி மரியாதையாய் அவைகள் புத்தகளத்துக்குப் போய்ச் சேரவேண்டுமே, வழியிலே லீலை புரிந்து விடாமல்; அதுதான் நம் கவலை.

* *

இட்டலிக்கு ஆபத்து: பம்பாயில் ஹோட்டல்களில் அரிசி மாவால் செய்யும் இட்டலி முதலிய பலகாரங்களைத் தயார் செய்யலாகாது என்று சர்க்கார் ஒரு தடை உத்திரவு விதித்திருக்கிறார்களாம். "இதனால்தான் அகில இந்தியப் பத்திராசிரியர் மகாநாட்டின் கமிட்டிக் கூட்டங்கள் டில்லியிலேயே நடக்கின்றன போல் இருக்கிறது. அங்கே தென்னிந்திய போஜன விடுதி நாராயண ஐயர், எவ்வளவு இட்டலிகளை வேண்டுமாயினும் பத்திராசிரியர்களுக்கு இலவச சப்ளை செய்ய எப்போதும் தயாராயிருக்கிறார் அல்லவா?" என்று முஸ்லீம் லீக் பத்திரிகையான 'டானி'ல் போத்தன் ஜோசப் எழுதியுள்ளார். இந்த ரகஸ்யம் டில்லி சர்க்காருக்குத் தெரிந்து, ரகஸ்ய உத்தரவுகளைப் பத்திராசிரியர்களுக்குச் சரமாரியாய்ப் போட்டுக் கொண்டே யிருப்பதைவிட, இட்டலி சாம்பாரைத் தடுப்பதே மேல் என்று அவர்களும் நினைத்து விட்டால்.........!

* *

டாக்டரை ஏமாற்றிய ஓவியர்: அரிய சித்திரக்காரர்களைப் பற்றி ஆச்சரியமான கதைகளுண்டு. அவைகளிலே சிறந்த ஒன்று கோயா என்னும் ஓவியரைப் பற்றியது. அவருடைய சித்திர சாலைக்கு அழகான பெண்களெல்லாம் அடிக்கடி ஓடிவந்து விடுவார்களாம். அப்படிப்பட்ட பெண்களில் ஒருத்தி ஒரு 'டியூக்' என்ற கோமகனின் மனைவியாவாள். ஒரு நாள் அவள் வருத்தத்துடன் கோயாவிடம் வந்து, "என் கணவன் அயலூருக்குப் பிரயாணம் செய்ய, என்னைக் கூப்பிடுகிறார். போனால் உமது சித்திர சாலையைத் தினமும் பார்க்க முடியாதே, என்ன செய்வேன்?" என்று ஏங்கினாள். உடனே, கோயா, அந்தச் சீமாட்டியின் காலிலே பிரமாதமான காயம் போல் ஒரு வர்ணச் சித்திரம் தீட்டிவிட்டார். கோமகன் அதை ஒரு டாக்டரிடம் காட்டிய போது, நிஜமான காயம் என்றே நம்பிய அந்த டாக்டர், "ஒரு மாத காலம் இந்த அம்மாள் எவ்விதப் பிரயாணமும் செய்யக் கூடாது" என்று முடிவு கூறி விட்டார்!

* *

எதை நம்புகிறீர்கள்: அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு காலத்தில் வக்கீலாயிருந்தார். ஒரு சமயம் அவருக்கு எதிர்த்தரப்பில் மகா வாக்குச் சாதுர்யமுள்ள பிரபல வக்கீல் ஒருவர் ஆஜராகி, வெகுநேரம் வர்ஷதாரைபோல் பொழிந்து வாதம் செய்தார். அவரது பேச்சு முடிந்ததும், ரூஸ்வெல்ட் எழுந்தார். வாதமே செய்யவில்லை. ஜூரர்களைப் பார்த்து, சுருக்கமாகப் பின் வருமாறு சில வார்த்தைகளே கூறினார்: "கனவான்களே! சாட்சிகளைக் கேட்டீர்கள். அந்தச் சாட்சிகளை நம்பாமல், பிரசங்க வன்மை மிக்க என் நண்பரின் பேச்சை நம்பினீர்களானால், அவருக்குச் சாதகமாய்த்தான் நீங்கள் முடிவு செய்ய வேண்டும்." ரூஸ்வெல்ட் தரப்புக்குத் தான் சாதகமாய்த் தீர்ப்பாயிற்று!

★

கார்ல் மார்க்ஸ் — வெ. சா.

மார்க்ஸ் இறந்து சரியாக 60 வருஷங்க ளாகின்றன. இதே மார்ச்சு மாதந்தான்—1883-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 14-ஆம் தேதி லண்டனில் இவன் கடைசி நித்திரைக்குப் போனன். இதனல் சிந்தனை உலகத்துக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. ஆனல், அந்த நஷ்டத்துக்கு ஈடாக உலகத்து ஏழை மக்கள் கண் விழித்துக் கொண்டார்கள். இவனுடைய அடுத்த தலைமுறைக் காலத்திலேயே இவன் வகுத்த தத்துவம் நடைமுறைத் தராசில் நிறுக்கப்பட்டது. அப்பொழுது தான் உலகத்து அறிஞர்கள், "சமதர்ம சித்தாந்தம் என்பது, உலர்ந்துபோன ஒரு சருகு அல்ல; அனைவருக்கும் ஒரே மாதிரியான நிழல் கொடுத்துக் காப்பாற்றும் சக்திவாய்ந்த விருட்சம்" என்று தெரிந்துகொண்டு, இவனிடம் மதிப்புக் காட்டத் தொடங்கினர்கள். 1917-ஆம் வருஷம் ருஷ்யாவில் நடைபெற்ற புரட்சி, மார்க்ஸ் பிறந்த நூறுவது வருஷத்தைக் கொண்டாடுவது போல இருந்தது. இவன் பிறந்தது 1818-ஆம் வருஷம் மே மாதம் 5-ஆம் தேதி. இடம், ஜெர்மனியின் மேற்கெல்லையிலுள்ள ரைன்லாந்து மாகாணத்திலிருக்கும் ட்ரையர் (Trier) என்னும் கிராமம்.

மார்க்ஸின் முன்னேர்கள் யூதர்கள்; பணப்பித்துக்குச் சமமாக, மதப்பற்றும் உடையவர்கள்; புரோகிதத் தொழிலைப் பரம்பரையாக அநுசரித்து வந்தவர்கள். ஆனல், மார்க்ஸ், தன் நூல்களில் யூதர்களையும் மதத்தையும் அதிகமாகத் தாக்கியிருக்கிருன்! மார்க்ஸ் ஆறு வயதுச் சிறுவனு யிருந்தபோது, இவனுடைய தந்தை—ஹென்ரிக் மார்க்ஸ்—தன் குடும்ப சகிதம் புராடெஸ்டெண்ட் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிக்கொண்டான். கிறிஸ்துவ மதத்தின் மீது அபார பக்தி ஏற்பட்டு இப்படிச் செய்தான் என்று சொல்ல முடியாது. ஒரு யூதனு யிருந்துகொண்டு உலக மார்க்கத்தில் வெற்றி பெறுவதென்பது அப்பொழுது சிறிது கடினமாயிருந்தது. இதற்காகவே ஹென்ரிக் மார்க்ஸ், தனது மத பரம்பரைக்கு முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டு விட்டான்.



ஹென்ரிக் மார்க்ஸ் ஒரு வக்கீல். நன்ருகச் சம்பாதித்து நான்கு பேர் மத்தியில் கௌரவமாக வாழவேண்டுமென்ற ஆசை

யுடையவன். அப்படியே வாழ்ந்தான். அவனுடைய மனைவி, சர்வ சாதாரணமான ஒரு குடும்ப ஸ்திரீ. இவர்களுக்கு எட்டுக் குழந்தைகள். மூன்றாவது மகன் கார்ல் மார்க்ஸ். இவனுடைய எதிர்கால வாழ்வைப் பற்றிப் பெற்றோர்கள் அதிகமான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். தகப்பன், தன்னைப்போல் மகனும் ஒரு வக்கீலாகி, பெயரும் புகழுமாக வாழ்வான் என்று எதிர்பார்த்தான். ஆனால், மார்க்ஸ், தனது வாழ்க்கையைச் சிந்தனை உலகத்திலேயே கழித்து விட்டான். தாயார், தன் மகன் நிறையப் பணம் சம்பாதிப்பான் என்று எதிர்பார்த்தாள். ஆனால், மார்க்ஸ், பணத்தைப்பற்றி ஒரு நூலெழுதி விட்டான். இவன் சிறு வயதிலேயே பெற்றோர்களின் அதிருப்திக்கு ஆளானான். உலக மகா ஜனங்களைத் திருப்திப் படுத்துவதற்காகத் தோன்றிய பெரும்பாலான அறிஞர்களுடைய பாலிய வாழ்க்கை ஏறக்குறைய இப்படித்தானே இருக்கிறது?

மார்க்ஸ், சிறுவயதில் ட்ரையரிலுள்ள பள்ளிக் கூடத்திலேயே படித்தான். அப்பொழுது இவனிடத்தில் விசேஷ சக்தி காணப்பட்டதாகத் தெரியவில்லை. பின்னர், பான் (Bonn) என்னும் நகரத்திலிருந்த சர்வ கலாசாலையிலும் ஒரு வருஷம் படித்தான். வீண் பொழுது போக்கிலேயே இந்த ஒரு வருஷம் கழிந்தது. பிறகு, தந்தையின் விருப்பத்துக்கிணங்க, பெர்லின் சர்வ கலாசாலைக்குச் சென்று சுமார் ஐந்து வருஷ காலம் படித்தான். சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், தத்துவ சாஸ்திரம், சட்டம் முதலிய பல துறைகளிலும் பயின்றான். இடையிடையே கவிதைகள் புனைந்தான்.

இந்தக் காலத்தில் ஹெகல் (Hegel 1770 - 1831) என்ற ஓர் அறிஞனுடைய சித்தாந்தத்துக்கு ஜெர்மனியில் அதிகமான செல்வாக்கு இருந்தது. இந்தச் சித்தாந்தம் என்ன? உலகம் என்றும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. ஒன்றிலிருந்து மற்றொன்றாக அது மாறிக்கொண்டே வந்திருக்கிறது. இந்த மாற்றமே அதனுடைய வளர்ச்சி. இந்த வளர்ச்சியானது, முரண்பட்ட பல சக்திகளுடைய போராட்டத்தின் பரிணமம். இந்தப் போராட்டமில்லாவிட்டால் வளர்ச்சியில்லை. எனவே, மேல் பார்வைக்கு முரண்பட்டவையாகத் தோன்றும் எண்ணங்கள், சக்திகள் முதலிய யாவும் உண்மையில் ஒன்றுக்கொன்று துணை செய்வனவேயாகும். இந்த மாதிரியான சில கருத்துக்கள் அடங்கியதே ஹெகலின் சித்தாந்தம். இதனுடைய தர்க்க நியாயத்தில் ஈடுபட்டான் மார்க்ஸ். மானிட ஜாதியின் சரித்திரங்கூட இந்த மாதிரியான பல வகைப் போராட்டங்களின் பரிணமமே என்று முடிவு கட்டினன். இதனுடைய விரிவே மார்க்ஸீயம்.

மார்க்ஸ், பெர்லினில் படிப்பை முடித்துக் கொண்டு, பான் சர்வ கலாசாலையிலேயே ஒரு தத்துவ சாஸ்திர போதகாசிரியனாக வாழ்க்கையைத் தொடங்க வேண்டுமென்று ஆசைகொண்டான். ஆனால், அப்பொழுதைய ஜெர்மானிய அரசாங்கத்தின் அதிகார அமுல் அதற்கு இடங்கொடுக்கவில்லை. எனவே, ஒரு பத்திரிகாசிரியனாக வாழ்க்கையை ஆரம்பித்தான். அப்படித் தொடங்குவதற்கு முன், தன்னால் ஏற்கனவே காதலிக்கப்பட்ட ஜென்னி வெஸ்ட்பாலன் என்பவளை விவாகம் செய்துகொண்

அவன் எங்கெங்கே இருந்தாலும் ‘அழுக்கு அபாய’ த்திலிருந்து காப்பாற்றப் படுகிறான்

எந்த இடத்தில் வேடிக்கை நடக்கிறதோ, அவ்விடத்தில் அவனை முதலில் காணலாம்! அவனுடைய தாயாருக்கு அவன் எங்கே போயிருக்கிறான் என்பது தெரியாது; ஆனால் அவன் வீடு திரும்பும்பொழுது அவன் உடம்பு முழுதும் அழுக்கு பூசி இருக்கும் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். அவன் ‘அழுக்கு அபாய’த்திலிருந்து ரக்ஷிக்கப்படுகிறான் என்று தெரியாமல் இருந்தால் அவளுக்கு எவ்வளவு கவலையுண்டாகும். அநேக வருஷங்களுக்கு முன் அவளுக்கு டாக்டர் அழுக்கிலிருந்து கிருமி கீடகங்கள் உண்டாகின்றன என்று சொல்லியிருக்கிறார். அவர் தவறாமல் குழந்தைகளை லைப்பாய் சோப்பினால் ஸ்நானம் செய்வித்தால் அப்படிப்பட்ட அபாயங்களிலிருந்து காப்பாற்றலாம் என்றும் விளக்கி யிருக்கிறார். லைப்பாய் ஓர் விஷ நிவாரண சோப். லைப்பாய் சோப் ஆரோக்யத்தை ரக்ஷிக்கும் தன்மை யுள்ளது.

லைப்பாய் நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது அதுஒருநல்லவழக்கம்

இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றி விற்கப்படுகிறது

L. 48-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

கண்ணைக் கவரும்
சுவர்ண மாளிகை!

நெஞ்சை அள்ளும்
நகைக் கொலு !!

பொன்கொண் டிழைத்த
மணிகொண்டு பொதித்த
வெயில்கொண்டு சமைத்த
என்கொண் டிழைத்த,
எனத் தெரிகிலாத......

என்றெல்லாம் கம்பன் அழகிய
கவிகள் மூலம் வர்ணிக்கிறானே,
அந்த அலங்கார விந்தையைப்
பூரணத் திருப்தி தரும்.

நமது நகை மாளிகையிலேயே
நேரிலே கண்டு களியுங்கள்.
இன்றே விஜயம் செய்து
பெற்றுக் கொள்ளுங்கள்.

Telephone No. 218-A

உங்களன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான நகை வியாபாரிகள்



P. A. ராஜு செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர் :: தந்தி : 'ராஜா'

டான். அவள் பணக்காரப் பிரபு வமிசத்தைச் சேர்ந்தவள். நல்ல அழகி. குணவதி. புருஷனின் லட்சியப் பார்வையோடு தனது சர்வத்தையும் ஐக்கியப்படுத்திக் கொண்டு விட்டாள்.

ரைன்லாந்து மாகாணத்தில் வசித்துக் கொண்டிருந்த சில தீவிர அரசியல்வாதிகள் சேர்ந்து, 'ரைன்லாந்து கெஜட்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார்கள். இதற்கு மார்க்ஸ், முதலில் கட்டுரைகள் எழுதிக்கொண்டு வந்தான். பிறகு, இதன் ஆசிரியனுனன். இதில் ஜெர்மன் அரசாங்கத்தின் சுயேச்சாதிகாரத்தைப் பலமாகக் கண்டித்து வந்தான். இதனுல் பத்திரிகையின் மீது அடக்குமுறை பாணம் விழுந்தது. இவன் ராஜீநாமாச் செய்தான். பத்திரிகையும் நின்று விட்டது.

இதன் பிறகு, மார்க்ஸ் பாரிஸ் நகரம் சென்றுன். அங்குச் சில நண்பர்கள் சேர்ந்து ஆரம்பித்த "பிரெஞ்சு - ஜெர்மன் மலர்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியனுனன். ஆனல், இது ஒரே இதழுடன் நின்றுவிட்டது. இந்த ஓர் இதழில் வெளியான விஷயங்கள்கூட ஜெர்மன் அரசாங்கத்துக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. எனவே, பிரெஞ்சு அரசாங்கத்தைத் தூண்டி, மார்க்ஸை, பிரான்சின் எல்லையை விட்டு அப்புறப்படுத்தி விடும்படி செய்தது.

பாரிஸ் வாசம் மார்க்ஸின் வாழ்க்கையில் மிக முக்கியமான பாகம். ஏனென்றுல், இந்த வாசத்தின்போது, இவனுக்கு ப்ரெடெரிக் எஞ்ஜெல்ஸின் (Frederick Engels: *1820 - 1895*) நட்பு ஏற்பட்டது. சமதர்ம சித்தாந்தத்துக்கு இருவரும் தாயும் தந்தையுமாவர். மார்க்ஸுக்கு எல்லா வகையிலும் ஊன்றுகோல் போலிருந்தவன் எஞ்ஜெல்ஸ். மார்க்ஸுக்காக எஞ்ஜெல்ஸ் அநேகம் கஷ்டங்கள் பட்டிருக்கிறுன். எஞ்ஜெல்ஸ் இல்லா விட்டால் மார்க்ஸ் இல்லை; மார்க்ஸ் இல்லா விட்டால் சமதர்மம் இல்லை.

பாரிஸிலிருந்து வெளியேற்றப் பட்ட மார்க்ஸ், பெல்ஜியத்தின் தலைநகரான ப்ரஸ்ஸல்ஸுக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே இவனும் எஞ்ஜெல்ஸும் சேர்ந்து, 'பொதுவுடைமைச் சங்கம்' என்ற பெயரால் ஒரு ரகசியச் சங்கத்தை ஸ்தாபித்து, அதன் மூலமாகப் பொதுவுடைமைக் கருத்துக்களைப் பிரசாரம் செய்து வந்தார்கள். இந்தச் சங்கத்தின் இரண்டாவது மகாநாடு *1847*-ஆம் வருஷம் லண்டனில் கூடியது. மகாநாட்டின் விருப்பத்துக் கிணங்க, மார்க்ஸும் எஞ்ஜெல்ஸும் சேர்ந்து மிகப் பிரபலமான 'கம்யூனிஸ்ட் அறிக்கை' யைத் தயாரித்தனர். அது *1848*-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் வெளியாயிற்று. மானிட ஜாதியானது எப்படி ஆரம்ப காலத்திலிருந்து பல போராட்டங்களுக்கு மத்தியில் படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிற தென்பதைப் பற்றியும், இனி எல்லா மக்களும் சம அந்தஸ்தும் சம உரிமையும் பெற்று வாழ்வதற்கான வழி என்ன என்பதைப் பற்றியும், இந்த அறிக்கை சுருக்கமாகவும், ஆனல் தெளிவாகவும் ஆணித்தரமாகவும், எடுத்துக்காட்டுகிறது. சமதர்ம வாதிகளின் வேதப் புத்தகம் மாதிரி இந்த அறிக்கை.

1848-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் பாரிஸ் நகரத்தில் ஏதேச்சாதிகாரத்துக்கு விரோதமாக

ஒரு புரட்சி ஏற்பட்டது. பெல்ஜிய அரசாங்கத்தார், தங்கள் நாட்டுக்குள்ளும் எங்கே புரட்சித் தீ பரவி விடப்போகிறதோ என்று அஞ்சி, முன்னெச்சரிக்கையாக மார்க்ஸை, தேசப் பிரஷ்டம் செய்துவிட்டனர். மறுபடியும் பாரிஸ் வந்தடைந்தான் மார்க்ஸ். இங்கே சில நாட்களே இருக்க முடிந்தது. பின்னர், ஜெர்மனியிலுள்ள கொலோன் நகரத்தில் வெளியான 'புதிய ரைன்லாந்து கெஜட்' என்னும் பத்திரிகைக்குச் சுமார் ஒரு வருஷ காலம் ஆசிரியனயிருந்தான். அப்பொழுது இவன் வெளிப்படுத்திக் கொண்டு வந்த புரட்சிகரமான கருத்துக்கள், ஜெர்மன் அரசாங்கத்துக்கு அச்சத்தை உண்டு பண்ணின. விளைவு என்ன? ஜெர்மனியிலிருந்து தேசப் பிரஷ்டம்! மறுபடியும் பாரிஸுக்கு வந்தான். ஆனல், அங்கிருந்தும் விரட்டப்பட்டுவிட்டான். கடைசியில் லண்டன் அடைந்தான். இதன் பின் இவனுடைய வாழ்நாள் முழுவதும் லண்டனிலேயே கழிந்தது.

இந்தக் காலம் - சுமார் முப்பது வருஷம் - மார்க்ஸுக்கு மிகவும் சங்கடமான காலம். குடும்பம் பெருகியது; வறுமை வாட்டியது; பிணிகள் சுற்றிக்கொண்டன. ஆனல், இந்தக் காலத்தில்தான், இவன், தன்னுடைய பெயர் என்றும் நிலைத்திருக்கக் கூடிய மாதிரி அநேகம் காரியங்களைச் செய்தான். 'காபிடல்' என்ற பிரசித்தமான நூலைத் தயாரித்தான்; சர்வ தேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தை நிறுவினன்; சமதர்மம் என்பது வெறும் வறட்டுத் தத்துவமல்ல என்பதைப் பல வகையிலும் நிரூபித்துக் காட்டினன். இந்த முப்பது வருஷகாலம் இவனுடைய சிருஷ்டி காலம்; சங்கடப்பட்ட காலமும் கூட. இரண்டிலும் - சிருஷ்டியிலும் சங்கடத்திலும் - இவனுக்கு உறுதுணையாய் இருந்தவர்கள், நண்பனை எஞ்ஜெல்ஸும் மனைவியான ஜென்னியுந்தான். மார்க்ஸ், 'காபிடல்' என்ற நூலை எழுதுவதற்காகச் சுமார் ஆயிரத்தைந்நூறு நூல்கள் வரை ஆராய்ச்சி செய்தான். பகலெல்லாம் படிப்பதும், இரவெல்லாம் படித்தவற்றிற்குக் குறிப்புகள் எடுத்துக் கொள்வதும் இவன் வேலை. தினம் பதினறு மணி நேரத்துக்கு மேல் உழைத்து வந்தான். இதனல் இவனுடைய தேக பலம் குன்றிவிட்டது. கடைசியில் (1883-ஆம் வருஷம்) தனது அறுபத்தைந்தாவது வயதில் உயிர்நீத்தான்.

மார்க்ஸ், பரநலத்துக்காகத் தன்னலத்தை மனமறிந்து தியாகம் செய்தவன். இதனல் அலை போல் அடுக்கடுக்காக வந்த துன்பங்களை மலைபோல் உறுதியாக எதிர்த்து நின்றன். மேற் பார்வைக்கு இவன் கரடுமுரடாகக் காணப்பட்டான். உருவத்திலும் சுபாவத்திலும் இவன் ஒரு பலாப்பழம் மாதிரி. ஆனல், இவனைப் போல் ஏழை மக்களுக்கு இரங்கினவர் யாரும் கிடையாது. குழந்தைகளிடத்தில் இவன் பரம விசுவாசமுடையவன். தனக்கு மாறுபட்ட அபிப்பிராய முடையவர்களை நிர்த்தாட்சண்யமாகத் தாக்குவான். இதனல் அநேகருடைய துவேஷத்துக்கு ஆளானன். ஆனல், இவன் அதை லட்சியம் செய்யவில்லை. தனது லட்சியம் ஒன்றிலேயே குறியாயிருந்தான். மானிட சமுதாய மனைத்தும் ஒரே மாதிரியான நல்வாழ்வு நடத்த வேண்டு மென்பதுதான் அந்த லட்சியம்.

★

ஒரு காதல் கடிதம்

கே. வேங்கடாஜலம்

காதல் என்றால், பூஞ்சோலை, நிலாமுற்றம், தென்றல் - இவையெல்லாம் கண்டிப்பாய் வந்துவிட வேண்டுமென்று நம் இளங் கதாசிரியர்கள் சிலர் நினைக்கிறார்கள். வாழ்விலே காதலை, அது நிறைவேறாத வேதனையை, அனுபவித்த பிரபல பிரஞ்சு ஆசிரியர் ஒருவர், தம் காதலிக்கு எழுதிய கடிதத்தை, அவர்கள் படிக்கவேண்டும்; அவர்கள் என்ன, இலக்கிய ரஸிகர் அனைவருமே தான் படிக்கவேண்டும்.

பிரஞ்சுக் கதாசிரியர்களுக்குள்ளே, லியான் பிமாய்க்கு மிக உயரிய ஸ்தானம் உண்டு. 1846-ஆம் ஆண்டு பிறந்தது முதல் 'கசப்பான' வாழ்க்கையை நடத்தினார். புலமையும் பஞ்சமும் உடன் பிறந்தவை தானே! என்ன சாரமற்ற வாழ்வு வாழ்ந்தாலும், அதிலேயும் ஓர் இன்பம் லியான் பிமாய்க்கு. அணையுந்தருவாயிலிருந்த தீபத்தை, எண்ணெய் ஊற்றிப் பிரகாசமடையச் செய்தாள் ஒருத்தி; ஆம், அவள் லியானின் உயிர்க்காதலி தான். அவருடைய எழுத்துக்கு, அவள் சக்தி கொடுத்தாள். லியான் எழுதிய கடிதங்களில், உள்ளத்தின் உணர்ச்சிகளெல்லாம் பிரதிபலிக்கின்றன. அவை பிரஞ்சு இலக்கியத்துக்கே புதிய விறு விறுப்பு உண்டு பண்ணிய 'காதல் கடிதங்க'ளாகும். அவைகளில் ஒன்று இது:

‘‘ 127,3 பிளாமெட்,
செப். 24, 1889.

‘‘ அன்புள்ள குட்டி ஜீனுக்கு,

‘‘ உன்னைக் கடவுள் ஆசிர்வதிக்கட்டும். கடலலை போன்று தத்தளித்துக் கொண்டிருந்த என் மனதை உன் கடிதம் எப்படித் தேற்றிற்றுத் தெரியுமா?

‘‘ நான் குதூகலமில்லாதவன் என்பதை நீ அறிவாய். ஆனால், எப்படிக் குதூகலமிழந்திருக்கிறேன் என்று அறியாய். உன்னிடமிருந்து எந்த ரகஸியத்தையும் மறைக்க, நான் விரும்பவில்லை. நேற்று, கிராமத்துக்கு ஓர் அருமை நண்பரைக் காணப் போயிருந்தேன் - கடந்த மாதம் முழுவதும் என் 'வாழ்க்கைத் துருத்தி'யை ஊதுவதற்கு உதவிய அந்த நிதி விஷயமாகத்தான். நிரம்பவும் துக்கமும், பரிதாபமும் கலந்த சம்பவம் அது.

‘‘ இதையெல்லாம், நான் பலம் பெறும்போது உனக்கு விளக்குவேன்; அதாவது, என் துக்கங்கள் எப்போது தொலைகின்றனவோ அப்போது. என்னிடம் ஒரு பைஸாக்கூட இல்லை. அன்று மட்டும் ஏதாவது தேவையாயிருந்தது. ஆனால், நானோ? வருவாயும், சம்பாத்தியமும் இல்லாத ஓர் ஏழை எழுத்தாளன்; ஒவ்வொரு நாளும் வயிற்றுப் பாட்டுக்கு வழி பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். இது தான் என்னைப் பாரிஸுக்குப் பன்முறை 'படையெடுக்க'ச் செய்தது. இந்த நச்சைப் பொறுத்துக் கொள்ள, ஒரு சிலரால்தான் முடியும். ஆ! தினசரி உணவைப் பற்றிக் கவலை கொள்ளாத சந்தோஷமான மனிதர்களைப் பார். வாழ்க்கையின் தேவைகள், அவர்களைத் தானே நாடிச் செல்லுகின்றன? இந்த சுகஜீவிகளின் சிந்தனைச் சுழலில், துன்புறும் சகோதரன் சிக்குவதில்லை. துர்ப்பாக்கியர்களுக்காகச் சிறிது தியாகம்

செய்ய வேண்டும் என்ற நினைப்பு அவர்களுக்கு வருவதில்லை. அவர்கள் எல்லோரும் என்னை நிந்திக்கிறார்கள்; குறை கூறுகிறார்கள். காரணம், எனக்கு 'மதிப்பு' இல்லையாம்! இதைப்பற்றி நான் அங்கலாய்த்துக் கொள்ள வில்லை. தினமக்களின் சேவையே என் கடன்; அதை முடிக்கப் பிச்சை புகினும் வருந்தேன்.

"மதிப்பு! அது என்ன 'மதிப்'போ தெரியவில்லை. இதனால், இந்த வறட்டு வீருப்பினாலேயே, அன்று நம் ரட்சகர் சிலுவையில் மடிந்தார்! நான் இனி எழுதப் புகும் நூலில் ஓர் அத்தியாயம் 'மதிப்பு' என்ற பொருளுக்காக ஒதுக்கி வைக்கப்படும். அதற்கு, 'பணத்தின் மதிப்பு' என்ற தலைப்புக் கொடுப்பேன்.

"இது நிற்க, ஜீன்! கொஞ்சம் யோசித்துப் பார். நான் ஏன் இத்தனை வருஷ காலமாகச் சித்திரவதை அனுபவிக்க வேண்டும்? கடந்த பத்து ஆண்டுகளைத் தான் எப்படிக் கழித்திருக்கிறேன்! பசியைப் பொறுத் திருக்கிறேன்; குளிர், சூடு, தளர்ச்சி, மயக்கம், பெருந் துக்கம் இவைகளையுங் கூடத்தான். துன்பத்தினால் நசுக்கப்பட்டு, மேலே அடி எடுத்து வைக்க முடியாமல், நான் தவிக்கிறேன். என்னை நீ முற்றும் உணர்ந்திருப்பாய் என நினைக்கிறேன். அப்படித்தானே, ஜீன்?

"நொடிக் கொரு தரம், நான் சோம்பேறிப் பட்டம் பெறுகிறேன். ஒருகால் அதற்குக் காரணமும் இருக்கலாம். இவ்வளவு குழப்பங்களின் மத்தியிலும் நான் புத்தகம் எழுதுவது ஆச்சர்யமாயிருக்கும். கடவுள் தனிப்பெரும் நீதியாளன்; அவனன்றோ அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறான்? ஏதேனும் எழுதுவோமென்று வீட்டில் உட்காரும் போது - அதாவது வயிற்று வியாபாரத்தை முடித்த பின்பு-என்னை அறியாமலே ஆயிரம் சோக சிந்தனைகள் கிளம்புகின்றன. நாளை எப்படிப் பணம் திரட்டலாம்? இந்த மாலை வேளையில் பசியால் மடிவதைத் தவிர்ப்பது எவ்விதம்? வீட்டு வாடகைக்காரனுக்கு என்ன பதில் கொடுப்பது? - முதலியன. முடிவில், கையிலிருந்து பேனா நழுவுகிறது. கற்பனைத் தேருக்கு எங்கேயிருந்தோ இடறு கட்டை விழுகிறது.

"நான் இடைவிடாது பிரார்த்திக்கும் மன நிம்மதியை ஈசன் எனக்கு அளிக்க மறுத்தாலும், அவரைத் தூற்ற மாட்டேன். பொருள் கொடுக்கும் நிரந்தர வேலை ஒன்று எனக்கு வேண்டும். அதன்பின், எத்தனை புத்தகங்கள் எழுதிக் குவிக்கலாம்! என் அவசரம், அவசியம் இரண்டையும் கடவுள் அறிவார்; அறிந்தும் அருள் சுரக்க வில்லையே!

"என் உயரிய நண்பர்களில் இருவரே என்னை முற்றும் அறிந்தவர்கள். அவர்களில் ஒருவருக்கு என்னுடைய 'லே தெஸஸ்பரீ' என்ற நூலை அர்ப்பணம் செய்துள்ளேன். மற்றவர் மலினமான நெஞ்சு படைத்த காரணத்தால், உலகத்தினரால் இகழ்ந்து ஒதுக்கப்பட்டவர். இந்த விசேஷமான இரு மனிதர்களும் என் மீது அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். என்னை குறைகூறக் கனவிலும் கருதாதவர்கள். ஆனால், சிலர் என்னை கர்வி என்று குற்றம் சாட்டும்போது, எனக்கு அதை எதிர்க்க ஒன்றும் வழி தெரிவதில்லை. உண்மையில் நான் கர்வம் கொண்டவனா? சத்தியக் கடலின் ஆழத்தில் முத்துக் குளித்து, அறிவைச் சம்பாதித்

தேன், இது தான் என் குற்றம். இப்படிப்பட்ட மனிதனுக்கும் ஜன சமூகத்தில் இடம் உண்டு என்று எண்ணுகிருயா, ஜீன் ?

"1882-ஆம் ஆண்டில் என் ஜீவிய கோபுரத்தில் விழுந்த இடி, என்னை எவ்வளவு சோதித்து விட்டது! வாழ் நாளிலேயே பெரிய துக்கம் நேர்ந்து, அந்தகாரமான இருளோடு சேர்த்து விட்டது இந்த ஏழையை வேட்டையாடப்பட்ட மான் போல ஆனேன். மீண்டும் ஒளியுலகுக்கு வர முயல்கிறேன், பத்திரிகையை ஏணியாகக் கொண்டு.

"ஆம்; சதா கடவுளின் அருட்கடலில் மூழ்கித் திளைக்கும் ஒருவன், உலக மாயக் கூடத்தைப் பற்றி என்ன எழுத முடியும்? இருந்தாலும், நான் இப்பொழுது சாந்தியுடனிருக்கிறேன்; என் இதயம் மெல்லிய ரோஜா மலரைப்போலாகி விட்டது; அதில் தேனும் துளிக்கிறது.

"என் அருமைக் காதலி ஜீன்! நீ தான் என் அழியாத நம்பிக்கைத் தூபி; கடவுளுக்கு அடுத்தபடியாக ஆறுதலூட்டும் பொருள் நீயே. இதோ இந்தப் 'பெருமை வாய்ந்த' மனிதனின் நெஞ்சிலிருந்து சில மெய்யான வார்த்தைகள் கிளம்புகின்றன. நான் பரம ஏழை; குஷியில்லாதவன்; பலவீனன்; மனநோய் பிடித்தவன்; ஏகாங்கி. இப்பேர்ப்பட்ட மனித ஜன்மம் எப்படி உயிர் வாழ்கிறது? அது ஒரு விந்தை; காதலின் தாபம்தான் என்னைச் சாக விடாமல் பிடித்து வைத்திருக்கிறது. நீ என்னை மறந்து விட்டால், எல்லாம் என்னை மறந்து விடும். உன் அந்த ராத்மாவைக் காதலிக்கிறேன்; மனம், காயம் எல்லாவற்றையும் தான். நம் விவாகம் எனக்குப் புத்துயிர் கொடுக்கும் என நம்புகிறேன். ஊழிக் காலம் வரையில் இப்படியே காதல் நிலைத்திருக்குமா? உன்னிடம் ஒரு குழந்தையைப் போல் பேசி விட்டேன். என் உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சியத்தனையையும் இந்த எழுத்துக்களில் காட்ட முடியவில்லை. நான் கொண்டுள்ள காதலுக்கு எல்லையே கிடையாது. என் புகழுக்குரியவளே! உன் காதல் என்ற ஜீவரசம் என் ஒவ்வொரு நரம்பிலும் ஏறி என்னைப் பித்தாக்கி விட்டது. உடனே உன்னைக் காண, மனம் ஆசை கொள்கிறது. ஆனால், உன்னை என் புயங்களிலே தாங்க வலுவில்லை என்ற எண்ணம் அதை அமுக்கி விடுகிறது. 'காத்திருக்க'ச் சொல்கிருய். காத்திருந்தால், இருவரும் பெருங் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டி வருமோ என அஞ்சுகிறேன். என்னைப் பொறுத்த வரையில், அந்தத் துன்பப் புயல் ஆரம்பித்து விட்டது.

"எனக்குக் கை கொடுக்க, ஒரு துணைக் கரம் வேண்டும். வீட்டிலே சந்தோஷமாயிருந்து உழைப்பிலும் இறை வழிபாட்டிலும் பொழுதைப் போக்க, அது உதவி புரிய வேண்டும். அவ்வித உதவி கிடைக்குமானல், நான் எவ்வளவு குதூகலமாக இருப்பேன்? ஆனல், ஏன் கடவுள் என்னை இவ்விதம் அன்பில்லாமல் நடத்தி வருகிருர்?

"பிரியமுள்ள ஜீன்! உனக்கு ஆயிரம் முத்தங்கள்.

—லியான் பிழாய்"

★

சுபாஷின் சூழ்ச்சி

ஏ. ஜே. பிஷர்

ஜெர்மனியும் இதாலியும் இந்தியரை எதிரிகளாக ஒப்புக்கொள்ளவில்லை. இந்திய யுத்தக் கைதிகள் அநேகரை அவை விடுதலை செய்து விட்டன. அப்படி விடுதலையடைந்தவர்கள், இஷ்டப்பட்டால், நடுநிலைமை நாட்டுத் துறைமுகங்களின் வழியாகத் தங்களுடைய தாய்நாட்டுக்குச் செல்லலாம்; அல்லது அச்சு நாடுகளிலேயே தங்கியும் இருக்கலாம்; 30,000 இந்தியர்கள் ஜெர்மனியில் மட்டும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அச்சு நாடுகளின் பிரசாரம் சர்வாதிகாரக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நடக்கிறது. சுபாஷ்தான் சர்வாதிகாரி. டோக்கியோவில் இருந்துகொண்டு, இந்த மனிதர் 'இந்திய விடுதலை இயக்கத்'தை நடத்துகிறார்! ரோமில் உள்ள ஓரியெண்டல் அக்காடமி என்பதற்கும் இவரே தலைவர். கெப்பல்ஸ், முஸலீனி ஆகியவர்களுடன், இவர் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறார். ரிப்பன்டிராப், ஹிட்லர் இருவருடனும் சம்பாஷணைகள் செய்திருக்கிறார். முப்பத்தொன்பது வயதுடைய இந்த சுபாஷ்தான், பாரி, பெர்லின் இரண்டு 'சுதந்தர ரேடியோ நிலையங்க'ளிலும் இந்திய 'லார்டு ஹா ஹா' ஆக விளங்குகிறார்.

ஹிட்லரும் முஸலீனியும் இந்தக் குறிப்பிட்ட இந்தியரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள என்ன காரணம்? கேம்பிரிட்ஜில் தமது படிப்பை முடித்து விட்டு, 1923-ஆம் வருஷம் சுபாஷ் போஸ் இந்தியாவுக்குத் திரும்பினார். இந்திய ஸிவில் ஸெர்வீஸில் உயர்ந்த பதவியான மாஜிஸ்திரேட் உத்தியோகத்தை அவருக்குத் தர முன் வந்தார்கள். அவர் அதை மறுத்து விட்டார். ஏனெனில், இந்திய அரசியலில் அவருக்கு அதிக சிரத்தை விழுந்தது. இங்கிலாந்திடம் கொண்ட துவேஷத்தால் குருடாகிய சுபாஷ், காந்தியின் இயக்கத்தில் அமிதவாதியானார். "எனது ஒரே லட்சியம் பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து விரட்டுவதே யாகும். அவசியமானால், அதற்குச் சைத்தானை வேண்டுமானாலும் துணைக் கொள்வேன்; அல்லது பூமியிலுள்ள வேறெந்தச் சக்தியையும் துணைக் கொள்வேன்" என்று அவர் கோஷித்தார்.

'இந்தியப் போராட்டம்' என்ற தமது புத்தகத்தில், 1933-34-ஆம் ஆண்டில், தம்மை அவர் ஒரு பொது உடைமை வாதி என்று சொல்லிக் கொண்டார். அப்போது அவர் வியன்னாவில் இருந்

ஹிட்லரையும் முஸலீனியையும் டோஜோவையும் பிறரையும் தம் நோக்கத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள, சுபாஷ் நினைக்கிறாராம்; ஆனால், அவர்களோ இவரைத் தங்கள் கைக் கருவியாகவே உபயோகிக்கிறார்களாம்! இந்த விசித்திர விவரங்களடங்கிய இக் கட்டுரையை, **ஆல்பிரட் ஜோச்சிம் பிஷர்** என்பவர் எழுதியுள்ளார்; லண்டனில் வெளியாகும் '**வேர்ல்ட் டைஜஸ்ட்**' வெளியிட்டுள்ளது.

தார்; நோய் குணமடைவதற்காக, பிளாக் பாரஸ்ட் என்னுமிடத்துக்கு அனுப்பப்பட்டார். அவருக்கு ஒரு ராஜாங்க வரவேற்பு அளிக்க, கெப்பல்ஸ் முன் வந்தார். அதை வேண்டாமென்று சுபாஷ் மறுத்து விட்டார். 'மெயின் காம்ப்' என்ற நூலில் இந்தியர்களுக்கு விரோதமாக ஹிட்லர் எழுதியிருந்த கூற்றுகளுக்காக, அவரிடம் சுபாஷ் துவேஷங் கொண்டிருந்தார். சுபாஷைத் தம் கட்சிக்கு இழுப்பதற்காக, ஹிட்லர் ஒரு தந்திரத்துக்கு இணங்க வேண்டிய தாயிற்று. அதாவது, இந்தியருக்கு விரோதமாய் மெயின் காம்பில் இருந்த கூற்றுகளை அகற்ற, ஹிட்லர் இசைந்தார்.

பிளாக்பாரஸ்ட் என்னுமிடத்திலிருந்து, பிரேக், வியன்னு, அங்காரா ஆகிய இடங்களுக்கெல்லாம், சுபாஷ் விஜயம் செய்தார். அங்கெல்லாம் சங்கங்கள் அமைத்தார். பினேஷ், அட்டாட்டர்க் இருவரையும், அவர் சந்தித்தார். ஆனல், இதாலிக்கு விஜயம் செய்த பிறகுதான், அவருடைய அரசியல் கொள்கைகள் ஒரு நிலைக்கு வந்தன. பொதுஉடைமையில் அவருக்கு நம்பிக்கை போய் விட்டது. முஸலீனியுடைய ஆதரவின் மேல், ஓரியெண்டல் அக்காடமி என்ற சங்கத்தை ஸ்தாபித்தார். அவருக்கு முஸலீனியிடம் ஏற்பட்ட அபார வியப்பினல், இதர தேசியத் தலைவர்களையும் அறிந்துகொள்ள ஆவல் கொண்டார். டிவாலரா, முஸ்தபா நாஹாஸ் பாஷா இருவரையும் போய்க் கண்டார்.

இந்தியாவுக்குத் திரும்பியதும், காந்திக்குப் பின் தாமே காங்கிரஸ் தலைவரானர். 'ஹிந்துஸ்தான் குடியரசுச் சேனை'யின் தலைவர் சுபாஷ்தானே என்று அடிக்கடி சந்தேகிக்கப்பட்டது. காந்தி ராஜீனமாச் செய்த அதே சமயத்தில் தாமும் ராஜீனமாச் செய்தார். யுத்தம் தொடங்கியபோது, 'சர்வ ஜனச் சட்டமறுப்பு இயக்கம்' ஆரம்பிக்க வேண்டு மென்று அவர் விரும்பினர். இது நிறைவேற வில்லை. கல்கத்தா இருட்டறை ஞாபகச் சின்னத்தைப் பழுதுசெய்ததற்காக, அவர் சிறை செய்யப்பட்டார். ஒரு வருஷத்துக்குப் பின் உடல் நலக் காரணங்களுக்காக விடுதலை செய்யப்பட்டார். அச்சு நாடுகளுடைய ஏஜண்டுகளின் உதவியால், அவர் ஜப்பானுக்குத் தப்பியோடினர். அங்கிருந்து ஜெர்மனிக்குச் சென்றார். அதெவ்வாறு இயன்றது என்றுதான் தெரியவில்லை.

டோக்கியோ போய்ச் சேர்ந்ததும், 'இந்திய சுதந்தர இயக்க'த்தை ஏற்பாடு செய்வதில், சுபாஷ் போஸ் முனைந்தார். சயாமில் அந்த இயக்கத்துக்குக் கிளைகளும் ஏற்படுத்தப்பட்டன. இந்தியருக்கு ஜப்பானிய உத்தியோகஸ்தர்கள் ராணுவப் பயிற்சியளித்து, இந்திய சிப்பாய்களைத் தயார் செய்தார்கள். பர்மாமீது ஜப்பான் படையெடுத்தபோது, அந்தச் சிப்பாய்கள் உளவர்களாகவும் பாரச்சூட் வீரர்களாகவும்வேலைசெய்தார்கள். 1910-ஆம் வருஷம் ஒரு வெடிகுண்டு அதிக்கிரமத்துக்குப் பின், இந்தியாவிலிருந்து தப்பியோடி ஜப்பானில் அடைக்கலம் புகுந்த ராஷ்பிஹாரி போஸ் என்பவர், அகில ஆசிய இயக்கம் ஒன்றை ஆரம்பித்திருந்தார். அந்த இயக்கத்தில், சுபாஷ் சேர்ந்து கொண்டார். அந்த மற்ருெரு போஸ், 83-வயதுடைய டோயாமாவின் மகளை அவசர

மாக மணந்துகொண்டு ஜப்பானியப் பிரஜையாகி விட்டதால் தான், ஜப்பானிலிருந்து நாடு கடத்தப்படாமல் தப்பினார். 'பிளாக் டிரேகன் சொஸைட்டி' (கறுப்பு அரக்கர் சங்கம்) என்ற பெருஞ் சக்தி வாய்ந்த சங்கம் ஒன்று ஜப்பானில் இருக்கிறது. அதற்கு டோயாமாதான் அக்கிராசனர். அந்தச் சங்கத்துக்கு வெகு சீக்கிரத்தில் ராஷ் பிஹாரி போஸ் காரியதரிசி ஆகிவிட்டார்.

பழி பாவங்களுக்கு அஞ்சாத குணத்தை, தம் கூட்டாளிகளிடமிருந்து சுபாஷ் கற்றுக்கொண்டார். மௌலானா ஆஜாதும், பண்டித நேருவும் பிரிட்டனுடன் ஒரு ராஜி செய்து கொள்ளத் தயாரா யிருக்கிறார்கள் என்றவுடனே, அது 'இந்தியாவின் கௌரவத்துக்கே கேவலம்' என்று சொல்லி, அவர்களை எச்சரித்தார். அதோடு நிற்கவில்லை. அவ்விருவரும் ஆங்கிலேயரின் உள் ஆட்கள் என்பதாகவும், தம்முடைய ஐரோப்பிய ரேடியோப் பிரசங்கங்களில் அவர் பழி கூறினார். இந்தத் தமது சொந்த ஸ்தாபனத்தை, பாஸிஸ சர்க்கார்களின் பணத்தைக் கொண்டு நடத்தும் போஸே இப்படி அவதூறு சொன்னது, மகா வெட்கக் கேடாகும்.

போஸின் ஸ்தாபனம் பல விதங்களில் வேலை செய்கிறது :

(1) டோக்கியோ, பெர்லின், பாரி, பாரிஸ் ஆகியவற்றில் உள்ள 'சுதந்தர ரேடியோ நிலையங்கள்' இடைவிடாமல் பிரிட்டிஷ் விரோதப் பிரசாரம் புரிந்து வருகின்றன. நாச வேலை, உளவு, ஆயுதம் ஆகியவைகளின் மூலம் ஜப்பானுக்கு உதவி புரியும்படி, இந்தியரை அவை தூண்டுகின்றன. அப்படிச் செய்வதன் மூலம், இந்தியர்கள் அச்சு நாடுகளின் கூட்டாளிகளாகி, பரிபூர்ண விடுதலையைச் சம்பாதித்து விடலாம் என்று அவர்களுக்கு, போஸ் உறுதி கூறுகிறார்.

(2) பண்டித நேருவை மிகவும் கடுமையாய், அந்த ரேடியோ நிலையங்கள் தாக்குகின்றன. ஆனால், காந்தியை அளவுக்கு மேல் புகழ்ந்து, அவரைத் தங்கள் கட்சிக்கு இழுக்க முயல்கின்றன. 'நண்பரும் முன்னணி வீரருமான இவரது தேச பக்தி நிறைந்த மனச் சாட்சி'க்கு விண்ணப்பித்துக் கொள்வதாகவும் சொல்கின்றன. போஸின் அச்சு நாட்டுக் கொள்கையை, பகிரங்கமாக, காந்தி நிராகரித்திருக்கிறார். அப்படியிருந்தும், மேலும் அபாயமான 'சட்ட மறுப்பை'த் தூண்டி விடுவதில் அந்த ரேடியோ நிலையங்கள் வெற்றி பெற்றுத்தான் இருக்கின்றன.

(3) இந்தியாவில், அச்சு நாடுகள் நுழைவதற்கு, தெற்கே வங்காளம், அஸ்ஸாம் இரண்டின் மூலமாகவும் ஜப்பான் தாக்க வேண்டு மென்றும், அப்போது வடமேற்கெல்லையில் இரண்டாம் போர்முனையைத் தாம் ஏற்படுத்துவதாகவும், ஹிட்லருக்கு, போஸ் வாக்களித்திருக்கிறார். இது சம்பந்தமாக, ஜெருசலேம் மப்டி, இராக் ரஷீத் ஆலி, ஆப்கானிஸ்தான் அமானுல்லா ஆகியவர்களை, போஸ் சந்தித்துப் பேசியிருக்கிறார். அவர்களுடைய ஜனங்களையும் இதில் இழுத்துவிட முயற்சித்திருக்கிறார். அகில ஆசிய முன்னணியைச் சிருஷ்டிக்கும் நோக்கத்துடன், ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கு முள்ள முக்கிய மனஸ்தாபங்களை யெல்லாம் சமரசம் செய்யவும், போஸ்

மூலதனம்!

சண்டையிலும் சமாதானத்திலும் பொருத்தமானவையும் உண்மையானவையும்............

வைரங்களே

உறைவிடம்

ஸாராஜ்மல்ஸ்

நாணயத்திற்கும் நம்பிக்கைக்கும்..........................

சென்ற அரை நூற்றாண்டுகளாக நிரந்தர நன்மதிப்புப் பெற்றுள்ளது.

ஆகையால்

ஸா ரா ஜ் ம ல் ஸ்

வைரங்களே !!!

313, எஸ்பிளனேட், மதராஸ்

'நந்தனார்,' 'ரிஷ்ய சிருங்கர்' படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்."

Ranjan

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸூஸ் டீ

M. N. K—15 TM.

முயன்றிருக்கிறார். காந்தியைப் போலில்லாமல், பலாத்காரத்தில் மட்டுமே போஸ் நம்பிக்கை வைத்திருக்கிறார். அதனால்தான், அனுபவம் வாய்ந்த முஸ்லீம் சோல்ஜர்கள் வேண்டுமென, அவர் கருதுகிறார்.

(4) ஐரோப்பாவில் ஹிட்லருக்குச் சாதகமாய்ப் பிரசாரம் நடக்கிறது. ஹீட்ரிச் மரணமடைந்த பின், போஸ் பிரேக்குக்குப் போய், போரிஸ் மன்னரைக் கண்டு பேசினார். பின்பு புகாரஸ்ட், பெல்கிரேட், புடாபெஸ்ட், துருக்கி ஆகிய இடங்களுக்கும் சென்றார். ஒவ்வோர் இடத்திலும் 'இந்தியாவின் விடுதலைப் போ'ருக்கு ஆதரவு தேட, அவர் முயன்றிருக்கிறார். சாமர்த்தியமாயும் தூஷணையாகவும் நடக்கும் பிரசாரத்தின் மூலம், அவர் 'ஜனநாயகத் தீமைக்குப் பலியான ஒரு வீரர்' என்று ஜனங்களிடம் செல்வாக்குப் பெற்றுவிட்டார். ஹிட்லரின் இந்த விசேஷ தூதர், "மேல் நாட்டு ஜன நாயக அரசுகளால் ஆளப்படும் தேசங்கள் எவ்வளவு கொடுமையாக நடத்தப்படுகின்றன என்பதை நான் நேரிலே கண்டிருக்கிறேன்" என்று பிரசாரம் செய்து வருகிறார். பின்லாந்து மான்னர் ஹீம், நார்வேயின் நட் ஹான்ஸம் இருவரையும் மிரட்டவும், இவருடைய பிரசாரம் உதவுகிறது. லவாலே, போஸ் சந்திக்கும்படி செய்யவும் ஏற்பாடு நடந்திருக்கிறது.

சுபாஷின் அபாயமான கொள்கை மிகவும் எளியது. அதாவது, இங்கிலாந்திடமிருந்து ஒரு நன்மையும் கிடைக்காது என்பதே அந்தக் கொள்கை. தன்னை ஒரு பெரிய ராஜ தந்திரி என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். ரோமுக்கும் பெர்லினுக்கும் விரோதமாக டோக்கியோவைக் கிளப்பிவிட்டு, இந்தியாவுக்கு நன்மை கிடைக்கச் செய்யலாம் என்று அவர் நம்புகிறார். உண்மையிலே, தம்முடைய பாஸிஸ்டு எஜமான்களின் கைக் கருவியாகவே போஸ் இருந்து வருகிறார். தங்கள் ஜனங்களைக் கேவலமான அடிமைகள் ஆக்கிய குருட்டு ஐரோப்பிய 'ராஜ தந்திரிகள்' என்ன செய்தார்களோ அதே துரதிர்ஷ்டமான வேலையைத்தான், போஸும் செய்து வருகிறார்.

★

அது ஒரு காலம்

விலை வாசிகள் மகா விபரீதமாய்ப் போயிருக்கிற இந்தச் சமயத்தில், அதை நினைத்தாலே நம்ப முடியாமலிருக்கிறது. இந்தியாவில் அப்படியும் ஒரு காலம் இருந்ததா என்று ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. 1628-ஆம் வருஷத்தில், வங்காளத்தில் சில விலைகளைப் பாருங்கள் :

500 ராத்தல் நிறையுள்ள கற்கண்டுக் கட்டி	ரூ.	4	0	0
75 ராத்தல் வெண்ணெய்	ரூ.	2	0	0
20 அல்லது 25 கோழிகள்	ரூ.	2	0	0
ஒரு பசுமாடு	ரூ.	1	0	0
200 ராத்தல் சர்க்கரை	ரூ.	0	8	0

இதெல்லாம் கற்பனை யல்ல. ஸெபாஸ்டியோ மான்ரிகே என்ற போர்ச்சுகீஸ் யாத்திரிகர் நேரிலே கண்டு, சொல்லியிருப்பது; அந்தக் காலத்தைச் சேர்ந்த மற்றும் பலர் ஆமோதித்திருப்பது. ஜே. ஜே. காம்போஸ் என்ற ஆசிரியர் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

விசித்திரம்!

● தலைவன் இல்லை: "இந்தியாவில் 1857-ஆம் வருஷம் நடந்த பயங்கரமான சிப்பாய்க் கலகம் அடக்கப்பட்டுத் தோற்றதற்குக் காரணம் என்ன?" என்று ஸர் லாரன்ஸ் என்ற பிரபலஸ்தரை ஒரு நண்பர் கேட்டார். சிப்பாய்க் கலக காலத்தில், கலகக்காரர்களைப் போரிட்டு அடக்கிய பிரசித்தமான சேனைத் தலைவர்களில் மிக முக்கியமான ஒருவர் ஸர் ஹென்ரி லாரன்ஸ். நண்பரின் கேள்விக்கு லாரன்ஸ் சொன்ன பதில் இதுதான்: "பல அதிசயங்களே காரணமாகும். அவைகளில் ஒன்று, அந்த லட்சத்தி ஐம்பதினாயிரம் கலகக்காரர்களிலே ஒரே ஒரு ராணுவத் தலைவன் இல்லை. அரைகுறை ராணுவத்தலைவனாவது ஒருவன் அவர்களுக்கு இருந்திருந்தால், இந்தியாவை நாம் இழந்திருப்போம்."

*   *

● அதுதான் பார்லிமெண்ட்: அமீர் அப்துர் ரஹிமான் கான், ஒரு சமயம் தம்மிடம் இருந்த ஓர் ஆங்கில உத்தியோகஸ்தரைப் பார்த்துச் சொன்னார்: "உங்கள் பிரிட்டிஷ் பார்லிமெண்டைப்பற்றி என் அபிப்பிராயம் என்ன என்று தெரியவேண்டுமானால், காபூலில் உள்ள எங்களுடைய பகிரங்க ஸ்நான கட்டடத்தைப் போய்ப் பாரும், தெரியும்." அந்த உத்தியோகஸ்தர் அப்படியே போய், அந்த பகிரங்கத் துருக்கியர் ஸ்நான மண்டபத்தைப் பார்த்தார். அங்கே ஏராளமான மனிதர்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் 'சள பள, சள பள' என்று உரத்த குரலில் ஏதோ பேசிக்கொண்டே யிருந்தார்கள். அந்தச் சத்தத்தை, உன்னதமான மண்டபம் 'கும் கும்' என்று எதிரொலி செய்துகொண்டிருந்தது. இந்தக் குழப்பத்தில் அத்தனை வார்த்தைகளும் உருச்சிதைந்தன. ஒரே ஒரு வார்த்தையைக்கூடத் தெளிவாய்க் கேட்கக்கூடவில்லை. ஒரே சந்தை யிரைச்சல்தான் மிச்சம்!

*   *

● யாரைப் பரிகாசம்: மல்லிக் முகம்மது என்ற பெருங் கவிஞரின் புகழைப்பற்றிக் கேள்விப்பட்ட ஷெர்ஷா (1542—45) என்ற மன்னர் அந்தக் கவிஞரைத் தன் தர்பாருக்குக் கூப்பிட்டனுப்பினான். கவிஞர் ஒரு நெசவுத் தொழிலாளி. பார்வைக்கு அழகாயிருக்கமாட்டார். அவரது உருவத்தைக் கண்ட அரசன், அதைப்பற்றிக் கேலிசெய்து சிரிக்கத் தொடங்கிவிட்டான். கவிஞர் பதற்றமடையவில்லை. அரசனைப் பார்த்து, இனிய, கம்பீரமான குரலில், அவர் சொன்னார்: "என் பிரபுவே! தாங்கள் சிரிப்பது படைக்கும் கடவுளைப்பற்றியா? அல்லது அவன் படைத்த படைப்பைப் பற்றியா?"

*   *

● தேயிலை விளம்பரம்: விளம்பரம் செய்வதை ஓர் அரிய கலை போல நடத்தி வருகிறார்கள் இந்தியத் தேயிலை போர்டார். எட்டு வகைக் கவர்ச்சியுள்ள விளம்பரங்களை அவர்கள் செய்கிறார்கள்: (1) யுத்த காலத்தில் தேயிலையின் உபயோகங்கள். (2) இந்தியத் தேயிலை வளர்ந்த விதம். (3) புராதன இந்திய ஓவியச் செல்வங்களிலிருந்து நகல் செய்த பெண் சித்திரங்கள். (4) தேயிலையின் பொதுவான குணதிசய வர்ணனைகள். (5) தேயிலை குடிக்கும் குடும்பங்களின் புகைப்படங்கள். (6) இந்தியப் பண்டிகைகளில் தேயிலை. (7) தொழிலாளருக்குத் தேயிலை உற்சாகமூட்டும் விதம். (8) இந்திய இளைஞரின் மனதைக் கவர்வதற்காகப் பிரபல விளையாட்டுக்காரர்களின் நற்சாட்சிகள் — இவ்வகைகளில் மொத்தம் 61 விளம்பரங்களைத் தயாரித்திருக்கிறார்கள். இவற்றில் 38 புதியவை; 23 பழையவை. அவர்கள் விளம்பரம் செய்யும் பல பாஷைப் பத்திரிகைகளின் கணக்கும் வருமாறு: (1) இங்கிலீஷ் 87; (2) ஹிந்தி 35; (3) உர்து 35; (4) வங்காளி 33; (5) தமிழ் 14; (6) தெலுங்கு 5; (7) கன்னடம் 5; (8) மராத்தி 4; (9) குர்முகி 3—இவ்வாறு 221 பத்திரிகைகளில் தேயிலை விளம்பரம் நடக்கிறது. அவை மொத்தம் 19,95,000 பிரதிகள் செலவழிவதாகவும், அவைகளை 5,08,67,500 பேர் படிப்பதாகவும் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

★

கேவலம் ஒரு புல்லுக்குத்தான் தமிழர்கள் என்ன மதிப்புச் செலுத்துகிறார்கள்! அவர்களது எளிமைக்கும் கலை உணர்ச்சிக்கும் வேறு சான்றும் வேண்டுமா?

அறுகு

மு. அருணாசலம்

வாழ்க்கையிலே எல்லாத் துறைகளிலும் மிக்க எளிமையான முறைகளைப் படைத்துக்கொண்ட நம்மவர்களின் இயல்பை நுணுகிப் பார்க்கும்போது வியப்பேற்படுகிறது.

இன்று நம்மிடையிலே, அறுகம் புல் இல்லாமல் எந்தத் தெய்வ வழிபாடும் இல்லை; எந்த வழிபாடானாலும், முதலிலே அறுகின் நினைவுதான் வருகிறது. வழிபடுகிறவர்கள் ஒரு 'பிள்ளையார்' பிடித்து வைக்கிறார்கள். (எந்தத் தெய்வத்துக்குமே, இந்தப் பிள்ளையார்தான் எளிதிலே கிடைக்கிற பிரதிநிதி.) ஆற்றங்கரையிலே ஒரு பிடி மணலைப் பிடித்து வைத்தால், பிள்ளையார் வந்துவிடுகிறார். இந்தப் பிள்ளையாருக்கு ஏற்றதொரு மலர் வேண்டுமே! நினைத்த இடத்திலெல்லாம் மலர் கிடைத்து விடுமா? கிடைப்பது நிச்சயமில்லை. தவிர, 'பார்க்கின்ற மலரூடும் நீயே இருத்தி; அப் பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்' என்கிறார் நம் அடியவரொருவர். ஆகவே, மலர் கிடையாவிட்டாலும் குற்றமில்லை.

மலர் இல்லாவிட்டால், வெறும் இலையே போதும்; 'எதும் பெருவிடில் பச்சிலை யுண்டு.' இந்தப் பச்சிலைதான் எதற்கு? தரையிலே தானாக முளைத்துக் கிடக்கும் புல்லொன்றே போதும் இறைவனுக்குச் சூட்டி வழிபடுவதற்கு, என்ற எண்ணமும் பழமையாகவே எழுந்து விட்டது. இதன் விளைவே, அறுகு சாத்துதல் என்ற வழக்கம்.

இறை வழிபாட்டிலே, இதனினும் பார்க்க எளிதான முறையைக் காண முடியாது. உள்ளன்பு மட்டும் இருக்குமானால், அற்பமான புல்லே போதும் இறைவனுக்குச் சூட்டி வழிபடுவதற்கு என்ற எண்ணமானது, சமய வழிபாட்டிலே நம் மக்களுடைய உன்னத நிலையைக் காட்டுகிறது.

சிவபெருமானுக்குரிய மலை என்ன, ஆறு என்ன, நாடு எது, ஊர் எது என்றெல்லாம் சொல்லித் தசாங்கம் பாடிய மாணிக்கவாசகர், 'சிவபெருமானுக்கு உவப்பான மாலை எது?' என்ற கேள்வியைக் கேட்டு, அறுகுதான் மிக்க உவப்பான மாலை என்று விடை கூறுகிறார்:

—தீயவினை
நாளும் அணுகாவண்ணம்
நாயேனை ஆளுடையான்
தாளி அறுகாம்உவந்த
தார்!

என்று மிக்க ஆராமையோடு பாடுகிறார். சிவாலயங்களிலே

அறுகை மட்டும் மாலையாகத் தொடுத்து அணிவிக்கும் வழக்கம் இன்றும் உண்டு. பசிய அறுகு மாலை மனதுக்கு மகிழ்ச்சி யளிக்கும் காட்சி.

முதன் முதலிலே வயலில் உழத் தொடங்கும் உழவர்கள், ஏருக்கு மாலை சூட்டி வாழ்த்துவார்கள். நீர் வளமிகுதியாலே, வயலோரங்களில் குவளை மலர்கள் பூத்திருக்கும். அந்த மலரைப் பறித்து, அதனோடு அறுகையும் இடையிட்டுத் தொடுத்து, பழைய கதிரையும் சேர்த்து மாலையாக ஏருக்குச் சூட்டி வழிபடுவார்கள். 'ஏர் மங்கலம்' என்ற சில மங்கல வாழ்த்துப் பாடல்களைப் பாடி, பிறகு உழத் தொடங்குவார்கள்.

அறுகினால் தொடுத்த மாலை மனதுக்கு மகிழ்ச்சி தருவது போலவே, விரிந்து பரந்த அறுகம் புல் வெளியாகிய இயற்கைக் காட்சியும் மனதுக்கு உவப்பாயிருக்கிறது. இக் காலத்தில் நகர்ப் புறங்களில் அமைக்கப் பெறும் நாகரிகப் பூந்தோட்டங்களிலே, புல்வெளி இன்றியமையாததொரு பகுதியா யிருக்கிறது. இப் புல் வெளிக்கு ஏற்ற புல், அறுகம் புல்; ஆனையறுகு, தாளியறுகு என்றெல்லாம் சொல்லப் பெறும். எத்தகைய கட்டாந்தரையிலும், இது ஆழ வேர்விட்டுப் பற்றிக் கொண்டு தழைத்துவிடும். 'ஆல் போல் தழைத்து, அறுகுபோல் வேரோடி, மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திரு' என்று வாழ்த்துகிற தொடரிலே, அறுகினிடம் அமைந்துள்ள இந்த இயல்பு காணப்படுகிறது.

கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை யவர்கள், இந்த அறுகம் புல்லைக் குறித்து ஒரு பாடல் பாடியிருக்கிறார். 'பசும் புல் என் பெயர்; பட்டபாடு எலாம் உரைப்பதும் எளிதோ' என்று தன் கதையைப் புல் உரைக்கத் தொடங்குகிறது. நகைச் சுவை ததும்பும் இந்தப் பாடலிலே, தழைத்துச் செழிக்க வேண்டுமென்று அறுகம் புல் எவ்வளவு ஆர்வம் கொண்டிருக்கிறதென்பதையும், பிறர் அதை அழித்து விட எவ்வளவுதான் முயன்ற போதிலும் அத்தனை அழிவையும் அது எப்படி உறுதியாகப் பொறுத்து நிற்கிறதென்பதையும் காணலாம்.

இப்படிப்பட்ட அறுகம் புல்லை, வழிபாட்டுக் கேற்ற எளிய பொருளாகக் கொண்டதனாலே, அதனிடத்து மக்களுக்கு மிக்க ஈடுபாடு உண்டாயிற்று. எத்தனையோ முறைகளிலே அதைப் பாராட்டத் தொடங்கினார்கள். அரசர்கள், பெண்டிர் முதலியவர்கள் முழுகுவதற்கான நீரிலே, நறுமணத்துக்காக மலரிட்டு வைக்கும்போது, கூடவே அறுகையும் இட்டார்கள்; இந்த வழக்கத்தை, 'அறுகு வெண்மலர் அளாய வாசநீர்' என்ற சிந்தாமணித் தொடரிலே காண்கிறோம்.

மங்கலப் பொருள்களில் ஒன்றாகவும் அறுகம் புல்லை நம்மவர் வழங்கி வந்தார்கள். கண்ணகியின் தோழியாகிய தேவந்தி என்பவள், சாத்தன் கோயிலுக்குப் போகிறாள். அறுகையும் சிறு பூளை மலரையும் நெல்லையும் கலந்து தூவி, "கண்ணகி யிடம் கோவலன் திரும்பி வரவேண்டும், இருவரும் சேர்ந்து வாழ வேண்டும்" என்று சாத்தனைக் குறை யிரக்கிறாள்.

புகார் நகரத்திலே இந்திர விழா நடக்கிறது. கோவலனும் மாதவியுமாகக் கடலாடச் செல்கிறார்கள். ஏவலாளரும் தாசியரும்

வீதியின் இருமருங்கிலும் சூழ்ந்து, மலரையும் அறுகையும் நெல்லையும் மங்கலமாகச் சிந்துகிறார்கள்.

மங்கலச் சடங்குகளின்போது, தலைவனை நீராட்டுவதுண்டு. முடிசூட்டுவிழாவிலே மன்னனையும், மணவிழாவிலே மணமக்களையும், மணியை விருத்தி, எண்ணெய் பூசி நீராட்டுவது மரபு. அறுகை நெய்யிலே தோய்த்துப் பூசுவார்களாம்.

நம்மிடையே இன்றும் ஒரு வழக்கம் இருக்கிறது. மணப்பந்தரிலே மணமக்களை இருக்கச் செய்து வாழ்த்தும்போது, அரிசியையோ பொரியையோ அள்ளித் தூவி வாழ்த்துகிறோம். இதையொத்ததொரு செயலுக்கு, 'அறுகிட்டுப் பல்லாண்டு பாடுதல்' என்ற பெயர் முன்னமே வழங்கியது. அரிசியோடு கூட, அறுகையும் கலந்து தெளிப்பார்கள் போலிருக்கிறது. நாம் மஞ்சள் பூசிய அரிசியும் மலரும் கலந்து தெளிப்பது போல் அதை, 'அச்சுதந் தெளித்தல்' என்று சொல்வதுண்டு.

அங்கவை சங்கவை என்ற பெண்களுக்கு அவ்வையாரே உடனிருந்து மணமுடித்து வைக்கிறார். தமிழ் வேந்தர் மூவரும் மணமக்களை வாழ்த்துவதற்காகப் பந்தரிலே வந்து நிற்கிறார்கள் :

> திங்கட் குடையுடைச்
> சேரனும் சோழனும்
> பாண்டியனும்
> மங்கைக் கறுகிட
> வந்துநின் றார்மணப்
> பந்தரிலே—

என்று, அறுகிட்டு வாழ்த்தும் வழக்கத்தை அவ்வையார் குறிப்பிடுகிறார்.

அறுகினிடத்து நம் மக்களுக்கு உண்டான ஈடுபாடு, இவ்விதமாக எத்தனையோ வகையில் வெளிப்படக் காண்கிறோம். இந்த அனுபவங்களையெல்லாம் மனதிலே இருத்தி, மாணிக்கவாசகர் அருளிய பாடலொன்றைப் பார்க்கலாம்.

> ## இலக்கிய உரைகல்
>
> **இலக்கியப் பசி என்னை விடவில்லை. என் பையில் ஏதாவது நல்ல நூல்களை எப்போதும் நான் வைத்திருப்பேன்; திருப்பித் திருப்பிப் படிப்பேன். எனினும், இயற்கைதான் என் உரைகல். அதில், எல்லா நூல்களையும் பதம் பார்ப்பேன். அகராதி, இலக்கணம் வைத்து இலக்கியங்களை நான் அளவிடுவதில்லை : காடும் மலையும், கதிரும் கடலும், நம் நூல்களை நிதானிக்கின்றன ; உடலைக் கடந்த உள்ளான்மா, 'இது இப்படி' என்று தீர்மானிக்கிறது.**
>
> —வால்ட் விட்மன்.

பண்டைக் காலத்திலே, பெண்கள் தம் நாயகர் நீராடும் பொருட்டு வாசனைப் பொருள்கள் கலந்த பொடியிடிப்பார்கள். (முத்தொள்ளாயிரம் போன்ற நூல்கள் இவ்வழக்கத்தைக் குறிப்பிடுகின்றன.) இந்தப் பொடியைச் சுண்ணமென்றும், உபசாரமாகப் பொற்சுண்ண' மென்றும் சொல்வதுண்டு. காஞ்சி நகரிலே, ஏகாம்பரநாதருக்குத் தொண்டு பூண்டொழுகும் இளம் பெண்கள், தங்கள் தலைவர் நீராடுவதற்குரிய பொற்சுண்ணம் இடிக்கிறார்கள். நேரமோ ஆகிவிட்டது. தலைவர், நீராடும் பொருட்டு, கோயிலை விட்டு ஆற்றுக்கு எழுந்தருள வேண்டிய சமயம் நெருங்கிவிட்டது. சுண்ணமோ, இடித்து முடிக்கவில்லை. அப்போது, ஒரு பெண்ணானவள், மற்றெல்லோரையும் நோக்கி, "விரைவாகப் பொற்சுண்ண மிடியுங்கள்" என்று அவசரப்படுத்துகிறாள்.

இப்படி அவள் அவசரப்படுத்துவதற்கு மற்ருெரு காரணமும் இருக்கிறது. நீராடுவதற்காகக் கோயிலிலிருந்து தலைவர் வெளிப்படும்போது, அடியார் குழாத்தினர் அனைவரும் அறுகு, பூ, நெல் முதலிய மங்கலப் பொருள்களைக் கையிலேந்தி, வீதிகளிலே தூவுவது வழக்கம். இப்படித் தூவும் போது, தினந்தோறும் இப்பெண்களே முன்வரிசையில் நிற்பார்கள்; அறுகு வைத்துள்ள தட்டைக் கையிலேந்தி முன்னுலே வந்து நின்று கொள்வார்கள். ஆனுல், இன்றைக்கு, சுண்ணமிடிப்பது சிறிது காலந் தாழ்த்தமை காரணமாக, தாங்கள் முதலிலே சென்று அறுகு தூவ இடங் கிடைக்காதோ என்று அந்தப் பெண் கவலைப்படுகிருள். அடியார் குழாத்திலுள்ளவர்களான அயனும் அரியும், 'நான், நீ' என்று முதலிடத்துக்குப் போட்டி போடுவார்கள். இன்று அவர்கள் முந்திக்கொண்டால் தங்களுக்கு இடம் இராதே என்று இவள் அஞ்சுகிருள். தவிர, இந்திரன் முதலான எத்தனையோ தேவர்களுக்கு, 'இப்பெண்கள் முன்னுலே வந்து விடுகிருர்களே!' என்று எப்போதும் பொருமையுண்டு. ஆகவே, இவர்கள் நேரத்தோடு அங்கே இராவிட்டால், அவர்கள் முந்திக்கொள்வார்கள்; அதற்கு இடங் கொடுத்தலாகாது. தங்களுக்குப் பின்னுலே தேவர்கள் வந்து அறுகு எடுக்கலாமேயன்றி, முன்னுலே போகவிடக் கூடாது என்று உறுதி கொள்ளுகிருள்.

இந்த உறுதியோடு, மற்றப் பெண்களை நோக்கி, "எம் பெருமான் நீராடுதற்கு வேண்டிய சுண்ணத்தை விரைவிலே இடிக்க வேண்டும்; அவனுடைய கோயிற் பெருமையைப் பாடிக்கொண்டு, வேலையிலே சிறிதும் சோர்வு தோன்ருமல், நாம் இடித்து முடிப்போமாக!" என்கிருள்.

இந்த பாவத்திலே மாணிக்கவாசக சுவாமிகள் அருமையானதொரு சுண்ணப்பாட்டுப் பாடுகிருர்:

அறுகெடுப்பார்
அயனும் அரியும்
அன்றிமற் றிந்திர
னேடு அமரர்

நறுமுறு தேவர்
கணங்கள் எல்லாம்
நம்மிற் பின்பல்லது
எடுக்கவொட்டோம்;

செறிவுடை மும்மதில்
எய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற்
கோயில் பாடி,

முறுவற்செவ் வாயினீர்!
முக்கண் அப்பற்கு
ஆடப் பொற்சுண்ணம்
இடித்தும் நாமே!

சுண்ணமிடிக்கும் பெண்கள் அனைவரும் தன்னேடு ஒத்து விரைந்து வேலை செய்ய வேண்டும் என்றெண்ணி இவள், "முறுவல் பூத்த சிவந்த வாயுடைய தோழிகளே!" என்று மற்றவர்களை நயமாகப் புகழ்கிருள்.

சுண்ணமிடிப்பதைப் பாடவந்த அடியார், அறுகு எடுத்தலையும் அறுகு தூவுதலையும், அறுகு சாத்துதலையும் அனுபவித்து இந்த முறையிலே பாடினுர். அவர் உள்ளத்தெழுந்த ஆர்வத்தோடு இப்பாடலை நாமும் பாடினேமானுல், அதைப் பாடுந்தோறும், படிக்குந்தோறும், உள்ளத்திலே எல்லையில்லாததோர் உவகை ஊற்றெடுக்கும்.

தாளி அறுகின்
தாராய் போற்றி!

என்று நாமும் போற்ற எண்ணுவோம்.

★

சொற்பன உலகம்

மாலைப் பொழுதின் மயக்கத்திலே — வீணை
மங்கிய சொப்பன லோகத்திலே
நீலத்திரை புரண் டாடி நின்ற — ஒரு
நின்மலப் பொய்கைக் கரை அடைந்தேன்

எங்கும் எனைச்சுற்றிப் பொன்மரங்கள் - தரை
எங்கும் மரகதப் பொன்விரிப்பு
எங்கும் பறவையின் கீதவொலி — அதற்
கேற்ற ம்ருதங்கம் அலைச்சிரிப்பு

வெள்ளி விதைத்த அகல்வானில் — மணி
வைரப் பயிர்செய்யும் கூனற்பிறை
வெள்ள மெனஒளி பாய்ச்சுவதைக் — கண்டு
மேனி சிலிர்த்தது சோலைநிழல்

சீதக் கதிர்மதிப் பக்கத்திலே — நின்று
செந்தழல் மூட்டினன் சூரியனும்
பூதத்தின் கையென நீண்டபுகை — வானில்
பொங்கிப் பரந்து கறுத்ததுவே

தேரைகள் பாம்பின் முதுகேறி — இன்ப
தெய்வக் கவிதைகள் பாடினவே
கோரை மலர்கொய்து மாலைகட்டி — எதிர்
கொண்டு மயிற்குலம் ஆடினவே

கோங்கில் குமுதம் மலர்ந்திடவே — குளிர்
சந்தமும் மாந்தளிர் ஈன்றதுவே
வேங்கைப் புலியே நட்டுவனாய் — மாறி
விந்தை நடனம் புரிந்ததுவே

முருங்கை மரத்தினில் வேதாளம் — வெண்
முல்லை நகையினிற் காமவல்லி ;
தரங்க அலையினில் தாமரையாள் — மழை
தங்கும் மலையினில் மாமயிலோன்

பேசிய தெல்லாம் இசையாச்சு — மனம்
பின்னிய தெல்லாம் கலையாச்சு
கூசிய தெல்லாம் குலைந்தாச்சு — குறை
கூடிய தெல்லாம் நிறைவாச்சு

பூமியினைத் தொடப் பொன்னாச்சு — உளப்
புண்களும் சாந்தி மலராச்சு
நாழிகை ஓட மறந்தாச்சு — ஞால
நள்ளிருள் ஞான ஒளியாச்சு.

— 'நாணல்'

அவள் ஒரு ஹரிஜனச் சிறுமி. உயர் ஜாதிப் பெண் பரிமளா. அவர்களுக்குள்தான் என்ன நேசம்! ஆனால், அது முடியும் விதமோ.....................?

அஞ்சலை

'நாரா'

பரிமளா, தன் பட்டுப் பாவாடையை மண்ணிலே விழாதபடி கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு, காலால் தரையில் கோடு கிழிக்கத் தொடங்கினாள். பாண்டி ஆட்டத்துக்குப் பாதிக் கோடு கிழித்து முடிந்தது. சட்டென அவளுக்கு ஓர் உண்மை உதித்தது. பட்டுப் பாவாடையோடு இப்படிப் புழுதியில் விளையாடுவது கௌரவக் குறைவு அல்லவா! பெரிய வீட்டுச் சிறு பெண்களைப் போல, நாசுக்காய் வீட்டு முற்றத்திலே தானே, நகத்தில் அழுக்குப் படாமல், விளையாட வேண்டும்?

இருந்தாலும், தன் தோழி அஞ்சலையோடு சேர்ந்து விளையாடுவதிலே பரிமளாவுக்குத் தனிப் பிரியம். அஞ்சலை மாதிரி பாண்டி ஆட ஒருத்தியாலும் முடியாது.

அஞ்சலை, பண்ணையாள் சடையனின் மகள். பறையன் மகளானாலும், இந்த எட்டு வருஷங்களாகப் பரிமளாவும் அஞ்சலையும் அக்காள் தங்கை போலவே, நெல்லிக்குப்பத்தில் ஒன்றாக வளர்ந்து வந்திருக்கிறார்கள். பரிமளாவின் தகப்பனார், சடையன் விஷயத்தில் நிரம்பச் சலுகை காட்டி வந்தார் என்றே சொல்ல வேண்டும். இல்லா விட்டால், பறையனை - என்னதான் நம்பிக்கையான, நாணயமான ஆளானாலும் - வீட்டோடு வைத்திருக்க, அசல் வேளாளரான அவரது மனம் இடங் கொடுக்குமா?

"அஞ்சலை! அடி, அஞ்சலை! சுறுக்கா வாடி, இங்கே!" என்று பரிமளா கூவினாள்.

தோட்டத்துக் குடிசையிலிருந்து ஒரு சிறுமி குதித்துக் கொண்டு ஓடி வந்தாள். புது நிறமாய்க் கொழு கொழு என்று, பார்க்க நன்றாயிருந்தாள். செழிப்பான முகம். ஒளி வீசும் கண்கள்.

"என்னடி, பரிமளா! கோடு போட்டிட்டியா? நான் போயி நல்ல சில்லாய்ப் பார்த்துப் பொறுக்கியாரண்டி.............."

விடிந்தால், பட்டணத்திலிருந்து பரிமளாவின் அத்தை மகள் ராஜாத்தி வந்துவிடுவாள். பட்டணத்து விளையாட்டுக்கள் எல்லாம் சொல்லுவாள். எவ்வளவு குஷியாயிருக்கும்! அவளோடு சேர்ந்து ஆடினால், எவ்வளவு நன்றாயிருக்கும்! சரி...அஞ்சலையிடம் ராஜாத்தி வருவதைப் பற்றி......சே, சே! சொல்லப் படாது......இருந்தாலும்......

அப்போது, அஞ்சலை, கையும் சில்லுமாய் வந்து சேர்ந்தாள். உடனே பரிமளாவின் மனம் பாண்டிக் கோட்டில் சென்றது. மறு விநாடி, எதையோ நினைப்ப

வள்போல் நிலத்தைப் பார்த்தும் பாராதவள் மாதிரி சும்மா நின்ருள்.

அப்புறம், "அஞ்சலே! இன்றைக்கு வேண்டாம். எனக்கு ஒரு மாதிரியாய் வருகிறது. நாளைக் காலே ஆடுவோம்" என்று சொல்லி விட்டு, மெல்ல வீடு நோக்கி நடந்தாள்.

மறு நாட் காலே ஒரு கறுப்பு மோட்டார் வண்டியில் ராஜாத்தியும் அவளுடைய தாயும் வந்து சேர்ந்தார்கள். ராஜாத்திக்கும் பன்னிரண்டு வயதுதான் இருக்கும். ஊதாப் பட்டுப் பாவாடையும், ரோஜா நிறச் சட்டையும் போட்டிருந்தாள். தலேமயிரை இரட்டை ஜடை போட்டு, நுனியில் சிவப்பு ஜரிகை நாடாப் பின்னி வைத்திருந்தாள். காலில், மேல் ஜோடு, காலணி எல்லாம் மாட்டி யிருந்தாள். அவளுடைய சிவந்த நிறத்துக்கும் இந்த அலங்காரங்களுக்கும் நிரம்பப் பொருத்தமாய் இருந்தது.

மோட்டாரை விட்டு இறங்கி, அவள் நடந்துவந்த நடையே ஒரு புது மாதிரியாய் இருந்தது. சாதாரணமாய்ச் சிறுமிகள் போலக் குதித்தோடி வரவில்லே. தன் அந்தஸ்தை நன்கு உணர்ந்த வயது வந்த பெண் மாதிரி வெகு லாகவமாய் நடந்து வந்தாள்.

"வாங்கோ அத்தை! வாடி, மச்சி ராஜாத்தி!"

"பரிமளா! என்னே 'மச்சி, குச்சி' என்றெல்லாம் அழைக்காதே! என்னே ராஜேசுவரி என்று கூப்பிடு" என்று சற்றுக் கோபமாய் ராஜாத்தி மொழிந்தாள்.

"உன் பெயர் 'ராஜாத்தி' என்றுதானே அப்பா சொன்னர்?"

"அது என் பாட்டி வைத்த பெயர். எனக்கு அது கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லே. ராஜாத்தி யாவது, ராணித்தியாவது!"

"சரி, ராஜாத்—உம்—ராஜேசுவரி! பாண்டி ஆடலாம் வருகிருயா? முதலிலே, உன் உடுப்பை மாற்றிக் கொண்டு—" என்று முடிப்பதற்குள்—

"எனக்கு இந்தப் பட்டிக்காட்டு ஆட்டமெல்லாம் பிடிக்காது. தோட்டத்துக்கு வேண்டுமானல் போய்ப் பூப் பறித்து வரலாம். வா" என்று இடைமறித்துக் கூறினள் ராஜாத்தி.

★

பூவை ஜமக்காளத்துக் கருகே வைத்து விட்டு, ஒரு கும்பிடு போட்டாள்.

★

> **எண்ணெய்க் கடுதாசு**
>
> எண்ணெய் ஊறிய கடுதாசில் ஒன்றும் எழுத முடியாது. அது போலவே, துன்மார்க்கமும் பெருமித வாழ்க்கையுமாகிற எண்ணெய்ப் பசையால் கெட்டுப்போன ஆத்மா வானது பக்திக்கு உதவாது. எண்ணெய்க் கடுதாசின் மீது சுண்ணும்புப் பொடியைப் பரப்பினுல், எழுது வதற்கு உபயோகப்படும். அதுபோல வைராக்கியமென்னும் சுண்ணும்புப் பொடியை அந்த ஆத்மாவின்மீது பரப்பினுல், அது மறுபடியும் பக்திக்கு உரியதாகும்.
>
> —ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

"சற்று இரு. உனக்கு ஒரு ஜமக்காளம் எடுத்து வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே பரிமளா வீட்டுக்குள் ஓடிப்போய், ஜமக்காளத்துடன் திரும்பி வந்தாள்.

இருவரும் பூந் தோட்டத்துக்குள் போனுர்கள்.

"உனக்கு என்ன என்ன விளையாட்டுத் தெரியும், ராஜேசுவரி?"

"பட்டணத்திலே நாங்கள் எல்லா ஆட்டமும் ஆடுவோம். கேரம் ஆடுவோம், மேஜை டென்னிஸ் ஆடுவோம், டிராப்ட்ஸ் ஆடுவோம், மொனுப்பலி ஆடுவோம். - இதெல்லாம் எனக்குச் சலித்து விட்டது. உனக்கு என்ன விளையாட்டுத் தெரியும்?"

பரிமளாவுக்கு வெட்கமாய்ப் போச்சு. கிளித்தட்டு, தாயக்கோடு, சொட்டாங்கி இவைகளைப்பற்றி இந்தப்பட்டணத்துப் பெண்ணிடம் சொன்னுல், அவள் சிரிப்பாய்ச் சிரிக்க மாட்டாளா?

"எனக்கு அம்மானை ஆடத் தெரியும், பாண்டி ஆடத் தெரியும்."

"இதென்னடி, அம்மானையும், அத்தானையும்! இப்படியும் ஒரு விளையாட்டா?"

"நான் ஒன்று சொல்கிறேன். அதுதான் சரி. தெருவுக்கு வா. நீ ஜமக்காளத்தில் உட்கார்ந்து கொள். அஞ்சலையும் நானும் பாண்டி ஆடுகிறும். உனக்குக் கட்டாயம் அவளுடைய ஆட்டம் பிடிக்கும். அவள் என்ன அருமையாய் ஆடுவாள், தெரியுமா?

"அஞ்சலையா? அவள் யாரடி?"

பரிமளாவின் முகம் வெட்கத்தால் மறுபடியும் சிவந்தது.

"அவள்........அவள்.......என் தோழி" என்று, என்னத்திலோ பரிமளா தயங்கித் தயங்கிச் சொன்னுள்.

வீட்டெதிரே தெரு ஓரத்தில் ராஜாத்தி ஜமக்காளத்தில் ராஜாத்தி மாதிரியே அமர்ந்து கொண்டாள்.

"அஞ்சலை! அஞ்சலை!" என்று பரிமளா கூவினுள்.

அஞ்சலை குதித்துக்கொண்டு ஓடி வந்தாள்.—ராஜாத்தியைப் பார்த்து விட்டதும், எட்ட விலகி நின்றுகொண்டு, "வாங்கோ, அம்மா" என்று மரியாதையாய்ச் சொன்னுள்.

அவளை ஏற இறங்க ஒரு முறை பார்த்துவிட்டு, "நீ பரிமளா அம்மாளின் கூடப் பாண்டி ஆடுவாயாமே!—எனக்கு ஆடப் பிரியமில்லை. தோட்டத்திலே மல்லிகைப் பூ இருந்தால், பறித்து வா. நாங்கள் அதைக் கோத்துத் தலையில் வைத்துக் கொள்வோம்" என்று அதிகார தோரணையில் ராஜாத்தி சொன்னுள்.

அஞ்சலை 'திரு திரு' என்று விழித்தாள். பரிமளாவை இரக்கமாய்ப் பார்த்தாள். பரிமளாவுக்கு

இன்னது சொல்வதென்று தோன்றவில்லை. கடைசியில், "ஆமாம். போ, அஞ்சலை. சீக்கிரமாய்ப் பூவைக் கொண்டு வா" என்றாள்.

அஞ்சலை கலக்கத்தோடு பரிமளாவைப் பார்த்தாள். அப்புறம், சோர்ந்த நடையில், தோட்டம் நோக்கி நகர்ந்தாள்.

"தோழியைப் பாரு, தோழியை! பறைச்சிதான் உனக்குத் தோழியோ?"

"எனக்கு அவளிடம் ரொம்பப் பிரியம். எத்தனையோ வருஷமாய் அவளோடு நான் ஒன்றாய் விளையாடி வருகிறேன்."

"நீ ஒரு பாப்பாவாய் இருந்தபோது, அப்படி விளையாடி இருக்கலாம். வயதான பிறகுமா, பறைச்சி கூட்டு!"

பரிமளாவுக்கு நெஞ்சிலே என்னவோ 'படக்' கென்றது. மூச்சுச் சரியாய் வரமாட்டேனென்றது. அவளை அறியாமல் அவளுக்கு அஞ்சலை மீது ஒரு வித அசூயையும் விழத்தொடங்கிற்று. அஞ்சலை சடக்கென்று நிரம்பத் தொலையில் விலகிப் போய்விட்ட மாதிரி தோன்றியது.

சிறிது நேரத்தில் ஒரு சிறு குடலையில் பூவோடு அஞ்சலை திரும்பினாள். தோட்டத்துக்குப் போன அஞ்சலை தன் வீட்டுக்குள் சென்று இந்தக் குடலையை எடுத்து வந்திருக்கிறாள். அந்தச் சிறிது நேரத்துக்குள்ளே அவளுடைய நடப்புப் பொடுக்கெனத் தலைகீழாய் மாறி விட்டது. வணக்க ஒடுக்கத்தோடு, துணைக் கரம் ஏந்தியபடி, எட்டி நின்று கொண்டு, பூவை நீட்டினாள். தன் தாழ்த்தப்பட்ட அப்பன், மேல் ஜாதியாரிடம் எப்படிப் பணிவாய் நடந்துகொள்வானோ, அப்படியே, அஞ்சலை இப்போது நடந்து கொள்ளத் தொடங்கி விட்டாள்! அவள் ஒரு சின்னஞ் சிறு 'பறைக் குட்டி' ஆகிவிட்டாள்! அவள் கன்னங்களிலே கண்ணீர் பெருகிக் காய்ந்திருந்தது.

பூவை ஜமக்காளத்துக் கருகே மரியாதையாய் வைத்து விட்டு, ஒரு கும்பிடு போட்டாள். ராஜாத்தி, மரியாதையை ஏற்றுக் கொண்டது போல், தலையைக் கம்பீரமாய் அசைத்தாள்.

பரிமளாவின் கண் கலங்கியது. கண்ணை இறுக மூடிக்கொண்டாள். மறுபடி கண்ணைத் திறந்த போது, அஞ்சலை அங்கே இல்லை.

ராஜத்தியோடு இருப்பது பரிமளாவுக்கு நிரம்பச் சங்கடமாய் இருந்தது. இரண்டு நாளில் ராஜாத்தி பட்டணம் திரும்பி விட்டாள். பரிமளாவின் நெஞ்சில் அமுக்கிக்கொண்டிருந்த பாறுங் கல் கீழே உருண்டது. பரபர என்று தோட்டத்துக்கு ஓடினாள்.

"அஞ்சலை! அஞ்சலை!" என்று உச்சத்தொண்டையில் கத்தினாள்.

பதில் இல்லை; ஆளும் வரவில்லை. கொஞ்சம் உற்றுக் கேட்டாள். தோட்டக் குடிசையில் ஏதோ பேச்சுக் குரல் கேட்டது.

"இன்னா புள்ளே, இப்படிச் சிணுங்குறே! அழுதாப்பிலே என்னா ஆவும்? எசமாம் பொண்ணு எங்கே, இந்தப் பறநாயி புள்ளே நீ எங்கே! என்னாதான் இருந்தாங்காட்டியும் வெத்தாசம் வெத்தாசந்தாங்கிறேன். உனக்கு வாணாம் போ. பரிமளாம்மா கிட்டே, சேதியெச் சொல்லிப்புடு. இனி இந்தச் சங்காத்தம் வெச்சிக்காதே! சொல்றது தெரியிலே?"

சிறிது பொறுத்து, கண்ணைப் பாவாடைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு, அஞ்சலை வெளியே வந்தாள்.

"சடையன் சொன்னது என் காதில் விழுந்தது" என்றாள் பரிமளா. ராஜாத்தி மாதிரியே அவளது குரலில் அதிகாரம் தொனித்தது. அதே சமயத்தில் நெஞ்சில் துக்கம் பொங்கி வழிந்தது.

கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்ற அஞ்சலையைப் பார்த்த போது, பரிமளாவுக்கு ஒரு விஷயம் புலனாயிற்று. அஞ்சலையைத் தன்னோடு விளையாடக் கூடாதென்று தடுத்திருந்தது ராஜாத்தி அல்ல - சடையன்தான்! ராஜாத்திக்கு மரியாதை செய்யவே பரிமளா ஒதுங்கினது போல் இருந்தாள்.

ராஜாத்தி இருந்த வரையில், அவளது பரிகாசத்துக்குப் பயந்து, தான் அஞ்சலையை விட்டுச் சற்று விலகியிருக்க வேண்டியிருந்தது. அதுதான் நியாயம். ஆனால், இப்போது அவள் பட்டணம் போனதும், மறுபடியும் முன்போல அஞ்சலையை அழைக்க நினைத்தாள்; அவளோடு விளையாட விரும்பினாள். மேல் ஜாதியோ, கீழ் ஜாதியோ, அஞ்சலையிடம் பரிமளாவுக்கு அடங்காத ஆசை.

"ஒங்கூடச் சேரக் கூடாதாம். எங்க அப்பா சொல்ருரு" என்று திடுமெனச் சொன்னாள் அஞ்சலை.

"அது என் காதில் விழுந்தது" - என்றபோது, வைதீகக் காரகரப்பு, பரிமளாவின் மழலைக் குரலில் மணல் தூவியது போல் இருந்தது. தனக்குப் பிரியமில்லாவிட்டாலும், தன்னையறியாமலே ஜாதி இறுமாப்புக் கொண்டவள் போல நடித்தாள் பரிமளா.

"நான் போகணும். உங்களுக்கு — உங்களுக்கு......என்ன மாச்சும் வேலை இருந்தா......" என்று மரியாதையோடு அஞ்சலை இழுத்தாள்.

பரிமளா தலையை அசைத்தாள். ராஜாத்தியும் இப்படித்தான் தலையை அசைத்தாள் நேற்று.

ஜாதி இந்துக்கள் என்பவர்கள் எல்லாரும் தாழ்த்தப்பட்டவர்களைக் கண்டால் செருக்கோடு இப்படித்தான் தலையசைப்பது வழக்கம். தேவலோகத்தில் இருப்பதாய்ச் சொல்லும் தெய்வம், கூட மனிதப்புழுவைக் கண்டால், இப்படித்தான் இறுமாந்து தலையை அசைக்குமாம்.

அஞ்சலை, ஒரு நொடி நேரம் தயங்கி நின்றாள். பிறகு, திரும்பிப் போய்விட்டாள்.

பரிமளா, இமை கொட்டாது அஞ்சலையையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவளது இதயத்தில் இருந்து ஏதோ ஒன்று நிலை பெயர்ந்த மாதிரி சொடுக்கிற்று. ஆத்திரத்தோடு பாண்டிக் கோட்டை அழிக்கக் காலைத் தூக்கினாள். அது உயிர்த் துடிப்பு நின்றுவிட்ட உடம்பு போலச் செயலற்றுத் துவண்டு தொங்கிற்று. அப்படியே, தூக்கிய காலைத் தரையிலே வைக்காமல், ஊழிக் கூத்தாடிய தில்லை நடராஜன் போல, விறைத்தது விறைத்தபடி நின்று விட்டாள். நெஞ்சு, அடிபட்ட சின்னஞ்சிறு சிட்டுக் குருவி போலச் சொல்லொணா வேதனையோடு படபடத்தது. பரிமளாவின் அந்த மன வேதனையிலே மேற்குலச் செருக்கென்ற பிசாசு, கோர தாண்டவம் ஆடிற்று; வெற்றித் தாண்டவம்!

★

பூக்காரி

சேர்த்துக் கட்டியமுல்லை வேண்டும்என்றேன் — நல்ல
சேயிழை அவள்சிரிப்பு முல்லைதந்தாள்.

பார்த்துப் பறித்த தாமரைப்பூத்
தீர்த்து விலைக்குக் கொடடி என்றேன்.
பூத்த முகத் தாமரையால்
புதுமை காட்டி மயக்கிநின்றாள். (சேர்த்து)

தேவையடி தாமரையிதழ் என்றேன் — அவள்
தேனொழுகும் வாயிதழ் மலர்கின்றாள். ஒரு
பூவைக் காட்டிப்பேர் சொல்என்றேன்.
பூவை என்பேர் பூவைஎன்றாள்.
ஆவல் அற்றவன் போல்நடந்தேன்.
அவள் விழிதனில் அலரிகண்டேன். (சேர்த்து)

காவல்மீறிக் கடைக்குவந்து விழுந்து — பலர்
கண்பட்டதால் வாடிய மருக்கொழுந்து
மேவாதடி என்று சொன்னேன்.
வேங்கையில் ஈ மொய்க்காதென்றாள்.
தேவைக்குமணம் வேண்டும் என்றேன்.
திருமணம் என்று தழுவிநின்றாள். (சேர்த்து)

— 'பாரதி தாசன்'

★ மாதிரி மனிதன் ★ — ராதா

எங்கள் தெருவுக்கு ஜாகை வந்த அந்தப் புதிய மனிதரைக் கண்டு, வீதியிலுள்ள பெண்கள் ளெல்லாம் ஒரேயடியாய்ப் பித்துப் பிடித்து விட்டார்கள். அவர் ஒன்றும் அப்படி அதிரூப சுந்தர மன்மத ரல்ல.

அவருக்கு வயது ஐம்பதாகி விட்டது. எங்கள் தெருவிலே எந்தப் புருஷனும் அவரைவிட வயதிலே இளையவன்தான். அவருடைய தலையின் வழுக்கை, பளிங்கு மாதிரி வழவழவென்று ஜொலித்தது. கண்ணாடி அணிந்திருந்தார். உருண்டைத் தோள்கள். சிறிது திக்குவாய். இப்படியெல்லா மிருந்தும், என் மனைவியும், என் தோழர்களின் மனைவிமாரும் ஏனோ அவரை அபாரமாய் வியந்தார்கள்!

அந்த ராஜாராம், எங்கள் தெருவுக்குக் குடிவந்த சில நாளைக்குள்ளேயே எனக்குப் பரிச்சயமாகி விட்டார். அதன்பின் கொஞ்ச நாளைக்கெல்லாம் என் மனைவியும் நானும் செய்த முதல் யோசனை, 'எங்கள் கொல்லைத் தோட்டத்திலே ஒரு சிறிய தண்ணீர்த் தொட்டி கட்ட வேண்டும்' என்பதுதான். "அதற்கு உடனே ஒரு கொத்தனைத் தருவித்து, என்ன செலவாகும் என்று கேட்கவா?" என்றேன். "கூடாது" என்று ஒரே வார்த்தையில் வெகு சுருக்கமாக ஆட்சேபித்தாள் என் மனைவி.

"தொட்டி கட்ட இப்போது தானே முடிவு செய்தோம். அதற்குள்ளே......?" என்று ஆரம்பித்தேன்.

"கட்டத்தான் வேண்டும். ராஜாராம் வீட்டுக்குப் போய்ப் பாருங்கள். தாமே ஒரு தொட்டியைக் கட்டியிருக்கிறார். உங்கள் மாதிரி கொத்தனுக்கும், அவனுக்கும், இவனுக்கும் பணத்தை வாரியிறைக்கவில்லை."

"ஊஹூம்! அவர் கொத்து வேலையிலும் நிபுணரா.........?"

"நிபுணர் என்ன நிபுணர்! அவர் யாரிடமும் போய்க் கொத்து வேலை படிக்கவில்லையாம். அவர் சம்சாரம் சொன்னாள். தாமாகவே செய்திருக்கிறார். இன்னொரு புருஷர் செய்த வேலையை நீங்கள் ஏன் செய்யக்கூடாது?" என்றாள் இல்லக்கிழத்தி.

"நானா! கொத்து வேலை செய்வதா!"

"ஆமாம். ஏன் கூடாது. நீங்கள் புருஷனில்லையோ? ராஜாராம் தான் புருஷனா?"

தர்க்கம் ரொம்ப விபரீதமாய்ப் போகவே, வேலையில் நேரே இறங்கிவிட்டேன். ஒரு மாத காலத்தில் 'காமா சோமா' என்று ஒரு தொட்டியைக் கட்டி முடித்தேன். ஆனால், ராஜாராம் கட்டியிருந்தது இதைவிட அழகான தொட்டி, ஒரே வார காலத்தில் பூர்த்தியானதாம்! "பிரம்ம வித்தையோ? எல்லாம் பழகப் பழக அபிவிருத்தியாகிறது" என்று சகதர்மிணி தேறுதல் கூறினாள். போகிறது; இந்த மட்டிலும் விட்டாளே சீறி விழாமல், அதுவே எனக்குப் பரம திருப்தி.

எங்கள் வீட்டிலேதான் இப்படி. கோபாலு வீடு என்ன

வாழ்ந்தது? அங்கேயும் இதே காட்சிதான். கோபாலு வீட்டுக் கொல்லையில் கறிகாய்கள் பயிரிடப்பட் டிருந்தன. அவைகளுக்கு நீர் பாய்ச்சவும் அவைகளின் களை பிடுங்கவும் இருந்த தோட்டக்காரனை, கோபாலுவுக்குச் சொல்லாமலே, கோபாலுவின் மனைவி தள்ளிவிட்டாள். கோபாலு ஆபீசிலிருந்து வந்ததும், "கொல்லையில் போய்த் தண்ணீர் இறையுங்கள்; களை பிடுங்குங்கள். உடனொத்த புருஷர்களெல்லாம் வேலை செய்யவில்லையா?........" என்று திடுதிப்பென்று அவள் கட்டளையிட ஆரம்பித்தாள். 'உடனொத்த புருஷர்கள்' என்று அவள் குறித்தது வேறு யாரையுமல்ல; ராஜாராமைத்தான். கோபாலு அதிக விவகாரம் செய்யாமலே எற்றச்சாலும் கையுமாய்க் கிணற்றிலே தொங்கத் தொடங்கி விட்டான்.

சோமுவின் மனைவி மாத்திரம் சும்மா விடுவாளா, தன் புருஷனை? அவளுக்கும் ராஜாராமே 'மாதிரி மனித'ரானார். ராஜாராம் நூறடிச் சுவர் ஒன்றைத் தம் கையாலேயே கட்டி யிருப்பதால், அவரைவிட மிகவும் வாலிபரான தன் புருஷன் இரு நூறடிச் சுவர் உடனே புறக்கடையில் எழுப்பியாக வேண்டுமென்று கண்டிப்பான கட்டளை போட்டு விட்டாள் சோமுவின் வாழ்க்கைத் துணைவி.

இன்னும் ராஜு, கோபு, பூபு ஆகிய பல நண்பர்களும் தத்தம் காதல் மனைவியரின் 'கடைக்கண் பணியிலே', கொல்லு, தச்சு, சலவை முதலிய பற்பல தொழில்களிலும் தீவிரமாய் ஈடுபட்டுவிட்டார்கள். எங்கள் டென்னிஸ் கோர்ட்டுகள், பிரிட்ஜ் கிளப்புகளெல்லாம் காலியாகி விட்டன. விளையாட்டுக்கள், வம்புகளெல்லாம் அடியோடு ஒய்ந்துவிட்டன. ராஜாராம் என்னென்னவோ

★

"......ஒண்டியாகவே அத்தனை பேருக்கும் ஜவாப் கொடுத்தேன்."

★

புதுப்புது வேலைகளெல்லாம் செய்துவந்தார். அவைகளையெல்லாம் எங்களுடைய இல்லக்கிழத்திகள் உடனுக்குடனே விசாரித்தறிந்துகொண்டு, எங்களை அவைகளிலே ஏவிவிட்டார்கள். எங்களுக்குச் சகிக்க முடியவில்லை. ஆனால், ராஜாராமோ வெகு ஆனந்தமாகவே வேலை செய்து வந்தார்.

ராஜாராமைப்பற்றி இப்படி நான் இறந்த காலத்தில் குறிப்பிடுவதைக் கண்டு, அவர் இப்போது பரலோகப் பிராப்தி அடைந்துவிட்டதாக நீங்கள் எண்ணிவிடக் கூடாது. விசேஷம் ஒன்றுமில்லை. கொஞ்ச காலத்துக்கு முன் அவர் எங்கள் தெருவை விட்டு ஜாகை மாறிவிட்டார். அவ்வளவுதான் விஷயம்.

ஒரு நாள் மாலையில் தம் வீட்டுத் தோட்டத்துக்கு அவர் புதிய வேலியொன்று கட்டிக் கொண்டிருந்ததாய்த் தோன்றுகிறது.

பிறைச்சந்திரன் சொற்பமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. என்றாலும், அநேகமாய் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாத இருளே சூழ்ந்திருந்ததாகத்தான் சொல்லவேண்டும். அச்சமயம் ஐந்தாறு காலிகள் தடியும் கையுமாய்த் திடீரென்று வந்து, அவரைத் தாக்கி, ஓடிவிட்டார்கள்.

இந்த ஸம்பவத்தைப்பற்றி ராஜாராம் மிகவும் திருப்திகரமாகவே தம் மனைவிக்குத் தகவல் தெரிவித்ததாய்த் தெரிகிறது. "கோழைப் பயல்கள்! ஐந்தாறு பேர் தடதட என்று வந்து, தடிகளோடு தாக்கினார்கள். நான் வெறுங் கையோடிருந்தும் ஒண்டியாகவே அத்தனை பேருக்கும் ஜவாப் கொடுத்தேன். ஒருவனை உதைத்தேன்; வேறு ஒருவனை நெட்டித் தள்ளினேன்; இன்னொருவனை முட்டி மோதினேன்-எல்லாரும் ஓடிவிட்டார்கள். ஒரே ஓர் ஆளுக்கு மாத்திரம் நான் விட்ட அறையால் அவனது இடது கண் அநேகமாய்ப் போய்விட்டதென்றே நினைக்கிறேன்" என்று அவளிடம் அவர் சொன்னாராம்.

ராஜாராம் இப்போது எங்கே ஜாகை போயிருக்கிறாரோ, எங்களுக்குத் தெரியாது. ஆனால், போன இடத்தில், உழைப்பின் பெருமையை உல்லாசமாய், ஆனால் மௌனமாகவே, வீதியெல்லாம் 'ஜாம், ஜாம்' என்று அவர் பரப்பிக் கொண்டுதான் இருப்பார் என்பதில் மட்டில் எங்களுக்குச் சந்தேகமில்லை.

அவர் காணாமற்போனது எங்களுடைய மனைவிமாருக்கெல்லாம் மிகவும் துயரமாகவே இருக்கும்.

ஆயினும், அவருடைய ஆத்ம சக்தி மாத்திரம் எங்களிடையே இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. கணவன்மாராகிய நாங்கள், அவருடைய மாதிரியால், பெரும்பயன் அடைந்துள்ளோம்.

உதாரணமாக, என் சம்பந்தப்பட்ட மட்டில் இன்னும் சில தினங்களில் எங்கள் தோட்டத்துக்குப் பெரும் மூங்கில் படல் வேலி ஒன்று என் கையாலேயே கட்டத் தொடங்கி விடுவேன்—அதாவது என் இடது கண்ணின் காயம் நன்றாய் ஆறி, பார்வை சரிப்பட்டவுடனே.

★

"அவனைப்போல புஷ்டியாக இருக்க வேண்டும் என்று நீ விரும்பவில்லையா"?

வாஸ்தவம்! பையன் எப்பொழுதும் சுறுசுறுப்பாகத்தான் இருக்கிருன் அவனுடைய சக்தி குறையாமல் இருப்பதற்கு வேண்டி ஆகாரத்தைக் கொடுக்கவும், குறைந்துபோன சக்தியை உடனே பெறும்படி செய்யாவிடில் குழந்தை வெகு சீக்கிரத்தில் களைப்புற்று விடுமென்றும், விடமின் கூடியதும், புஷ்டி தரக்கூடிய ஆகாராதிகளினால்தான் குறைந்த சக்தியை மீண்டும் அடையலாமென்றும் அவன் தாயாருக்குத் தெரியும். இங்குதான் விடமின் சேர்ந்த டால்டா அதிக உபயோகமாயிருக்கிறது. அது ஆகாரத்திற்கு புஷ்டியையும், விடமினும் அளித்து சக்தியுண்டாக்கச் செய்கிறது.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினால் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினால் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.

விடமின் சேர்ந்த டால்டா

தாவர எண்ணெயால் தயார் செய்யப் பட்ட

தென்று உத்திரவாத முள்ளது — சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 19-50 TM   THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

ஸி. ஏ. க்யூ.—

உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பளிக்க

நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்புளுயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்ச்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலைசிறந்து விளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குண மேற்படுகிறது. டாக்டர்கள் எல்லோரும் க்ஷேமமான, நிச்சய குணமளிக்கும் மருந்தென்று இதை சிபார்சு செய்கிறார்கள். ஜலதோஷம், மார்ச்சளி, இன்புளுயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.



"ஸி. ஏ. க்யூ." இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்

ஒரு புட்டி விலை ரூ. 1-4-0 :: மாத்திரைகள் ஒரு டப்பா ரூ. 1

ஸ்பென்ஸர் & கோ. லிமிடெட்

மருந்து வியாபாரிகள்

சென்னை

வாதம்; ஓயாத வாதம்; எதற்கெடுத்தாலும் வாதம் — இப்படி ஒரு ஜன்மம். காலத்தால் உடல் இளைக்கிறது; துணமோ?

வாதப் புலி

எஸ். சீனிவாசன்

சந்திரன் என் பால்ய சிநேகிதன். காலேஜிலும் இருவரும் ஒரே வகுப்பில் படித்து தேறினோம். வாசிப்பில் சந்திரன் வெகு துடி. எந்த விஷயத்தையும் ஆராய்ச்சி செய்யாமல், வாதம் செய்யாமல், ஒப்புக் கொள்ளும் சுபாவம், கொஞ்சங்கூட அவனிடத்தில் கிடையாது. எங்கள் கோஷ்டியில் அவனைக் 'குதர்க்க கோத்திரம்' என்று கூப்பிடுவார்கள். நான் மாத்திரம் அவனுக்கு 'வாதப் புலி' என்று செல்லமாய் ஒரு தனிப் பெயர் இட்டிருந்தேன்.

சந்திரன் புதிது புதிதாக, சமாசாரங்களை எடுத்துச் சொல்லுவான். கேட்பதற்கு நிரம்ப ரஸமாக இருக்கும். ஒரு நாளைக்குத் திடீரென்று நினைத்துக் கொள்வான்: "தாகூர் பெரியவரா, மஹாத்மா காந்தி பெரியவரா? சொல்லு" என்று ஒரு பெரிய பிரச்சினையைக் கிளப்புவான். எனக்கும் அவனோடு விதண்டாவாதம் செய்வதில் ஓர் ஆனந்தம்.

நான் "தாகூர்தான்! சந்தேகம் என்ன?" என்பேன்.

"ஏன்?"

"தாகூர் உலகில் சிறந்த கவி; நல்ல கற்பனு சக்தி உடையவர். அற்புதமான இலக்கிய சிருஷ்டி செய்திருக்கிறார். அதை உலகமே போற்றி, அவருக்கு நோபல் பரிசு அளித்திருக்கிறதே!"

"நோபல் பரிசு ஒரு சரியான அத்தாட்சியா? அந்தப் பரிசு வாங்காதவர்களெல்லாம் புகழக் கூடாதவர்களா? வாங்கியவர்களுக்கு மற்றவர் கீழ் என்ற நியதி உண்டா? ஏசு நோபல் பரிசு வாங்கியவரா? புத்தர் வாங்கியவரா? இந்தக் காலத்திலும், உலகத்தில் எத்தனையோ பெரியவர்கள், நோபல் பரிசைக்காட்டிலும் ஒரு பெரிய பரிசு இருந்தால், அதைப் பெற அருகதை உடையவர்களாய் இருக்கிறார்களே. தவிர, காந்திக்கும்கூட, ஸமாதானப் பிரியர் என்பதற்காகப் பல சமயம் நோபல் பரிசு வழங்குவதாக இருந்தார்கள். பட்டம் பதவியில் பற்றில்லாத அவர், கட்டாயம் அதை அங்கீகரித்திருக்க மாட்டார்" என்று வாசாமகோசரமாகப் பேச ஆரம்பித்து விடுவான்.

"சரியான காரணம் சொல்லு. ஆர்குமெண்ட் என்றால், ஆர்குமெண்ட்தான். அத்தைப் பாட்டி பேச்சு மாதிரி 'அவர்தான், இவர்தான்' என்று சொன்னால் நடக்காது" என்பான்.

"நான் சொன்னதில் என்ன தப்பு? தாகூருக்குக் கவி என்ற விஷயத்திலே கீர்த்தி; பரிசு

கிடைத்தது. மஹாத்மாவுக்கு ஸமாதான மூர்த்தி, அஹிம்ஸா தர்மவீரர் என்பதற்காகப் பரிசு வழங்கலாம். நான் அதை மறுக்க வில்லையே?" என்று நானும் ஒரு மடக்கு மடக்குவேன்.

"கீர்த்தி என்றால், எல்லாம் கீர்த்தியாகுமா? சொல்வதைச் செயலில் காண்பிக்கும் திறம் இருக்க வேண்டும். வாய் வேதாந்தம் ஆயிரம் சொல்லலாம்; அதில் என்ன இருக்கிறது? காணும் கனவைப் பன்மடங்கு பெருக்கிச் சொல்லலாம். இதைக் கண்டு நாம் மயங்குவதா?" என்று, மேலும், விடாமல், சந்திரன் வாதிப்பான்.

"அதைக் கண்டு நாம் மயங்க வேண்டாம்; உன் பேச்சைக் கண்டும் எவரும் மயங்க வேண்டாம்" என்று, ஒரு தினுசாக, நான் வாதத்தை முடித்துவிடுவேன். இதே விஷயத்தில், காந்திஜியே பெரியவர் என்று நான் சொல்லியிருந்தேனே, கட்டாயம் தாகூரைத்தான் அவன் தாங்கிப் பேசியிருப்பான். காரண காரியங்கள் எல்லாம் விரல் நுனியில்தான் இருக்கும்.

எதிலுமே அவன் இப்படித்தான். 'நிலக்கடலை பித்தம்' என்று நாம் சொன்னால் சந்திரன் ஒப்புக்கொள்ள மாட்டான்.

"ருசுப்படுத்து, ஆதாரங் காட்டு" என்று கேட்பான்.

நிலக்கடலை சம்பந்தமாக, மகாத்மா காந்தியினுடைய அனுபவத்திலிருந்து, கூனூர் 'உணவு ஆராய்ச்சிச்சாலை'யினரால் சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை வரையில், ஓர் அள்ளு அள்ளிவிடுவான். உப்புப் போட்டுச் சுண்டிச் சாப்பிட்டால் இவ்வளவு சத்து, வெல்லத்தோடு சேர்த்து உருண்டை செய்து சாப்பிட்டால் இவ்வளவு புஷ்டி என்று புள்ளி விவரம் தருவான். வீணே சொல்வதா? சந்திரனுக்கு நல்ல ஞாபகசக்தி; வாத வலிமையும் அபாரம். ஆனால், அவனுடைய வாதம் அகாரணமாகவும் அசாதாரணமாகவும் போகும் போதுதான், விபரீதமாகத் தோன்றுகிறது.

சந்திரன் வெறும் வாதத்தோடு நிற்பதில்லை. சில சமயம் விசித்திரமான ஆராய்ச்சிகளிலும் இறங்கி விடுவான். 'கோதுமை ஆரோக்கியமான உணவு' என்று பேப்பரில் பார்த்தான் என்று வைத்துக் கொள்வோம். மறு நாள், வீட்டில் ஒரு மூட்டை கோதுமை வந்துவிடும். காப்பி சாப்பிடுவதை விட்டு, 'டீ' தான் சாப்பிட வேண்டுமென்று நினைத்தானானால், உடனே அதற்கு ஏற்பாடு நிச்சயம். யாராவது 'கொத்தமல்லிக் காப்பி உடம்புக்கு நல்லது' என்று சொல்லி விட்டால், போச்சு. மறுநாள் முதல், நம்மைப் போல் போகிறவர்கள் வருகிறவர்கள் காப்பியிலும் மண்தான்! அதில் அவன் கொஞ்சம்கூடத் தயை தாட்சண்யம் காட்ட மாட்டான். கொத்தமல்லிக் காபியை ஒரு டம்ளர் கொண்டுவந்து, அதைப்பற்றி ஓர் அத்தியாயம் அளந்துவிட்டு, நம்மைச் சாப்பிடச் சொல்லி, 'சிபார்சு' பண்ணுவான். சிபார்சாவது மண்ணாங்கட்டியாவது! ஒரே கண்டிப்புத்தான். சாப்பிடாமல் நாம் தப்பித்துக் கொள்ள முடியாது; எந்த சமாதானமும் பலிக்காது. நாம் ஏதாவது ஆட்சேபம் சொல்ல ஆரம்பித்தால், அவ்வளவுதான்! அதற்குத்தானே அவன் தவம் செய்துகொண்டிருக்கிறான். உடனே ஓடிப் போய், அறைக்குள் இருக்கிற பழஞ்சுவடிகளிலே ஒன்றை எடுத்துக்கொண்டு

வந்து, தக்க ஆதாரம் காண்பிக்க ஆரம்பித்து விடுவான்.

ஒன்ரு, இரண்டா? இந்த மாதிரி பதினுயிரம் கேள்விகள், பதினுயிரம் பதில்கள். ஒரு நாளைக்கு, பெஸன்ட் அம்மையார் 'ஹோம் ரூல்' இயக்கத்தை விட்டு பிரம்ம ஞான சபை ஆரம்பித்ததைப் பற்றிய பேச்சாக இருக்கும்; அல்லது சென்னையில் இருக்கிற சிநேகிதர்கள் குறித்த நேரத்தில் நண்பர்களைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு, அம்மாதிரி செய்யாமல் இருப்பதால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றிய வாதம் நடக்கும். "மிளகாய் உடம்புக்கு நல்லதா, கெட்டதா? கெட்டது என்ருல், நம்முடைய தாத்தா பாட்டிக் கெல்லாம் உடம்பிலே அது என்ன கெடுதலை உண்டாக்கி விட்டது?" என்ற வினவுடன் ஒரு 'பிரச்னை'யைக் கிளப்புவான். "வேலை செய்த பிறகு எந்தவிதமான ஓய்வு நல்லது?" என்பான் ஒருநாள்.

என்ன ஆச்சரியம்! இப்பேர்ப்பட்ட சந்திரனைப் பிரிந்து, வருஷம் எட்டாகப் போகிறது. நான் எங்கேயோ, அவன் எங்கேயோ! சில தினங்களுக்கு முன் சென்னை போயிருந்த பொழுதுதான், அவனை நான் மறுபடி கண்டேன். என் வேலையை முடித்துக் கொண்டு, அவனுடைய அறையிலே படுக்கச் சென்றேன். சிறிது நேரம் ஏதேதோ லோகாபிராமமாகப் பேசிக் கொண்டிருந்தோம். என்ன மாறுதல்! வேலை மனிதனை வாட்டிப் பதம் செய்து விடுகிறது! சந்திரனின் பழைய உற்சாகத்தைக் காணுமே! "புற்றுப் பாம்பாய் அடங்கியிருக்கிருன்—இவ்வளவுதான் மனிதனுடைய ஆணவமெல்லாம்" என்று நினைத்தேன்.

சொற்ப சம்பாஷணைக்குப் பின், சந்திரன் என்னைப் பார்த்துச் சலிப்புடன், "எனக்குத் தூக்கம் வருகிறது. உனக்கு வரவில்லையா? மத்தியானமெல்லாம் வெயிலிலே அலைந்திருக்கிருயே, தூங்கு" என்ருன். சந்திரனுக்குக் கூடப் பேச்சு அலுத்து விட்டதே!

"அசதியாகத்தான் இருக்கிறது. ஆனல், கொசு உபத்திரவம்ன, தூங்கவிடாது போலிருக்கு" என்று நான் சொன்னேன்.

அவ்வளவுதான்; ஆரம்பித்து விட்டான், நீறுபூத்த நெருப்பை ஊதிவிட்டது போல், சண்டப்பிரசண்டமாக! படுக்கையிலிருந்து எழுந்திருந்தான். சுவிட்சைத் தட்டி மின்சார விளக்கை ஏற்றினுன்: "இந்தா! இதோ பார்த்தாயா! இது மூணுவது மாடி. நல்ல காற்ருேட்டம் இருக்கு; கதவைத் திறந்து வைத்திருக்கிருேம். ஒண்ணுக்கு மூணு ஜன்னல்! கொசு என்று நீ சொன்னுல், எப்படி வரும், சொல்லு?"

இதைக் கேட்டேனே இல்லையோ, எனக்குப் பக்கென்று சிரிப்பு வந்துவிட்டது. பழைய சந்திரன் இன்னும் மாறவில்லை! "சரிதான்! உன் குதர்க்கம் இன்னும் உன்னை விட்டபாடில்லையா? டவுனில், சாக்கடை, குப்பை இவைகளிலே இருந்து கொசு வரும். காரணத்துக்கா பஞ்சம்? நூறு காரணம் உண்டு. அதிலே, ஏதாவது ஒன்று இங்கே இருக்கும்" என்றேன்.

"ஆயிரம் காரணங்கள் உண்டானலும், இங்கே ஒன்றுக்குக் கூட இடமில்லையே! சாக்கடையைச் சுத்தம் பண்ணி, தினம் பினுயில் போட்டுக் கழுவுகிருேம். ஒரு தொட்டியிலே, வாளி

யிலே, தண்ணீர் என்ற பேச்சே கிடையாது. எப்படிக் கொசு வரும், சொல்லு?"

"அட ராமா! இந்த வீடு சுத்தமா யிருக்கலாம்; அக்கம் பக்கத்து வீடுகள்?"

"பக்கத்து வீடுகளா? அப்படிக் கேள், சொல்கிறேன். தென்னண்டை வீடு ஒரு சுகாதார இன்ஸ்பெக்டரின் ஜாகை; அதிலே அப்பு அழுக்கு இருக்காது, இல்லை. வட பக்கத்து வீட்டிலே ஒரு போலீஸ் சர்க்கிள் குடியிருக்கிறார். ரொம்ப ஜோரான பேர்வழி. அவரும் அவருடைய சம்சாரமும் தான் ஆத்திலே; குழந்தை குட்டிகள் இல்லை. ரொம்ப சுத்தம். அப்படியிருக்க, நீ கண்ணை மூடிண்டு பேசினால்..........." என்று ஒரு நீண்ட தர்க்கத்துக்கு ஆயத்தமான குரலில் கூறினான். சந்திரன் பழைய சந்திரன்தான்; மாறுதல் வெறுந் தோற்றமே, தாமிரத்திலே களிம்பேறுவது போல! ஆனால், நான் அப்படியில்லை; பழைய மாதிரி செவியைத் துளைத்துக் கொள்ள, நான் தயாரில்லை.

"கண்களைத் திறந்து கொண்டு தான் பேசுகிறேன். உனக்குத் தூக்கம் வருகிற லட்சணம் நன்றாக இருக்கிறது. பிரத்யட்சமாய்க் கொசுக் கடித்தது, கடிக்கிறது; அதைச் சொன்னேன். காரணத்துக்குச் சல்லடை போட்டு அரிக்கிறாயே, என்னவோ? கைப் புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும்? பலே! உனக்குச் சமானம் நீ தானடா! இந்த மாதிரி எல்லாம் நீ பேசுவதைக் கேட்க முடியாமல், தெய்வம், எங்கேயோ கொண்டு தள்ளி நம்மைப் பிரித்து விட்டது, பார்! அந்த நாளை நினைத்தால், எப்படித் தெரியுமா இருக்கிறது! அந்த நாளும் இனிமேல் வருமா?" என்று நான் கேட்டேன்.

"அது எங்கேயடா இனிமேல்? அது ஒரு காலம்........." என்று சந்திரன் பெருமூச்சு விட்டான்.

காலச் சுழற்சியின் கீதம் போல, 'கும்ம்ம்' என்று ரீங்காரம் செய்தது ஒரு கொசு!

★

சரியான வரவேற்பு

வங்காள கவர்னரா யிருந்த ஸர் ஜார்ஜ் காம்பெல் (1871—1874) ஒரு சுற்றுப் பிரயாணம் செய்தார். அப்போது, ஒரு மாஜிஸ்திரேட்டின் கச்சேரிக்கு விஜயம் செய்தார். அந்த மாஜிஸ்திரேட், கவர்னரை ஏறெடுத்துப் பாராமலே, தமது எழுத்து வேலையிலே முனைந்திருந்தார். கவர்னர் சற்று நின்றார். அப்போதும் மாஜிஸ்திரேட் தலை நிமிரவில்லை. கவர்னர் கோபமூண்டு, "எனக்குக் கீழ்ப்பட்ட ஓர் உத்தியோகஸ்தனின் கச்சேரிக்கு நான் வரும்போது, அவன் எனக்குரிய மரியாதை செய்து வரவேற்காதிருப்பது கண்டு ஆச்சரியமா யிருக்கிறதே" என்றார்.

மாஜிஸ்திரேட் தலை நிமிர்ந்து, "அட கடவுளே! தங்களைச் சிறப்பாக வரவேற்பது எப்படி என்று சென்ற ஒரு வார காலமாக மண்டையை உடைத்துக் கொண்டேன். கடைசியாய், என் வேலையைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனிப்பதை யன்றி வேறெதுவும் தங்களுக்கு மிகவும் திருப்தியளிக்காதென்றல்லவோ நினைத்தேன்" என்றார்.

முயன்றன்; திரும்பத் திரும்ப முயற்சி செய்தான் எழுத்தாளன் ஆகி விடுவதற்காக. கடைசியிலே—

வெற்றிக்கு வழி

'வல்லிக் கண்ணன்'

பொன்னம்பலத்துக்கு ஓர் ஆசை எழுந்தது. தினந்தோறும் அது வளர்ந்து வளர்ந்து பூதாகாரமான உரு எடுத்தது. அதன் பிறகு, அவன் சும்மா இருக்க முடியுமா?

வேறொன்றுமில்லை. குப்பனும் சுப்பனும், சொள்ளமுத்துவும் சொக்கலிங்கமும் - ஏன், எல்லோருமே - எழுத்தாளர்களாக ஆகும் பொழுது, அவர்களுடைய கதைகளும் கட்டுரைகளும் பத்திரிகைகளில் வரும்பொழுது, தான் மட்டும் ஏன் ஓர் எழுத்தாளன் ஆகக் கூடாது? தன் கதைகளும் ஏன் பத்திரிகைகளிலே வரக்கூடாது?

இப்படித்தான் கர்ஜித்தான் பொன்னம்பலம். அவன் இருந்த அறையின் சுவர்கள், அந்த உறுமலை, வெளியே செல்லா வண்ணம் தடுத்து விட்டன. ஆனல், அதேபோல அவனைத் தடுக்க, யாருக்கு உரிமை உண்டு? ஆகவே, எடுத்தான் பேனவை. பரப்பினன் காகிதங்களை. அந்தக் கவலை - காகிதப் பஞ்சம் என்பது தான் - அவனுக்குக் கிடையாது. அவன் மாணவன். மாணவனிடமா காகிதக் குப்பை கிடையாது?

'சரி. எழுதுவோமே' என உட்கார்ந்தால், பேனா 'ஓடமாட்டேன்' என்று சத்தியாக்கிரகம் செய்தது. நகத்தைக் கடித்தான். பேனா மூடியை ருசி பார்த்தான். தலையைச் சொரிந்தான். இன்னும் ஆயிரம் கோரணிகள் செய்தும், பலன்தான் கிட்டவில்லை.

எல்லாவற்றையும் போட்டுவிட்டு அப்படியே கிளம்பினன் வெளியே. வேறெங்குமில்லை; காப்பி சாப்பிடத்தான். உள்ளே சூடு ஏறினல், மூளையில் இருந்து 'கப கப' என்று ஆவி கிளம்பாமலா போகும்! அந்த ஆவியின் பரிணமந்தானே கருத்துக்கள்?

ஏதோ யுக்தி தோன்றி விட்டது என்பதை, அவனது முகமே எடுத்துக் காட்டியது. வந்தான் வாயுவேகம், மனோவேகம், நளனின் குதிரை வேகம் எல்லாம் பின்னிடும்படி. எழுத ஆரம்பித்தான். எழுதியும் தள்ளி விட்டான் ஒரு கட்டுரை.

முன்பு படித்திருந்த விஷயங்களும் அலமாரியில் இருந்த கவிதைப் புத்தகங்களும் பேருதவி புரிந்தன. அந்தக் கட்டுரை, 'வீட்டுக்குள் பாகிஸ்தானமா?' என்பது. ஒரு வீட்டில் ஆணும் பெண்ணும் 'சரி நிகர் சமானமாக' வாழ வேண்டும் - பிளவு கூடாது - என்பதை, தக்க ஆதாரங்களுடன், அதில் அவன் பரிஷ்காரமாக விளக்கி விட்டான்.

அன்றைய தினத்திலிருந்து ஆரம்பித்தது தமிழ்மொழி ஆக்க வேலை. எழுதினன், எழுதினன், எழுதித் தள்ளினன் குவியல் குவியலாக. அந்தக் கத்தையிலே

கதைகள் இருந்தன; கட்டுரைகள் இருந்தன; கவிதைகளும் காணப்பட்டன. பொன்னம்பலம் எழுத்தாளன் ஆகிவிட்டான். அதை வெளியுலகம் அறிய வேண்டாமா? அதற்குச் சரியான வழி, பத்திரிகைகளில் அவை வெளிவருவது தானே!

தமிழ் நாட்டில் பத்திரிகைகளுக்குக் குறைவா? எடு படையெடுப்பு!

தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். யார் எதை எழுதி அனுப்பினலும் பிரசுரிக்கும் பத்திரிகை; யார் எப்படி எழுதினலும் வெளியிடாத பத்திரிகை; குறிப்பிட்ட ஆட்களைக் கொண்டு 'பக்கங்களை நிரப்பும்' பத்திரிகை; 'பெரிய மனுஷாள்' எழுதியவைகளையும், அவர்களின் பக்த கோடிகள் அனுப்புகிறவைகளையும், பழைய - மக்கிப் போய்க் கண்டெடுத்த - மணிகளையும் வெளியிடும் பத்திரிகை... இன்னும் எவ்வளவோ! இவைகளுக்கிடையே திறமைக்கு இடமளிக்கும் பத்திரிகைகள் ஒன்றிரண்டு இல்லாமலும் இல்லை.

பொன்னம்பலம் முதலிலேயே- பத்துக் கட்டுரைகள் எழுதிய உடனேயே - தன் எழுத்துப் பெரிய பத்திரிகைகளில் வரவேண்டும் என்று ஆசைப்படவில்லை. அவனுக்கு அவ்வளவு தன்னம்பிக்கை இல்லைபோல் தோன்றுகிறது, சில நண்பர்களைப் போல. அதனல், யார் எதை எழுதினலும் வெளியிடும் பத்திரிகை ஒன்றுக்கே, தன் கதைகளை முதன் முதலாக அனுப்பி வைத்தான்.

அதிலிருந்து அவனுக்கு ஒரே பைத்தியம் - பத்திரிகை வந்ததா, அதில் தன் கதை வந்து விட்டதா என்று தான். ஒரு நாள் பத்திரிகையும் வந்தது. அவன் கதையும் வெளியாகியிருந்தது. ஒருவாறு பொன்னம்பலம் பத்துப் பதினைந்து பேர் அறிய, எழுத்தாளனுகி விட்டான். இனி......?

வேறு பல பத்திரிகைகளிலும், அவன் எழுதிய கட்டுரைகள், கதைகள் வரவேண்டாமா? எழுதியவைகளை எடுத்து அனுப்பி விட்டு, எதிர்பார்த்திருந்தான். மாதங்கள் ஓடின. பத்திரிகைப் பிரதிகள் வந்து, காலியாகி, மறுபடியும் வந்தன. அவனுடைய கதை மட்டும் வரவில்லை. என்ன ஆச்சர்யம்! ஒரு கதையை வெளியிட்ட பத்திரிகை கூட, அவனது மறு கதையைப் பிரசுரிக்கவில்லை!

அவனுக்கு வயிற்றெரிச்சல். "சொள்ளமுத்துவும் சோணசலமும் எழுதிய 'காமா சோமா'க் கதைகள் எல்லாம், பல பத்திரிகைகளிலும் வரும்பொழுது, என் கதை ஏன் லார் வரப்படாது? நான், காலேஜ் ஸ்டூடன்ட், கதை எழுதுகிறேனே? அவங்க கதையைப் போட்டு இரண்டு பக்கம் நிரப்புகிறதை, என் கதையை அச்சிட்டு நாலு பக்கத்தை ஏன் நாசமாக்கக் கூடாது?" என்று கூத்தாடினன்.

தான் நன்ருக எழுத வேண்டுமே என்ற அக்கரை இல்லை அவனுக்கு. மூளைஊற்றுப் பொங்கி வர, பல வகைகளிலும் படித்தும் எழுதியும் கண்டும் உணர்ந்தும், அடித்தளத்தை வளமுள்ளதாக்க வேண்டுமே என்ற துடிப்பு இல்லை. ஆழ்ந்த சிந்தனை வனத்திலே அழகான இலக்கிய மலர்கள் அலர்வதற்கு முன்பு, எவ்வளவோ இலக்கிய உரங்களை மக்கி மடியச் செய்ய வேண்டும் என்பதும் அவனுக்குத் தெரியாது. அவனது ஒரே அவா, தன் கதைகள் பல பத்திரிகைகளில் வர வேண்டும் என்பதுதான்!

எழுதுவது தானு பிரமாதம்! பத்துப் புத்தகம் படித்தால், இரண்டு கதைக்கு விஷயம் கிடைக்காமலா போய் விடும்? பற்ருது என்ருல், பழம் பத்திரிகைகளைப் புரட்டினுல்போச்சு. பின் எப்படி, சுவாமி, தமிழ் எழுத்தாளனுக முடியும்? இது கூடத் தெரியாதா அவனுக்கு!

பல பத்திரிகைகளைப் படிக்கும் அவனுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. ஒரு பிரபல பத்திரிகாசிரியர் தமக்குப் புகழ்தேட விரும்புகிருர்; பக்த கோடிகள் சேர்க்க ஆசைப்படுகிருர். அதற்கு அவருடைய கதைகளையே காப்பியடிக்கும் ரஸிகர்கள் தேவை. அதனுல், அவருக்கு மேன்மை வருமல்லவா!

பார்த்தான் பொன்னம்பலம்.

அந்த ஆசிரியர் எழுதியுள்ள கதைகளையே புரட்டினுன். அதன் பயனுக ஐந்து கதைகள் உருவாயின. கதாநாயகன் கதாநாயகியாகவும்; நாயகி நாயகனுகவும் 'கூடுவிட்டுக் கூடு' பாய்ந்தார்கள். வீடு ரயில்வே ஸ்டேஷனுகவும், பிளாட்பாரம் தியேட்டர் வாசலாகவும் உரு மாறின. இப்படி ஜகஜ்ஜாலப் புரட்டுகள் நடந்தன அவனுடைய கதைகளிலே.

அவைகளைப் பிரபலமாக விரும்பும் மேன்மை தங்கிய அந்த ஆசிரியருக்கே அனுப்பினுன். இதில் வெற்றி நிச்சயம் எனத் துள்ளினுன். ஆனுல், ஆறு மாதங்களுக்குப் பிறகும், அவனுக்கு ஏமாற்றமும் தோல்வியுமே எதிர்ப்பட்டன. ஒரு கதையாவது அச்சில் வரவில்லை.

அவனது மனம் வாடியது. என்ருலும் ஸ்தைரியம் அவனை விட்டு ஓடவில்லை. 'பார்க்கலாம் ஒரு கை!' என்று உறுதியுடன் உழைக்க ஆரம்பித்தான்.

ராஜகுமாரன் கட்டுரை

ராஜகுமார் காலேஜில், ஒரு சமயம் ஒரு மாணவனை, மலைகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதச் சொன்னுர்கள். அதற்கு அவன் பின்வருமாறு எழுதினுன்: "மலைகள் விரும்பத் தக்க பொருள்கள். அவைகள் பெரும்பாலும் காடுகளால் மூடப்பட்டிருக்கும். காடுகள் என்ருல் புலிகள் இருக்கும். புலிகள் இருந்தால், வைஸிராய்கள் வருவார்கள். ரஸ்தாக்கள் செப்பனிடப்படும். ராஜாவுக்கு ஜி.ஸி.ஐ.ஈ. பட்டம் கிடைக்கும். சமஸ்தானம் லாபம் அடையும்."

—ஸர் வில்லியம் பார்ட்டன்.

மறுபடியும் ஞானேதயம்! 'வெற்றிக்கு வழி இது தான்' என்ற மலர்ச்சி தோன்றியது. அந்தப் பத்திரிகாசிரியரின் உச்சி குளிரும்படி சரமாரியாக ஒரு டஜன் கடிதங்கள் எழுதினுன். ஒன்று சோடை போனுலும் மற்ருென்று தேருதா? அவைகளுடன் ஒரு வருஷச் சந்தாவும் கட்டி விட்டால்...? அப்புறமும் அந்த ஆசிரியர் எப்படித் தன் கதைகளை வெளியிடாது போவார்?

"திறமை கிடக்கட்டும், ஸார்! தந்திரம்தான் வேணும்" என்று தடலடியாகச் சொல்லி விட்டு,' அப்படியே செய்தும் தீர்த்தான். அந்த முறையில் அவனுக்கு வெற்றி கிட்டியதா?

ஓ! கொஞ்சம் பொறுங்கள்; கிட்டும்போல் தான் இருக்கிறது. 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே.' அவனுடைய இச்சகக் கடிதங்களில் ஒன்று பிரசுரமாகி விட்டது. ஆகவே,......கட்டுரை பின்னே வருமா? அல்லது மணி ஓசை, கண்டா மணி ஓசையாகப் போய் விடுமோ? அப்படியும் நடக்கலாம் அல்லவா?

★

உடம்பும் மருந்தும்

ஏமாற்றும் சிகிச்சை: சில தொற்று வியாதிகளுக்கு, ஸல்பா-டிரக்ஸ் என்ற கந்தக வகை மருந்துகள் சிலவற்றை டாக்டர்கள் உபயோகித்து வந்தார்கள். அந்த நோய்கள் குணமும் அடைந்து வந்தன. ஆனால், அதன் காரணம் மட்டில், டாக்டர்களுக்கு இது வரையில் தெரியவில்லையாம். டொமாக் என்ற ஜெர்மன் டாக்டர் ஆச்சர்யமான ஒரு காரணத்தைச் சமீபத்தில் கண்டு பிடித்து விட்டாராம், பாக்டீரியா என்ற தொற்று நோய்ச் சிற்றுயிர்க் கிருமிகளுக்கு, வளர்ந்து பெருக பி. வைட்டமின் தேவையாம். பி. வைட்டமின் போலவே இந்த கந்தக மருந்து அணுக்கள் இருக்கக் கண்டு ஏமாந்து, இவைகளை அந்தக் கிருமிகள் தின்று விடுகின்றனவாம். அப்படித் தின்பதால் வலுவிழந்து போகவே, நம் ரத்த அணுக்கள், அந்த வியாதிக் கிருமிகளை,சுலபமாய் அழித்து விடுகின்றனவாம்! வேறு பலவிதத் தொற்று வியாதிக் கிருமிகளையும் இப்படியே ஏமாற்றத் தக்க பல மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் சில டாக்டர்கள் இப்போது முனைந்திருக்கிறார்களாம்!

* *

மூளையை அழிக்கும் குடி: ஒரு காலோ கையோ போனால், மனிதன் வாழ்ந்து விடலாம். ஆனால், மூளைமட்டில் பழுதுபடுமானால், சர்வ நாசம்தான். மூளையே உடம்பின் சகல அங்கங்களையும் ஆட்டிவைக்கும் சூத்திரதாரி. மூளையில் கோடிக்கணக்கான அணுக்கள் இருக்கின்றன. அந்த அணுக்களிலிருந்து வெண்மையான மிக மெல்லிய நூல் போன்ற நரம்புகள், உடம்பின் பல பாகங்களுக்கும் செல்லுகின்றன. மூளைக்கும் வெவ்வேறு அங்கங்களுக்கும் தந்திக் கம்பிகள் போல், அந்த நரம்புகள் வேலை செய்கின்றன. கண் ஒரு பொருளைப் பார்க்கிறதென்றால், கண்ணிலிருந்து வரும் நரம்புகள் மூளைக்கு அதைத் தெரிவித்தால் தான், பார்க்கும் உருவத்தை நாம் அறிவோம். கண்ணும், கண் நரம்புகளும் சிறிதும் பழுதில்லாமல் இருக்கலாம். ஆயினும், மூளையில் உள்ள கண் நரம்புகளின் மூலஸ்தான அணுக்கள் பழுதுற்றால், பார்வை மங்கி விடும். இதே மாதிரிதான், மற்ற ஒவ்வோர் அங்கமும் வேலை செய்ய, அது அதற்கு மூளையிலுள்ள மூலஸ்தானம் பத்திரமாயிருக்கவேண்டும். மூளையின் அணுக்களையும் நரம்பு மூலங்களையும் காப்பாற்ற, கொழுப்புப் போன்ற ஒரு வஸ்து மூடிக்கொண்டிருக்கிறது. மின்சாரக் கம்பிகளுக்கு ரப்பர் உறை முதலியன போடுகிறார்கள் அல்லவா, அந்தமாதிரி அது உதவுகிறது. லாகிரி தரும் சாராயம், மது முதலிய குடி வகைகள், முதலில் நேரே மூளைக்கே செல்லுகின்றன. ஏனெனில், கொழுப்புப் போன்ற அந்த உறையையே, லாகிரிவஸ்துக்கள் பெரிதும் விரும்புகின்றன. இவ்வாறு மூளைக்குச் செல்லும் லாகிரிப் பொருள்கள், மூளை அணுக்களையும் நரம்பு மூலங்களையும் தாக்கி நாசம் செய்கின்றன. அதனால், உடலின் பல அங்கங்களின் மீதும் தனக்குள்ள பிடிப்பை மூளை இழந்து, விபரீதங்கள் நிகழ ஏதுவாகிறது. லாகிரி வஸ்துக்

ஆஷலதாவின் அழகான சருமத்தின் இரகசியம் இதுதான்



''என் சருமத்தைப் பற்றி பிரத்தியேக கவலை நான் எடுத்துக் கொள்கிறேனா'', ''ஆம்'' என்று இந்த கவர்ச்சியுள்ள சினிமா நடி சொல்லுகிறார். மேலும் அவர் சொல்லுவதாவது: லக்ஸ் டாய்லெட் சோப்பினால் என் சருமத்தின் அழகை பாதுகாக்கிறேன். இந்த சோப் சருமத்தை சுத்தமாகவும், வழவழப்பாகவும், மாசு மருவன்னியில் வைத்துக்கொள்வதில் சிறந்தது. அநேக ஸ்திரீகள் தங்கள் சருமத்தை அழகாகவும், இளமையாகவும் வைத்திருப்பது கடினம் என்று நினைக்கிறார்கள். ஆனால் இந்த நறுமணமுள்ள வெண்ணிற சோப்பினால் இது மிகவும் எளிது''.

லக்ஸ் டாய்லட் ஸோப்

LTS. 78-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

மலைமேல் சிறுவன்

உலகத்தில் சூரியனால் மழை பெய்கிறது; பயிர் செழிக்கிறது. காலச் சக்கரம் சுழலுகிறது. அது போலவே இந்தியாவும் நாள்தோறும் முன்னேறிக் கொண்டே இருக்கிறது. ஒரு சிறுவன் தன் இடுப்புத் துணியைக் காய வைக்கிறான். தெய்வீகமான பண்டைச் சுவர்கள் மீதும் மரங்கள் மீதும் நிழல் படுகிறது. அருகிலுள்ள நகரங்களிலிருந்து இனம்பும் சப்தம் தூரத்தில் கேட்கிறது. இந்திய நாட்டின் மேல் அன்புடையவர்களுக்கு அது எவ்வளவு அழகாக காட்சி பளிக்கிறது?

நாட்டுப் புறங்களிலெல்லாம் இதே அமைதி காணப்படுகிறது. பல நூற்றுக்கணக்கான வருஷங்களாக இதே அமைதியான வாழ்வு! நம் அலுவல்களை முன்னிட்டு நம்மில் பலர் நகரங்களில் வசித்து வருகிறோம் என்றாலும் நாம் அந்த அமைதியின் ஊற்றிலிருந்துதான் நகரத்திற்கு வந்தோம்.

தம் குடும்பத்தோடும் நண்பர்களோடும் அமைதியாக வாழ்ந்து வந்த 40 கோடி சீனர்களின் வாழ்வை ஜப்பானியப் படைகள் அடியோடு குலைத்து விட்டன.

இந்தியாவில் இந்த நிலைமை ஏற்படக்கூடாது. இதற்கு நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். நமக்காக போராடுகிறவர்களுக்கு உதவவேண்டும். நம் முழு பலத்தையும் கொண்டு நம்மைத் தாக்கவரும் எதிரியைத் தடுக்க வேண்டும்.

நீங்களே யோசித்துப் பார்த்து ஒன்றுபட்டு உழையுங்கள்!

அதுதான் தேசியப் போர் முனை

C.P.U. G.A.TM.

களை அறவே ஒழிக்கவேண்டு மென்பதற்கு இதைவிட வேறு காரணமும் வேண்டுமா?

*   *

உளுந்தின் குணம்: அகத்தியர் குணபாடம் கூறுகிறது:

செய்ய உளுந்திற்குச் சிலேத்தம்
அனிலம் பிறக்கும்
வெய்ய பித்தம் போம் மந்தம்
விறுங்கான் — மெய் அதனில்
என்புருக்கி தீரும இடுப்புக்
கதி பலமாம்
முன்பு விருத்தி உண்
டாம் முன்.

அதாவது, உளுந்தினால், வயிற்று வலி, பேதி, சீதபேதி, அஜீரண பேதி, மூத்திர நோய்கள், மூல வியாதி, ஈரல் நோய்கள் தீரும். தாதுபுஷ்டி உண்டாகும். பெண்களின் கர்ப்பாசய நோய்கள் நீங்கும். பித்தம் குறையும். ஆனால், கபமும் வாயுவும் அதிகரிக்கும். மந்தம் உண்டாகும்.

*   *

பல்வலி: ஒவ்வொரு பல்லுக்குள்ளும் நுட்பமான பல நரம்புகளும் நாடிகளும் ஓடுகின்றன. பல்லின் வேரில் உள்ள சிறு குழாய் மூலம் அவை உள்ளே சென்று விரிந்து பரவியிருக்கின்றன. பல்லிலே சோடை விழும் போது, அடி வழியாக நோய்க் கிருமிகள் உள்ளே நுழைந்து விடுகின்றன. கிருமிகள் தாக்குகையில், நாடி நரம்புகள் வீங்கத் தொடங்குகின்றன. ஆனால், பல் கெட்டியான பொருளாதலால், வீங்க இடமில்லாது போகிறது. அதனால், நரம்புகள் திணறித் தெறிக்கின்றன. சகிக்கமுடியாத வலி உண்டாவதன் காரணம் இது தான். பாதி ராத்திரியில் பல்வலி வந்தால், உடனே டாக்டரிடம் செல்ல முடியுமா? தற்காலிக சாந்தியாகச் சில சிகிச்சைகள் செய்யலாம். பல்வலியாயிருந்தால், கிராம்புத் தைலத்தில் கொஞ்சம் பஞ்சை நனைத்து, வலிக்கும் பல்லின் அடியில் சுற்றிவைக்கலாம். ஈறு வீக்கமாயிருந்தால், அயொடினைச் சிறிது தடவலாம். ஆனால், இதெல்லாம் சிறுசிகிச்சைகளே யாகும். டாக்டரிடம் எவ்வளவு சீக்கிரம் போக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போய் வைத்தியம் செய்து கொள்ளுவதுதான் நல்லது.

*   *

மனிதன் புல் தின்றால்: புல்லை மனிதனும் தின்னலாம் என்று அமெரிக்க டாக்டர் ஒருவர் கூறுகிறார்! 340 ராத்தல் பழங்களிலும் கறிகாய்களிலும் இருக்கக்கூடியதைவிட அதிகமான வைட்டமின், 12 ராத்தல் புல்லில் இருக்கிறது என்று அவர் கணக்கிட்டிருக்கிறார். ஆயினும், ஆடுமாட்டைப்போல மனிதனும் புல்லைத் தின்பதென்றால், நமக்குக் கொஞ்சம் வெறுப்பாய்த்தான் இருக்கும். ஆனால், உயர்த்தித் தூளாக்கி ஏற்ற விதமான பக்குவம் செய்து, புல்லை ஆகாரத்தோடு ஏன் நாம் சேர்த்துக்கொள்ளக் கூடாது? பழங்களையும் கறிகாய்களையும் விட 40 மடங்கு ஏ-வைட்டமினும், 10 மடங்கு பி-வைட்டமினும், 14 மடங்கு ஸி-வைட்டமினும், ஏராளமான இ-வைட்டமினும் புல்லில் இருக்கிறதாம். டி-வைட்டமின் மட்டில்தான் புல்லில் இல்லையாம். நம் உணவுக்குப் பதிலாகப் புல்லையே தின்பது சரியல்ல. ஆனால், நம் தினசரி உணவோடுகூட, வைட்டமினுக்காகக் கொஞ்சம் புல்லையும் சேர்த்துக் கொள்ளுவது நலம் என்றே அந்த டாக்டர் சொல்லுகிறார்.

★

மந்திரச் சொக்காய்

'கல்நார்'

முனியன் ஓர் ஏழைத் தொழிலாளி. அவனிடம் ஒரே ஒரு சொக்காய்தான் உண்டு. நெடுகலும் கிழிந்து போயிருக்கும். இதை மாட்டிக் கொண்டு ஒரு நாள் வெளியே வேலை தேடப் புறப்பட்டான்.

வழியில், ஒரு வீட்டிலிருந்து கூச்சல் கிளம்பியது. முனியன் அங்கே போனான்.

"ஐயோ! தண்ணீர்க் குழாய் பிய்த்துக் கொண்டு விட்டதே! வீடு முழுதும் வெள்ளம் பெருகி விடும் போலிருக்கே! என்ன செய்வேன்?" என்று அந்த வீட்டுக்கார அம்மாள் அழுது கொண்டிருந்தாள்.

"அம்மா! பயப்படாதீர்கள். வெடிப்பிலே கையை வைத்து அமுக்கிப் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் சீக்கிரமாய் மராமத்துக்காரனைக் கூட்டி வாருங்கள்" என்றான் முனியன். உடனே தன் சொக்காயைக் கழற்றிச் சுவரில் ஆணியில் மாட்டினான். குழாய் வெடிப்பில் விரலை வைத்து அமுக்கிப் பிடித்துக் கொண்டான். கொஞ்ச நேரத்தில் மராமத்துக்காரன் வந்து சேர்ந்தான். வெடிப்பை அடைத்துச் சரிப்படுத்தினான். அப்புறம், முனியன் சொக்காயை எடுத்துப் போட்டுக் கொண்டு, வெளியே வந்தான். வீட்டுக்காரி முனியனுக்கு நிரம்ப உபசாரம் சொன்னாள். தான் உதவி செய்ததில் முனியனுக்கும் நிரம்பச் சந்தோஷம்.

கொஞ்ச தூரம் போனதும், முனியனுடைய நண்பன் ஏழுமலை எதிரே வந்தான். இரண்டு பேருமாகச் சேர்ந்து நடந்தார்கள். பல இடங்களுக்குப் போனார்கள். ஒருவரும் வேலை தரவில்லை. உச்சி நேரமாகிவிட்டது. வயிறும் பசிக்கிறது.

"இந்த மரத்தடியில் இருந்து ஏதாவது கையிலிருப்பதைச் சாப்பிட்டுவிட்டுப் போவோமே" என்றான் ஏழுமலை.

"எனக்கும் பசிதான். ஆனால், என் பையிலே ஒரே ஒரு துண்டு ஊசல் ரொட்டிதான் இருக்கு" என்று முனியன் வருத்தமாய்ச் சொன்னான்.

"அதனால் என்ன? இருப்பதைப் பகிர்ந்து கொள்வோம். என்னிடம் ஓர் இட்டலி இருக்கு" என்றான் நண்பன்.

முனியன் தன் பையில் கையை விட்டு, ரொட்டியை எடுத்தான். என்ன ஆச்சரியம்! பையிலே பெரிய பொட்டணம் ஒன்று இருந்தது. பிரித்தான். நண்பர்கள் இருவரும் நிரம்ப ஆச்சரியம் அடைந்துவிட்டார்கள். பொட்டணத்திலே ஊசல் ரொட்டி இல்லை! அதற்குப் பதிலாக, விதம் விதமான பலகாரங்கள் இருந்தன.

இருவரும் வயிறார உண்டார்கள்.

"முனியா! உனக்கு அதிர்ஷ்டம் வந்து விட்டது. சாப்பிட்ட உடன் வெற்றிலை போடாவிட்டால் என்னமோ போல இருக்கு. என்னிடம் இரண்டே வெற்றிலைதான் இருக்கு. உன்னிடம் பாக்கு இருக்கா?"

"என்னிடம் பாக்கு ஏது? நேற்று ஒரு பாக்கு இருந்தது. இன்னும் இருக்கிறதா என்று இதோ பார்க்கிறேன்" என்றதும், முனியன் பையில் கையை விட்டான்.

கையில் தட்டுப்பட்ட காகிதச் சுருளை வெளியே எடுத்துப் பிரித்தான். மறுபடியும் ஆச்சரியந்தான்! தளிர் வெற்றிலையும், அசோகா பாக்குப் பொட்டணங்களும், புகையிலை, சுண்ணாம்பும் இருந்தன.

"என்ன, முனியா! உன் பையிலே ஏதாவது மந்திரம் இருக்கா?" என்று ஏழுமலை வியப்பாய்க் கேட்டான்.

"என்னவோ, தெரியவில்லை. எனக்கும் இது மந்திரம் போலத்தான் இருக்கு" என்றான் முனியன்.

இருவரும் வெற்றிலை போட்டுக் கொண்டார்கள்.

சென்ட்ரல் ஸ்டேஷன் வழியாய்ப் புரசவாக்கம் நோக்கி நடந்தார்கள்.

"புரசவாக்கத்திலே எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் உனக்கு ஒரு வேலை கிடைத்தாலும் கிடைக்கும். வருகிறாயா, போய்ப் பார்க்கலாம்?" என்று ஏழுமலை கேட்டான்.

"சரி. போகலாம்" என்றான் முனியன்.



★

குழாய் வெடிப்பில் விரலை வைத்து அமுக்கிப் பிடித்துக் கொண்டான்.

★

நடந்து போனால் நேரமாகி விடும். டிராம், பஸ்ஸிலே போகக் கையிலே காசில்லை. ஏழுமலை "பஸ்ஸிலே போகலாம்" என்றான். முனியனுக்கும் பஸ்ஸிலே 'ஜம்' என்று உட்கார்ந்து கொண்டு போக ஆசைதான்.

"ஏழுமலை! என்னிடம் காலணாத் தவிர, வேறு காசே இல்லை. நீ போ. நான் நடந்து வருகிறேன்" என்றான்.

"இருப்பதை எடு, அப்பா!"

முனியன் காலணாவைத் தேடினான். கையிலே எடுத்துப் பார்த்த போது, அவனுக்குத் தன் கண்ணையே நம்ப முடியவில்லை. காலணாவுக்குப் பதில் ஓர் எட்டணாப் பணம் இருந்தது.

இருவரும் சந்தோஷமாய், பஸ்ஸில் ஏறிக்கொண்டு சவாரி போனார்கள்.

"முனியா! இனி நீ ஒன்றுக்கும் பயப்படாதே. நீ நினைத்ததெல்லாம் உன் பையிலிருந்து கிடைக்கிறது—எங்கே, அதில் இன்னும் என்ன என்ன இருக்கிறதென்று பார்" என்று, ஏழுமலை சிரித்துக்கொண்டு சொன்னான்.

முனியன் பையிலிருந்ததை எல்லாம் வெளியில் எடுத்தான். பேனாக் கத்தி, பௌண்டன் பேனா முதலிய பல பொருள்கள் இருந்தன. ஒரு கடித உறையும் இருந்தது. அதில் "ம. ரங்கம் பிள்ளை, அரிசி மண்டி, மண்ணடி, மதராஸ்" என்று விலாசம் போட்டிருந்தது. முனியனுக்குச் சந்தேகம் கிளம்பிவிட்டது. ஏழுமலைக்கு விஷயம் விளங்கவில்லை.

காலையில், தான் வரும் வழியில், தண்ணீர்க் குழாய் பழுதான வீட்டில் நடந்த விவரங்களை, முனியன் ஏழுமலைக்குச் சொன்னான். அப்புறம்—

"ஏழுமலை! என் சொக்காயின் தோள்பட்டையில் தைத்திருக்கிறதா, பார்" என்றான்.

ஏழுமலை "இல்லை" என்றான். முனியனும் தன் சொக்காயை நெடுகலும் தடவிப்பார்த்தான்.

"ஏழுமலை! தப்பு! தப்பு!—பெரிய தப்புப் பண்ணிவிட்டேன். இந்தச் சொக்காய் என்னுடையதில்லை. இதில் மந்திரமுமில்லை; மாயமுமில்லை. நாம் சாப்பிட்டதெல்லாம் நிஜமான சாப்பாடுதான்—ரங்கம் பிள்ளையினுடையது இந்தச் சொக்காய். இனி என்ன பண்ணுவது?—" என்று முனியன் வருந்தினான்.

"முனியா! நீ வேண்டுமென்று திருடவில்லை. அகஸ்மாத்தாய் நேர்ந்தது. இறங்கு கீழே! மண்ணடிக்குப் போய் விவரத்தைச் சொல்லிச் சொக்காயைக் கொடுத்துவிட்டு, வீட்டுக்குப் போவோம் — புரசவாக்கத்துக்கு

இயலாத வேலை

ஸர் ராஷ்பிஹாரி கோஸ் என்ற உத்தம தேசபக்தர் ஒரு சிறந்த வக்கீலுமாவார்.

கோர்ட்டுக்குப் புதிதாய் வந்த ஒரு ஜட்ஜி, ஸர் கோஸைப் பார்த்து, "சரிதான், ஸர் ராஷ்பிஹாரி கோஸ்! எனக்குச் சட்டமல்லவோ போதிக்கிறீர்! அது இயலாது" என்று சீறினார்.

ஸர் கோஸ், மிக்க அமைதியாக, "இல்லை, பிரபுவே! அது என்னால் இயலாது" என்று கடைசி வார்த்தையை ஊன்றி அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல், ஜட்ஜி பெருமூச் செறிந்தார்.

நாளைப் போவோம்" என்றான் ஏழுமலை.

இருவரும் இறங்கி நடந்தார்கள். மண்ணடி போனபோது, இருட்டும் நேரமாகிவிட்டது.

காலையில் போன வீட்டுக்குள்ளே போனார்கள்.

"என்ன படுமோசமாயிருக்கிறதே! சொக்காய் மிகவும் கிழிந்திருக்கு. பையில் போட்ட சாமான்களைக் காணோமே! ஊசல் ரொட்டியும், காலணாவும் ஒரு பாக்கும்தான் இருக்கின்றன. யாரோ எனக்குச் சூனியம் வைத்து விட்டார்கள் போல் இருக்கிறதே!" என்று ஒருவர் இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தார்.

முனியனைக் கண்டதும் வீட்டுக்கார அம்மா "இந்த ஆள்தான் காலையிலே நீங்கள் வெளியே போயிருந்தபோது வந்து உதவி செய்தவன்" என்றாள்.

அதற்குள் முனியன், பயத்தோடு, தான் செய்த தவறுதலைச் சொல்லிச் சொக்காயைக் கழற்றிக் கொடுக்கப் போனான்.

வீட்டுக்கார ரங்கம் பிள்ளைக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்துவிட்டது.

"பயப்படாதே, அப்பா! நீ நிரம்ப நல்லவன். என் சொக்காயும் உன் சொக்காயும் ஒரே நிறமாயிருந்ததாலேயே மாறிப் போச்சு. அதனால் பாதகமில்லை. சொக்காயையும் சில்லறையையும் நீயே வைதத்துக்கொள். மற்றவைகளை இப்படி வை" என்றார் வீட்டுக்காரர்.

அவருக்கு நம்பிக்கையான ஓர் ஆள் வேலைக்குத் தேவையிருந்ததால், முனியனைத் தன் கடையிலே அமர்த்திக்கொண்டார். முனியனும் சந்தோஷமாய் வேலை பார்த்து வந்தான். ஏழுமலை சொன்னபடியே, முனியனுக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது.

★

தாயறிவாள் மகனை

ஸர் டேவிட் பேர்ட் (1757—1829) என்பவர் சிறந்த வீரர். ஆனால், விசித்திரமான குணமுடையவர். அவரும் இன்னும் பல ஆங்கில வீரரும் சிரங்கப்பட்டணத்திலே சிறை பிடிக்கப்பட்டு, இருவர் இருவராய், ஒருவர் முதுகு ஒருவர் முதுகில் படும்படி, விலங்கால் பிணைக்கப்பட்டிருப்பதாக, இங்கிலாந்துக்குச் செய்தி எட்டியது.

அந்தச் செய்தியைக் கேட்டதும், பேர்ட் என்பவரின் தாய், "அட பாவமே! என் மகனின் முதுகோடு பிணைக்கப்பட் டிருப்பவன் என்ன பாடு படுகிறானோ! அவனைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்றாள்!

சொந்தமும் கம்பெனியும்

இந்தியாவில் பிரஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியை நிர்வகித்த லா போர்டொன்னேஸ் என்பவர், பாரிசுக்குத் திரும்பியபின், அவர்மீது குற்றம் சுமத்தி விசாரித்தார்கள். விசாரணையின்போது, கம்பெனியின் டைரக்டர்களில் ஒருவர் அவரைக் கேட்டார்: "உமது நிர்வாகத்தின் கீழ் உம் சொந்த வியாபாரங்கள் மட்டில் செழித்திருக்கின்றன; கம்பெனியின் வியாபாரங்களோ நஷ்டப்பட் டிருக்கின்றன. இதன் காரணம் என்ன?"

போர்டொன்னேஸ் சொன்ன பதிலாவது: "என் சொந்த வியாபாரங்களை என் சொந்த யோசனைகளின்படி நடத்தினேன். கம்பெனியின் வியாபாரங்களையோ உங்கள் யோசனைகளின்படியே நடத்தினேன். இதுதான் அதன் காரணம்."

பாலர் பாட்டு

★ கிழவி ★

கண்க ளிரண்டும் தெரியவில்லை, இரு
கைகளும் கண்களா யாச்சுதப்பா;
திண்ணையை விட்டு நகர்வதற்கும் என்றன்
தேகத்தில் சத்துக் கிடையாது.

மேனி சுருங்கி மெலிந்து வெளுத்தது
மெத்தவும் காய்ந்த சருகாச்சு;
கூனிக் குறுகிக் குலுங்கிப் பழுத்துடல்
கூடா யிருக்குது கண்டிடுவாய்.

"கூனற் கிழவியைப் பாருங்கடோ" என்று
கூக்குரல் செய்கிறார் குட்டிப்படை;
"தேன்குழல் முறுக்குத் தித்திக்கும் கரும்பு
தின்றிடு, இந்தா" எனச் சொல்லுவார்.

"பாட்டி நடை யிது பாரு" என்று சிலர்
பாவனை செய்து நடப்பார்கள்;
"கேட்டியாடா அவள் கீச்சுக்குரலெ"ன்று
கேலியாகப் பேசிக் காட்டிடுவார்.

"பஞ்சுத் தலை யிந்தப் பாட்டிக்கு என்னமாய்ப்
பால்போல் இருக்குது!" என்றிடுவார்;
"கொஞ்சங்கூடக் காது கேளா"தென்பார்; "இங்கே
குண்டு விழுந்தாலும் கேளா"தென்பார்.

இந்த மாதிரிக் குதூகலமாகவே
ஏளனம் செய்கிறார் சின்னவன்கள்;
பந்துபோல் துள்ளிடும் பாலர்கள் சொல்லிந்தப்
பாட்டிக் கமுதா யிருக்குதப்பா.

என்னைத் தேடிவர யாரேயிருக்கிறார்
இந்தக் குழந்தைகள் இல்லாவிட்டால்?
சின்னஞ் சிறுசுகள் சூழ்ந்து விளையாடச்
செய்திருக்க வேணும் நல்லதவம்.

இந்த உடலினைப் பெற்றபெரும்பலன்
இத்தனையும் கண்டு வாழ்ந்திடவே;
சந்ததிகள் காணச் சந்தோஷம் பொங்குது;
சாமி, இவர்களைக் காப்பாற்று!

— 'சாமி சரணன்'

புத்தக உலகம்

சோவியத் ருஷ்யா: ஆசிரியர்: வ. சாமிநாத சர்மா. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், வடக்கு வெளி வீதி, மதுரை. விலை ரூ. 3—8—0.

இன்று, ஓரளவு உலகின் ஆதர்ச நாடாக விளங்குவது சோவியத் ருஷ்யா. அதன் அரசியலும் சமூக வாழ்க்கையும் எப்படி நடக்கின்றன என்பதை நாம் அறிந்தோமானால், அரக்க நாஜி வெறியர்களை அது விரட்டியடிக்கும் அற்புதத்தின் ரகஸ்யம் நமக்குப் புலனாகும். சோவியத்தில் முடியரசழிந்து, சமதர்மக் குடியரசு தோன்றிய வரலாறும், தற்போது அதன் பற்பல வாழ்க்கைத் துறைகளும் எந்நிலையில் இருக்கின்றன என்பதும், இந்நூலில் தேர்ந்த தெளிந்த நீரோட்டம் போன்ற லாகவமான நடையில் ஆசிரியர் சர்மாவால் அழகாக விவரிக்கப் பட்டிருக்கின்றன. நேர்த்தியான புகைப்படங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இம்மாதிரி தமிழ் நூல்களில் அநேகமாய்க் காணக் கிடைக்காத பொருட் குறிப்பும், சோவியத் அரசியல் அமைப்பைச் சுலபமாய் விளக்கும் சூழுனவும் முக்கியமாய்க் குறிப்பிடத் தக்கன. நேர்த்தியான கதர் பைண்டு. கண்கவரும் அமைப்பு.

* *

நடராஜ உபாசனை: ஆசிரியர்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலயம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை அணா. 4.

சிதம்பரத்தில் திருநடம்புரியும் நடராஜப் பெருமான், உள்ளங்கவரும் சிற்பச் செல்வம்; உலக தத்துவத்தைச் சுட்டிக்காட்டும் வேதாந்த ரகஸ்யம்; பக்தர்களின் மனமுருக்கும் பரமாத்ம சொரூபம். அந்தச் சிதம்பரேசனைத் துதி செய்ய விரும்பும் தமிழர்கள், பொருள்புரியாத வடமொழியின் உதவியின்றி தமிழிலேயே வழிபாடு செய்யுமாறு, முறையாக வணக்கம், அர்ச்சனை, தீபாராதனை ஆகிய கிரியைகளுக்கேற்ற அழகிய பாடல்களைப் பாடித் தந்திருக்கிறார் சுவாமிகள். இனிமையான பாடல்கள்.

* *

இந்துமதி: ஆசிரியர்: சரத்சந்திரர். மொழிபெயர்த்தவர்: அ. கி. ஜயராமன். வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை. ரூ. 0—10—0.

தந்தை பட்ட கடனால் தவிக்கும் கணவன்; அவனுக்கு வாழ்க்கைப்பட்ட புணக்காரக் குடும்ப நவநாகரிகப் பெண் — இவ்விருவரையும் பற்றிய ஒரு காதல் கதை. புருஷன் ஒரு கதாசிரியன். ஆனால், வெற்றி காணாதவன். மனைவி ஆடம்பர வாழ்க்கையிலும் நகைகளிலும் மோகங்கொண்டு தொல்லை செய்கிறாள். மனஸ்தாபம் வருகிறது. இறுதியிலே, தன்னை எந்த நகைகள் தன் கணவனிடமிருந்து பிரித்து வைத்தனவோ அவைகளை விசி எறிந்துவிட்டு, கணவனைச் சேர்கிறாள் மனைவி. இம்மாதிரி காதல் மனக் குழைவுகளை வர்ணிப்பதில் கைதேர்ந்தவர் சரத் சந்திரர். இந்நூலிலும் அவர் கைத்திறன் நன்கு விளங்குகிறது. மொழிபெயர்ப்பு மிகவும் சரளமாயிருக்கிறது.

* *

ஆண்டாள்: ஆசிரியர்: பி. ஸ்ரீ. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை ரூ 1—0—0.

வைஷ்ணவர்களின் புனிதத் தமிழ் நூலான திருவாய்மொழி பாடிய ஆழ்வாராதியரில் ஒரே பெண் ஆசிரியையாகிய ஆண்டாளின் திவ்ய சரித்திரம் இது. ஆண்டாளின் பக்திப் பெருக்கும், கவிதைகளும் அற்புதமானவை. பகவானையே தன் மாலையிட்ட கணவனாய் மதித்துச் 'சூடிக்கொடுத்த நாச்சியார்' அவள். அது ஓர் ஆச்சரியமும் உருக்கமுமான வரலாறாகும். அந்த வரலாற்று நிகழ்ச்சிகளை, நவீன நாவல்களைப்போல், தமது மனோதர்மத்தைக் கொண்டு வர்ணிக்கிறார் பிரபல ஆசிரியர் பி. ஸ்ரீ. அவருடைய நடையில் புதுமையும் பழமையும் வழக்கம் போலவே சங்கமமாகின்றன. படிக்க இன்பமாயிருக்கிறது.

* *

ராஜா பர்த்ருஹரி: ஆசிரியர்: திரு. டி. கே. முத்துசாமி. வெளியிட்டோர்: டி. கே. எஸ். சகோதரர், ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா, மதுரை. விலை ரூ. 0—12—0.

நாடக மேடையில் நடிப்பதற்காகத் தாங்களே தயாரித்து நடித்துவரும் நாடகத்தை இவ்வாறு புத்தக உருவில் வெளியிட்டுள்ளார்கள். எனவே, தற்கால நாடக மேடையில் காணப்படும் குணங்குறைகள், தர்க்கப் பாட்டுகள், விகட விநோதங்கள் எல்லாம் இதிலும் இருக்கின்றன. தாசியின் மோகவலையில் சிக்கிய பர்த்ருஹரி, கடைசியிலே குருநாதன் அருளால் கண்விழிப் படைகிறார். புகழ்மிக்க பர்த்ருஹரி சதகத்தைச் சிருஷ்டித்த இலக்கிய கர்த்தாவுக்கு, இந்த நாடகக் கதை எவ்வளவு தூரம் பெருமை தருகிறது, நீதியிழைக்கிறது என்று மட்டில் நம்மால் சொல்ல இயலாது.

ஸந்தியா : ஆசிரியர் : சரத்சந்திரர். மொழிபெயர்த்தவர் : அ. கி. ஜயராமன். வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி. விலை ரூ. 1—4—0.

உயர் ஜாதிப் பெண் ஒருத்திக்கும், தாழ்ந்த ஜாதி இளைஞன் ஒருவனுக்கும் காதல் உண்டாகிறது. ஆனல், சமூகம் அது பூர்த்தியாக விடுமா? பெண் மற்றொருவனை மணக்க மணக்கோலம் பூணுகிருள். அந்தச் சமயத்தில், திடுக்கிடும் உண்மை ஒன்று வெளியாகிறது. நிலைமை தலைகீழாகிறது. அந்த இளைஞனையும் விட இழிந்த ஜாதியினளாகிருள் பெண். பிறகு, இவள் அவனிடம் போய்க் கெஞ்சுகிருள். அவன் தயங்குகிருன். பின்பு, அவன் மனங்குழைந்து இவளிடம் வருகிருன். இவள் மறுத்து அகல்கிருள். இந்தச் சோகக் கதையை, மிக ருசிகரமாக எழுதியிருக்கிருர் சரத் பாபு. மொழிபெயர்ப்பு நன்ருயிருக்கிறது.

* *

அநுராதா – ஹரிலக்ஷ்மி : ஆசிரியர் : சரத்சந்திரர். மொழிபெயர்த்தவர் : கு. ப. ராஜகோபாலன். வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி. ரூ. 1—0—0.

இதிலே இரு கதைகள் இருக்கின்றன. 'அநுராதா' வழக்கமான காதல் கதை. 'ஹரிலக்ஷ்மி' தன் செருக்கால் பணக்காரியின் கோபத்துக்காளான ஓர் ஏழைப் பெண் படும் பாட்டை விளக்கும் சோகக் கதை. சரத் சந்திரரின் சகல கதைகளிலும் பெருமையும் கணக்கூடிய உள்ளக் கிளர்ச்சிகளும், மன இளக்கமும் இந்த இரு கதைகளிலும் போதிய அளவு இருக்கின்றன. படிப்பதற்கு ரஸமானவை. மொழிபெயர்ப்பாளர், தெளிவாகவும் சுவையோடும் தமது கடமையைச் செய்திருக்கிருர்.

* *

நாஜி ஜெர்மனியின் மனமும் முகமும் (ஆங்கிலம்) : தொகுப்பாசிரியர் : புரொபஸர் என். காங்குலி, ஸி. ஐ. இ., பி. எச். டி. வெளியிட்டோர் : ஜான் மர்ரே, அல்பேமார்லி தெரு, டபிள்யூ, லண்டன். விலை 5 ஷில்லிங்.

நாஜித் தலைவர்களின் பிரசங்கங்கள், கட்டுரைகள் முதலியவற்றை முடிந்தவரையில் 1937-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து சேகரித்து, அவற்றினின்றும் ஏராளமான வசனங்களைக் கொய்து, பல தலைப்புக்களின்கிழ் வரிசையாக இத்தொகுத்திருக்கிருர் ஆசிரியர். கிறிஸ்தவ நாகரிகத்தையும் சுதந்தர லட்சியங்களையும் அழித்து, ஜெர்மன் சாம்ராஜ்யம் ஒன்றை ஸ்தாபிப்பதே நாஜிகளின்பேராசை என்பதை, இந்தப் புத்தகம் தெள்ளத் தெளிய அம்பலம் செய்து விடுகிறது. நாஜிகளைப்பற்றிய எத்தனையோ நூல்களைப் படிப்பதைவிட, முற்றிலும் அவர்களுடைய வாக்குகளைக்கொண்டே அவர்களுடைய மனதையும் செயல்களையும் விளக்கிக்காட்டும் இந்த ஒரு நூலைப் படித்தால் போதும். இந்த யுத்தத்தின் உண்மையான தன்மையை—உலகப் புரட்சிகரமான தன்மையை—அறிந்து கொள்ள விரும்புவோர் படிக்கவேண்டிய ஒரு நூல்.

★

88832
சென்னை-600 003

கற்பனைக் கதைகள்

மனிதர்களிடம் மிக அதிகமான செல்வாக்கும், மிக உண்மையான செல்வாக்கும் உடையவை, கற்பனைக் கதைகளே. வாசகர் பின்னல் தவறென்று காணக்கூடிய ஓர் உபதேசத்திலே அவரை அவை மூளையடிப்பதில்லை; பின்னல் மறக்க வேண்டிய படிப்பினை யொன்றை அவருக்கு அவை போதிப்பதுமில்லை. மனித வாழ்க்கையில் காணும் படிப்பினைகளையே, அவை திரும்பவும் கூறுகின்றன; புதிய முறையில் நிரல்படுத்துகின்றன; தெளிவு செய்து விளக்கின்றன. அவை நம்மிடமிருந்தே நம்மைக் கட்டவிழ்த்துவிட்டு, பிறரிடம் பரிச்சயம் கொள்ளுமாறு நம்மை நிர்ப்பந்திக்கின்றன. அனுபவமென்ற சிலந்தி வலையை அவை நமக்குக் காட்டுகின்றன. ஆனல், அதை நாம் சுயமே பார்க்கக்கூடிய விதத்திலல்ல; ஓர் ஆச்சரியமான மாற்றத்தோடேயே, அப்படிக் காட்டுகின்றன—ராட்சஸத்தனமாய் நம்மை அடியோடு விழுங்கிவிடும் தான் என்ற அஹங்காரம் இருக்கிறதே அதை அழித்துவிட்டே, அப்படிக் காட்டுகின்றன.

—ஆர். எல். ஸ்டிவென்ஸன்.

400 மைல் பிரயாணம் செய்தார்கள்

நண்பர்: (பிரயாணம் செய்தவரைப் பார்த்து) என்ன ஸார்! பிரயாணம் எப்படி?

பிரயாணி: பிரயாணம் என்னவோ நிரம்பச் சிரமமானது தான். ஆனாலும், **அசோகா பாக்குத் தூள் இருக்கும்** போது 400 மைல் அல்ல, 4000 மைல் வேண்டுமானாலும் பிரயாணம் செய்துவிடுவேன், ஸார். அசோகா என்ன உற்சாகம் தருகிறது தெரியுமா!

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர் நெ. 1506

அசோகா

இன்னும் படிக்கவில்லையா?

குழந்தை ராமு — 0 8
ஒரு சமூக நாடகம்—ரா. ஸ்ரீ. தேசிகன், M.A.
(புதிய கட்டிடம்)

கண்ணன் என் கவி — 0 12
பாரதியின் கவிதையும் இலக்கிய பீடமும்—
கு. ப. ராஜகோபாலன், பெ. கோ.
சுந்தரராஜன். (புதிய கட்டிடம்)

மது விலக்கு மங்கை — 0 12
பிரபல அமெரிக்க நாவலாசிரியர் அப்டன்
சிங்க்ளேர் (புதிய கட்டிடம்)

கீதா போதனை — 0 3
மகாத்மா காந்தி

இந்தியப் பொருளாதார நூல் — 2 0
தி. சு. அவினாசிலிங்கம்

இனி நாம் செய்யவேண்டுவது யாது? — 1 0
லியோ டால்ஸ்டாய்

அரசியல் ஞாபகங்கள் — 1 0

சிறை அனுபவங்கள் — 1 0

தென் ஆப்ரிக்கா சத்தியாக்கிரகம் — 1 0
(மகாத்மா காந்தி)

(தபாற் செலவு வேறு)

சக்தி காரியாலயம்

வடக்கு வெளி வீதி, மதுரை

குமரி மலர்

மாதம் ஒரு புத்தகம்

முதலாவது புத்தகம் மார்ச் மூன்ருவது வாரத்தில் வெளிவருகிறது

டி. கே. சி., குகப்ரியை, டி. எஸ். சொக்கலிங்கம், தேசிக விநாயகம் பிள்ளை, வெ. சாமிநாத சர்மா, சுத்தானந்தபாரதி, பாரதிதாஸன், எஸ். குருசாமி, த. நா. குமாரசாமி, கி. சந்திரசேகரன், ஏ. ஜி. வேங்கடாச்சாரி, ஏ. கே. செட்டியார் முதலியவர்கள் முதலாவது புத்தகத்தில் எழுதுகின்றனர்.

புத்தகம் விலை ரூ. ஒன்று

தபாற் செலவு தனி

ரூபாய் பன்னிரண்டு முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு, பன்னிரண்டு புத்தகங்கள் — வெளி வரும்பொழுது — தபாற் செலவின்றி அனுப்பிக்கப்பெறும்.

ஏ. கே. செட்டியார்

கனகஸ்ரீநகர்

கதீட்ரல் ரோடு, P.O., சென்னை

மதராஸ் டி. சி. என்.
கோல்டன் மெடல்
ஜ்வல்லரி மார்ட்

பலவித அழகிய

வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிடப் பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்தனவல்ல.

கறுக்காது. 2-வருஷம் உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2" அகலமும், அதற்கு மேற்பட்டதும் ஜதை	3 12 0
மத்திய சைஸ் 1¾" முதல் 2"-க்குள் ஜதை	3 2 0
குழந்தை சைஸ் 1¾"-க்கு உட்பட்டது ஜதை	2 8 0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணு 8

எமது கேட்லாக் இனம்

டி. சி. நாகலிங்கப்பா & கோ.,
280, வால்டாக்ஸ் ரோட்,
பார்க் டவுன், மதராஸ்

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர்

ம. ஸ்ரீநிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட்,
ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

மதுவிலக்கு மங்கை

கண்ணன் என் கவி

ஒவ்வொன்றும் விலை அணு 12

சக்தி காரியாலயம், மதுரை

வெளிவந்துவிட்டன !

டால்ஸ்டாய் கட்டுரைகள்

மொழிபெயர்ப்பாளர்: கா. இராமநாதன் செட்டியார்

கொடும்போர் நடந்துவரும் இக்காலத்திலே, ருஷிய மக்கள் மட்டுமேயன்றி, உலகமக்கள் அனைவரும் ருஷியஞானி டால்ஸ்டாயின் நூல்களை ஊன்றிப் படித்து வருகிறார்கள். அவர் கட்டுரைகளிலே சிறந்த ஐந்து கட்டுரைகளை இந்த மலரிலே வெளியிட்டிருக்கிறோம். விலை ரூ. 1—8—0

★

யான் பெற்ற இன்பம்

ஆசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.

இலக்கியம் ஒரு கலை. கவிஞன் தான் உணர்ந்து அனுபவித்த உண்மைகளைச் சொல்லிலே அமைக்கிறான்; இவை இலக்கியமாகின்றன. இலக்கியத்தைக் கவிஞன் உள்ளத்தோடு ஒன்றி அனுபவித்தால் ஆனந்தமேற்படுகிறது; உள்ளம் தூய்மை பெறுகிறது. வாழ்க்கையும் திருந்துகிறது. இம்முறையிலே அன்பர் மு. அருணாசலம், இலக்கியத்தைக் கவிஞன் கண் கொண்டு பார்த்து ஆனந்திப்பவர். விலை ரூ. 1—8—0

★

எப்படி எழுதினேன்?

ஆசிரியர்: தி. ஜ. ர.

'இலக்கணம் பெரிதா, இலக்கியம் பெரிதா? தர்மம் பெரிதா, வாழ்வு பெரிதா? சாஸ்திரம் பெரிதா, சங்கீதம் பெரிதா?' இதிலே ஏற்பட்டிருக்கும் மயக்கமே பெரும் தடுமாற்றத்தை நம்மிடம் உண்டாக்கி யிருக்கிறது. ஒவ்வொரு கலை, சாஸ்திரங்களிலுமே இந்தக் குளறுபடி நிலவி யிருக்கிறது. இந்தக் குளறுபடி தீரவேண்டுமென்று வலியுறுத்துகிறார் ஆசிரியர். விலை ரூ. 1-4-0

தபாற் செலவு வேறு

சக்தி காரியாலயம்

வடக்கு வெளி வீதி, மதுரை

*ஸ்டார்டிங் அதிசுலபம்:

சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.

*மும்முறை வடிகட்டும் வசதி:

கியாஸை வேறெந்த பிளாண்டையும் விட நன்குக சுத்தப் படுத்துகிறது.

*இலவச ஸர்விஸ்:

ஓட்டும்போது சில்லரை தொந்தரவுகள் இருந்தால், டிஸ்ட்ரிப்யூட்டர்கள் சரிப் படுத்தித் தருவார்கள்.

*அதிக பளுவின்மை:

சரிசமமான கனம் நிரவப்பட் டிருப்பதால் டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.

*நேர்த்தியான தோற்றம்:

அழகிய, ஒழுங்கான அமைப்பு.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாகக் காண்பிக்கும்படி
டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

இந்தியா முழுவதிலும் மோட்டார் சொந்தக்காரர்களில் 4000 பேருக்கு மேல் T. V. S. கியாஸ் பிளாண்டையே உபயோகிக்கின்றனர். காரணம் என்ன? மோட்டார் வைத்துக்கொள்ளும் செலவு நிதானப் படுத்துவதற்கு இதுவே சரியான வழி என்று அவர்கள் உணர்ந்து விட்டார்கள். அமைப்பிலும் உழைப்பிலும் மிகவும் நவீனமான சீர்திருத்தங்கள் யாவும் T. V. S. பிளாண்டில் இருக்கின்றன. மோட்டாரில் இந்த பிளாண்டை இணைப்பதும் ஓட்டுவதும் சுலபமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல. பிளாண்டை வைப்பதிலுள்ள செலவு முழுதும் சொற்ப காலத்துக்குள்ளாகவே ஏற்படும். சிக்கனத்தால் ஈடு செய்யப் படுகிறது. T. V. S. பிளாண்டின் சில விசேஷ அம்சங்கள் மேலே தரப் பட்டுள்ளன.

T. V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ்

மதுரை, சென்னை

ஊக்கத்துக்கு உயர்துணைவன்.



எல்லோராவில் கைலாசநாதர் கோவில் மதில்களில் உள்ள சிற்ப நயங்களைக்கண்டு நீங்கள் அதிசயப்படுகிறீர்கள். அதற்கு ஊக்கமளித்த சக்தி எது என்பது உங்களுக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும். பெண்மையின் லக்ஷியம் தெய்வ களையை அங்கே பெருகிறது. நமது அன்றாட வாழ்விலும் அது மானுஷிக எல்லையை மீறுகிறது. பெண் அன்போடும் பாசத்தோடும் பணிவிடை செய்வதைப்போல் அதிசயம் வேறு என்ன? நாள் பூராவும் உழைத்துவிட்டு சோர்வடைந்துவரும் கணவனுக்கு ஒரு கோப்பை தேயிலைபானம் தயாரித்துக் கொடுப்பதுபோல் திருப்தி அளிப்பது வேறு என்ன? அன்பு ததும்பும் கோப்பை அவனுக்கு சோர்வை அகற்றுகிறது. அவன் மனமும் கலகலக்கிறது.

★

"நித்திய கர்மா" என்ற எங்கள் புது சித்திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பருகலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள் பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தியத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டீ மார்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

குடும்பத்திற்கு ஏற்ற ஒரே பானம்
இந்தியன் டீ

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 202

Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited, Devakottah Road, Senjai, Karaikudi. Joint Editor: T. J. Ranganathan.